# அரையாண்டு

# அரசிறை நிலைப்பாட்டு அறிக்கை

# 2024

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சு
இலங்கை

# அரையாண்டு

# அரசிறை நிலைப்பாட்டு அறிக்கை - 2024

2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, அரசிறை முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்க
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகளின்
கௌரவ அமைச்சர்

**2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ்**

**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் கௌரவ அமைச்சரினால் வெளியிடப்பட்ட**

# அரையாண்டு அரசிறை நிலைப்பாட்டு அறிக்கை

2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, அரசிறை முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் நியதிகளின் படி நிதி அமைச்சரானவர் வருடத்தின் ஜூன் மாதத்தின் இறுதித் தினத்தில் அரசிறை நிலைப்பாட்டு அறிக்கையினை பொது மக்களுக்கு சமர்ப்பிக்கவும் அதனைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கும் கேட்கப்பட்டுள்ளார்.

இந்த அறிக்கையின் நோக்கம் அரசாங்கத்தின் அரசிறை உபாயத்தின் பிரகாரம் அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையைப் பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதாகும்.

அறிக்கையின் உள்ளடக்கமானது 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் அரசாங்கத்தின் வருமானம், செலவினம், காசுப்பாய்ச்சல் செயற்பாடுகள் மற்றும் கடன் பெறுகைகளின் செயலாற்றுகைகளைக் கொண்டுள்ளது. மேலும் இவ்வறிக்கை 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கான தற்காலிக வரவு செலவுத்திட்டத்தின் வெளிப்பாடு, பேரினப் பொருளாதார செயற்திறன்கள், விலை மேம்பாடுகள், வெளிநாட்டு நிதி, அரசாங்கத்தின் படுகடன், அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் அரசுடமை வணிகத் தொழில் முயற்சி நிறுவனங்களின் செயலாற்றுகைகளை கிடைத்த தகவல்களுக்கேற்ப இற்றைப்படுத்தப்பட்டு வழங்குகின்றது.

# பொருளடக்கத்தின் அட்டவணை


பக்கம்

**அத்தியாயம் 1 பொருளாதாரப் பார்வை**

| | | |
|---|---|---|
| 1.1 | மேன்நோக்கு | 01 |
| 1.2 | பணவீக்கம் | 02 |
| 1.3 | பணம் மற்றும் கடன் | 03 |
| 1.4 | பங்குச் சந்தை | 04 |
| 1.5 | வெளிநாட்டுத் துறையின் அபிவிருத்திகள் | 04 |
| 1.6 | உலகளாவிய பொருளாதார முன்நோக்குகள் | 07 |

**அத்தியாயம் 2 அரசிறை அபிவிருத்திகள்**

| | | |
|---|---|---|
| 2.1 | மேன்நோக்கு | 13 |
| 2.2 | அரசாங்க வருமானம் | 15 |
| 2.3 | அரசாங்க செலவினம் | 26 |
| 2.4 | பொது திறைசேரியின் காசுப்பாய்ச்சல் செயலாற்றுகை | 32 |
| 2.5 | அரச படுகடன் முகாமைத்துவம் | 33 |

**அத்தியாயம் 3 அரசுடைமை தொழில்முயற்சிகளின் செயலாற்றுகை**

| | | |
|---|---|---|
| 3.1 | மேன்நோக்கு | 37 |
| 3.2 | பிரதான பத்து அரசுடைமை வணிகத் தொழில் முயற்சி நிறுவனங்கள் பற்றிய மீளாய்வு | 37 |

**அத்தியாயம் 4 வெளிநாட்டு நிதியளிப்பு**

| | | |
|---|---|---|
| 4.1 | மேன்நோக்கு | 45 |
| 4.2 | வெளிநாட்டு நிதியுதவி உறுதிமொழிகள் | 45 |
| 4.3 | வெளிநாட்டு நிதி வழங்கல் மற்றும் பயன்பாடு | 45 |
| 4.4 | உறுதியளிக்கப்பட்டு வழங்கப்படாத இருப்பு | 47 |
| 4.5 | வெளிநாட்டு கடன் இருப்பு மற்றும் வெளிநாட்டு கடன் சேவைக் கொடுப்பனவுகள் | 48 |

## பிரதான பொருளாதார குறிகாட்டிகள்

| குறிகாட்டிகள் | காலம் | அலகு | பெறுமதி | |
|---|---|---|---|---|
| | | | 2023 | 2024 (தற்காலிக) |
| **மெய்த்துறை** | | | | |
| பொருளாதார வளர்ச்சி | முதலாம் காலாண்டு | % | -10.7 | 5.3 |
| விவசாயம் | முதலாம் காலாண்டு | % | 1.6 | 1.1 |
| கைத்தொழில் | முதலாம் காலாண்டு | % | -24.3 | 11.8 |
| சேவைகள் | முதலாம் காலாண்டு | % | -4.6 | 2.6 |
| பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) (2021=100) | மே மாத இறுதியில் | % | 25.2 | 0.9 |
| வேலையின்மை வீதம் | வருடாந்தம் | % | 4.7 | த.இ. |
| தொழிற்படை பங்கேற்பு வீதம் | வருடாந்தம் | % | 48.6 | த.இ. |
| **அரசிறைத் துறை** | | | | |
| வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை | சன – ஏப் | ரூபா. மில். | -824,256 | -361,101 |
| மொத்த வருமானம் - மானியங்கள் உள்ளடங்கலாக | சன – ஏப் | ரூபா. மில். | 821,346 | 1,218,065 |
| வரி வருமானம் | சன – ஏப் | ரூபா. மில். | 742,578 | 1,117,762 |
| வரியல்லா வருமானம் | சன – ஏப் | ரூபா. மில். | 77,493 | 98,268 |
| மொத்தச் செலவினம் | சன – ஏப் | ரூபா. மில். | 1,645,602 | 1,579,166 |
| மீண்டெழும் செலவினம் | சன – ஏப் | ரூபா. மில். | 1,484,984 | 1,419,264 |
| அரசாங்க முதலீடு | சன – ஏப் | ரூபா. மில். | 177,903 | 165,335 |
| அரசாங்கப் படுகடன் | திசெ. மாத இறுதியில் | ரூபா. பில் | 28,695.9 | த.இ. |
| **வெளிநாட்டுத் துறை** | | | | |
| ஏற்றுமதிகள் | சன – ஏப் | ரூபா. மில். | 3,846 | 4,056 |
| அதில் விவசாய ஏற்றுமதிகள் | சன – ஏப் | ரூபா. மில். | 792 | 828 |
| கைத்தொழில் ஏற்றுமதிகள் | சன – ஏப் | ரூபா. மில். | 3,036 | 3,210 |
| புடவை மற்றும் ஆடைகள் | சன – ஏப் | ரூபா. மில். | 1,617 | 1,570 |
| ஏனையவை | சன – ஏப் | ரூபா. மில். | 1,419 | 1,640 |
| இறக்குமதிகள் | சன – ஏப் | ரூபா. மில். | 5,325 | 5,833 |
| நுகர்வுப் பொருட்கள் | சன – ஏப் | ரூபா. மில். | 949 | 1,059 |
| இடைநிலைப் பொருட்கள் | சன – ஏப் | ரூபா. மில். | 3,601 | 3,779 |
| அதில் பெற்றோலிய உற்பத்திகள் | சன – ஏப் | ரூபா. மில். | 1,635 | 1,530 |
| முதலீட்டுப் பொருட்கள் | சன – ஏப் | ரூபா. மில். | 770 | 991 |
| வர்த்தக மீதி | சன – ஏப் | ரூபா. மில். | -1,479 | -1,777 |
| உல்லாசப் பயணிகளின் வருகை | சன - மே | எண்ணிக்கை | 524,486 | 896,779 |
| சுற்றுலாத் துறை வருமானம் | சன - மே | ஐ.அ.டொ.மில். | 752 | 1,406 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | சன - மே | ஐ.அ.டொ.மில். | 2,347 | 2,624 |
| மொத்த சென்மதி நிலுவை | சன – ஏப் | ஐ.அ.டொ.மில். | 883 | 1,288 |
| மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் | மே மாத இறுதியில் | ஐ.அ.டொ.மில். | 3,491 | 5,421 |
| செலாவணி வீதம் (இறுதி மாதம்) | மே மாத இறுதியில் | ஐ.அ.டொ. இற்கான ரூபா | 295.5 | 301.8 |
| செலாவணி வீதம் (மாதாந்த சராசரி) | சன - மே | ஐ.அ.டொ. இற்கான ரூபா | 310.2 | 299.7 |
| **நாணயத்துறை** | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் (SDFR) | மே மாத இறுதியில் | % | 15.50 | 8.50 |
| துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் (SLFR) | மே மாத இறுதியில் | % | 16.50 | 9.50 |
| நியதிச்சட்ட ஒதுக்கு தேவைப்பாடு (SRR) | மே மாத இறுதியில் | % | 4.00 | 2.00 |
| வர்த்தக வங்கிகளின் நிறையேற்றப்பட்ட சராசரி புதிய கடன் வீதம் (AWNLR) | ஏப்ரல் மாத இறுதியில் | % | 23.09 | 12.67 |
| வர்த்தக வங்கிகளின் நிறையேற்றப்பட்ட சராசரி கடன் வீதம் (AWLR) | ஏப்ரல் மாத இறுதியில் | % | 17.87 | 13.14 |
| திறைசேரி உண்டியல்களின் விளைவு வீதம் (91 நாட்கள்) | ஏப்ரல் மாத இறுதியில் | % | 25.74 | 9.61 |
| திறைசேரி உண்டியல்களின் விளைவு வீதம் (364 நாட்கள்) | ஏப்ரல் மாத இறுதியில் | % | 23.00 | 9.99 |
| நாணய வழங்கல் வளர்ச்சி ($M_2b$) | ஏப் 2024/ ஏப் 2023 | % | 3.7 | 8.3 |
| தனியார் துறை கடன் வளர்ச்சி | ஏப் 2024/ ஏப் 2023 | % | -8.6 | 4.1 |

## இலங்கை : தெரிவு செய்யப்பட்ட சுட்டிகள்

| குறிகாட்டிகள் | காலம் | அலகு | பெறுமதி |
|---|---|---|---|
| **மின்சாரம்** | | | |
| மின் விநியோக மட்டம் | 2016 | % | 99.3 |
| **நீர்** | | | |
| பாதுகாப்பான குடிநீரைப் பெறுவதற்கான அடைவு | 2023 | சனத்தொகை % | 97.3 |
| குழாய் நீரைப் பெறுவதற்கான அடைவு | 2023 | சனத்தொகை % | 61.6 |
| **வீதிகள்** | | | |
| வீதி அடர்த்தி | 2023 | கி.மீ / கி.மீ.2 | 019 |
| வீதிகளின் மொத்த நீளம் | 2023 | கி.மீ. | 1 44,967 |
| **தொடர்பாடல்** | | | |
| செல்லிடத் தொலைபேசி உள்ளடங்கலாக தொலைபேசிக்கான அடர்த்தி | 2023 | ஒவ்வொரு 100 பேருக்கு | 137.0 |
| இணையத்தளத்திற்கான அடைவு | 2023 | ஒவ்வொரு 100 பேருக்கு | 103.8 |
| **கல்வி** | | | |
| **பொதுக் கல்வி** | | | |
| ஆரம்ப பாடசாலைகளில் இணையும் விகிதம் | 2023 | % | 85.1 |
| மாணவர் / ஆசிரியர் விகிதம் (அரசாங்க பாடசாலைகள்) | 2023 | எண்ணிக்கை | 16.8 |
| எழுத்தறிவு வீதம் (சராசரி) | 2021 | % | 93.3 |
| கணினி அறிவு வீதம் | 2023 | % | 39.5 |
| **பல்கலைக்கழக கல்வி** | | | |
| மாணவர் / ஆசிரியர் விகிதம் | 2023 | எண்ணிக்கை | 22.5 |
| வயது குறிப்பீடு செய்யப்பட்டு இணையும் விகிதம் (வயது 19 - 22 வருடங்கள்) (அ) | 2023 | % | 9.9 |
| **சுகாதாரம்** | | | |
| அரச வைத்தியசாலைகள் | 2023 | எண்ணிக்கை | 619 |
| அரச வைத்தியசாலை கட்டில்கள் (ஆ) | 2023 | எண்ணிக்கை | 89,786 |
| வைத்தியசாலை கட்டில்கள் | 2023 | ஒவ்வொரு 1,000 பேருக்கு | 4.1 |
| நபர்களுக்கான வைத்தியர் | 2023 | எண்ணிக்கை | 985 |
| **சனத்தொகை** | | | |
| சனத்தொகை அடர்த்தி | 2023 | சதுர கி.மீ. ஆட்கள் | 351 |
| சனத்தொகை வளர்ச்சி | 2023 | % | -0.6 |
| பிறப்பில் ஆயுள் எதிர்பார்க்கை | 2017 | வருடங்கள் | 75.5 |
| சிசு மரண வீதம் | 2019 | 1000 பிறப்புகளுக்கு | 7.4 |
| தாய் மரண வீதம் | 2022 | 1000 பிறப்புகளுக்கு | 22.6 |
| செப்பமற்ற பிறப்பு வீதம் | 2023 | ஒவ்வொரு 1000 பேருக்கு | 11.2 |
| செப்பமற்ற இறப்பு வீதம் | 2023 | ஒவ்வொரு 1000 பேருக்கு | 8.2 |
| தங்கி வாழ்வோர் வீதம் | 2023 | % | 49.4 |
| **வறுமை** | | | |
| தலைக்குரிய வறுமைச் சுட்டெண் | 2019 | % | 14.3 |
| குடும்ப அலகுகளின் வருமான கினி குணகம் | 2019 | குணகம் | 0.46 |
| வறுமை இடைவெளி | 2019 | % | 2.8 |
| நாளாந்தம் உட்கொள்ளும் சராசரி கலோரிப் பெறுமானம் | 2019 | கிலோ கலோரிகள் | 2,120 |
| **சர்வதேச தரப்படுத்தல்** | | | **தரம்** |
| மனித அபிவிருத்தி சுட்டெண் | 2022 | 193 நாடுகளின் தரப்படுத்தலில் | 78 |
| வியாபாரம் புரிவோர் சுட்டெண் | 2020 | 190 நாடுகளின் தரப்படுத்தலில | 99 |
| உலகளாவிய போட்டித் தன்மை சுட்டெண் | 2019 | 141 நாடுகளின் தரப்படுத்தலில் | 84 |
| பொருளாதார சுதந்திர சுட்டெண் | 2023 | 184 நாடுகளின் தரப்படுத்தலில் | 149 |
| உலகளாவிய சமாதான சுட்டெண் | 2024 | 163 நாடுகளின் தரப்படுத்தலில் | 100 |
| இலத்திரனியல் - அபிவிருத்திச் சுட்டெண் | 2022 | 193 நாடுகளின் தரப்படுத்தலில் | 95 |

*(அ) மாணவர்களின் உள்நுழைவினை மாத்திரம் உள்ளடக்குகின்றது*

# அத்தியாயம் 1

## பொருளாதாரப் பார்வைகள்

### 1.1 மேன்நோக்கு

இலங்கையின் சுதந்திரத்திற்குப் பிந்தைய வரலாற்றில் முன்னொருபோதுமில்லாத மற்றும் மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, 2023 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் காணப்பட்ட படிப்படியான பொருளாதார மறுமலர்ச்சியானது அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட இலட்சிய மற்றும் தொடர்ச்சியான கொள்கை சீராக்கங்களின் காரணமாக 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் மேலும் உறுதிப்படுத்தப்பட்டது. 2023 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டிலிருந்து தொடர்ச்சியாக மூன்று காலாண்டுகளாகப் பதிவுசெய்யப்பட்ட பொருளாதார வளர்ச்சியானது, தொடர்ச்சியாக ஆறு காலாண்டுகளுக்கான சுருக்கங்களைத் தொடர்ந்து, நிலைபேறான மீட்சிக்கு வழிவகுத்துள்ளது. பொருளாதாரத்தில் படிப்படியான மீட்சியானது, 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் பணவீக்கத்தை ஒற்றை இலக்க மட்டத்தில் பேணியமை, ஒத்துப்போகும் இயல்புடைய நாணயக் கொள்கை நிலைப்பாட்டை பேணியமை, சுற்றுலா சம்பாத்தியம் மற்றும் தொழிலாளர்களின் பண அனுப்பீடு ஆகியவற்றின் அதிகரிப்புடன் வெளிவாரியான துறையின் செயலாற்றுகையினை மேம்படுத்துதல், ஒட்டுமொத்த நாணய மதிப்பேற்றம் மற்றும் மொத்த அலுவல்சார் ஒதுக்கங்களின் மேம்பாடுகள் ஆகியவற்றிலும் பிரதிபலிக்கிறது.

இலங்கையின் பொருளாதாரம் 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 10.7 வீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 5.3 சதவீத சாதகமான வளர்ச்சியைப் பதிவுசெய்து 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் மீண்டெழுந்தது. விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் உட்பட பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளும் மீட்புக்கான நேர்மறையான அறிகுறிகளை வெளிப்படுத்தி 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் விரிவடைந்தது. தானியங்கள், நன்னீர் மீன்பிடி மற்றும் நன்னீர் உயிரின வளர்ப்பு மற்றும் விலங்கு உற்பத்தி ஆகியவற்றின் வளர்ச்சியின் விரிவாக்கம் காரணமாக காலாண்டில் விவசாயத் துறை வளர்ச்சி 1.1 சதவீதமாக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 24.3 சதவிகித சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் கைத்தொழில் துறை 11.8 சதவிகிதம் வளர்ச்சியடைந்தது. நிர்மாணக் கைத்தொழில், சுரங்கம் மற்றும் கல்லுடைத்தல் கைத்தொழில் மற்றும் உற்பத்தி கைத்தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட விரிவாக்கம் இதற்கு முக்கிய காரணமாகும். 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 4.6 சதவிகித சுருங்கியதுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் முக்கியமாக தங்குமிடம், உணவு மற்றும் குடிபானங்கள் வழங்கும் நடவடிக்கைகள் மற்றும் காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியளிப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றின் விரிவாக்கம் காரணமாக சேவைகள் துறையும் 2.6 சதவிகிதம் வளர்ச்சியடைந்தது.

2023 ஜூலை முதல் பணவீக்கம் ஒற்றை இலக்க மட்டத்தில் இருந்தது. ஆண்டுக்கு ஆண்டு கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (கொ.நு.வி.சு. 2021=100) மூலம் அளவிடப்படும் முதன்மைப் பணவீக்கம், 2024 ஜனவரியில் 6.4 சதவீதமாக இருந்ததுடன் 2024 மே மாதத்தில் 0.9 சதவீதமாகக் குறைந்துள்ளது. எவ்வாறாயினும், 2024 ஜனவரியில் 2.2 சதவீதமாக இருந்த கொ.நு.வி.சு. (2021=100) ஆல் அளவிடப்படும் ஆண்டுக்கு ஆண்டு மையப் பணவீக்கம் 2024 மே மாதத்தில் 3.5 சதவீதமாக அதிகரித்தது. துணைநில் வைப்பு வசதி விகிதம் (SDFR) மற்றும் துணைநில் கடன் வசதி விகிதம் (SLFR) ஆகியவற்றை குறைப்பதன் மூலம் 2024 மார்ச் இறுதிக்குள் 50 அடிப்படை புள்ளிகளினால் முறையே 8.50 சதவீதம் மற்றும் 9.50 சதவீதம் வரை மத்திய வங்கி தனது நாணயக் கொள்கை நிலைப்பாட்டை மேலும் எளிதாக்கியது.

2024 ஆம் ஆண்டின் ஆரம்ப மாதங்களில் வெளிநாட்டுத் துறை மேம்பட்ட செயலாற்றுகையினைக் காட்டியது. வணிகப் பொருட்களின் ஏற்றுமதி 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 3,846.2 மில்லியனுடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ஐ.அ.டொலர் 4,056.1 மில்லியன் வரை 5.5 சதவீதத்தினால் அதிகரித்தது. வணிகப் பொருட்களின் இறக்குமதி 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 5,325.2 மில்லியனுடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ஐ.அ.டொலர் 5,833.2 மில்லியன் வரை 9.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதன் விளைவாக, வணிகப் பொருட்களின் வர்த்தகப் பற்றாக்குறை 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 1,479.0 மில்லியனுடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ஐ.அ.டொலர் 1,777.1 மில்லியன்களாக அதிகரித்தது.

தொழிலாளர்களின் பண அனுப்பீடு 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவான ஐ.அ.டொலர் 1,867.2 மில்லியனுடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ஐ.அ.டொலர் 2,079.9 மில்லியன் வரை 11.4 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. சுற்றுலாத்துறை மூலமான சம்பாத்தியம் 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவான ஐ.அ.டொலர்

652.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ஐ.அ.டொலர் 1,251.6 மில்லியன் வரை 91.9 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ஏனைய சேவைத் துறைகளுக்கான உட்பாய்ச்சலும் மேம்பட்டுள்ளது. மேம்பட்ட வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சலுடன், 2024 ஏப்ரல் இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்கங்கள் ஐ.அ.டொலர் 5.5 பில்லியன் வரை அதிகரித்தது. இதில் சீனாவின் மக்கள் வங்கியின் பரிமாற்றல் வசதியும் அடங்கும். வெளிநாட்டுத் துறையில் ஏற்பட்டுள்ள சாதகமான அபிவிருத்திகளுடன், 2024 மே மாத இறுதி வரையான வருடத்தில் அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயின் மதிப்பு 7.3 வீதத்தால் அதிகரித்தது.

48 மாத சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதி (EFF) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வலுவான செயலாற்றுகையினைக் கருத்தில் கொண்டு, அதன் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்களுக்கு ஆதரவளிப்பதற்கு 2024 ஜூன் 12 அன்று சிறப்பு எடுப்பனவு உரிமம் 254 மில்லியன் (அண்ணளவாக ஐ.அ.டொலர் 336 மில்லியன்) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மூன்றாவது தவணைக்கான உடனடி அணுகலை நாட்டிற்கு வழங்குவதன் மூலம் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையில் 2024 உறுப்புரை IV ஆலோசனை மற்றும் இரண்டாவது மீளாய்வை நிறைவுசெய்தது. அதன் பிரகாரம், 2023 மார்ச் மாதத்தில் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து சர்வதேச நாணய நிதியம் ஐ.அ.டொலர் 1 பில்லியனுக்கும் மேலான தொகையை வழங்கியுள்ளது.

இலங்கை கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளை நிறைவு செய்து, இந்தியா, ஜப்பான் மற்றும் பிரான்ஸ் தலைமையிலான உத்தியோகபூர்வ கடன் வழங்கும் குழுவுடனும் (OCC) 2024 ஜூன் 26 அன்று சீனாவின் எக்சிம் வங்கியுடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது. ஜப்பான், இந்தியா, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, ஆஸ்திரியா, பெல்ஜியம், கனடா, டென்மார்க், ஜெர்மனி, ஹங்கேரி, தென் கொரியா, நெதர்லாந்து, ரஷ்யா, ஸ்பெயின், ஸ்வீடன், ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய உத்தியோகபூர்வ கடன் வழங்கும் உறுப்பினர்கள் மற்றும் சீனா உட்பட பிரதான இருதரப்பு கடன் வழங்குனர்களின் மொத்தம் ஐ.அ.டொலர் 10 பில்லியன்களை மீள்கட்டமைப்புச் செய்வதற்காக இலங்கை ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளபடியினால் இது இலங்கை அரசாங்கத்தால் எட்டப்பட்ட ஒரு முக்கிய மைல்கல் ஆகும்.

உத்தியோகபூர்வ கடன் வழங்கும் குழுவின் ஒவ்வொரு உறுப்பினருடனும் தனிப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலமும் சீனாவின் எக்சிம் வங்கியுடன் உள்நாட்டு ஒழுங்குமுறை முறைமைகளை நிறைவுசெய்வதன் மூலமும் மறுசீரமைப்பு செயல்படுத்தப்படும். உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு 2023 இல் நிறைவடைந்த நிலையில், ஒட்டுமொத்த கடன் மறுசீரமைப்பு செயல்முறை இறுதி செய்வதும் வெளிநாட்டு வணிக கடன் மறுசீரமைப்பு மட்டுமே இன்னும் முடிக்கப்படவில்லை.

வெளிநாட்டு இருதரப்பு கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களை எட்டுவது உத்தியோகபூர்வ கடன் வழங்கும் குழு மற்றும் சீனாவின் எக்சிம் வங்கியின் முக்கிய சர்வதேச பங்காளிகளால் இலங்கைக்கு இருதரப்பு கடன்களை மீண்டும் தொடங்குவதற்கு உதவும். வெளிநாட்டு நிதியுதவியுடன் கூடிய பொது முதலீடுகள் மீண்டும் தொடங்கப்படுவதால், கட்டுமானத் துறை மற்றும் பொருளாதாரம் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். மேலும், உத்தியோகபூர்வ கடன் மறுசீரமைப்பை நிறைவுசெய்வதன் மூலம் முன்னுரிமை செலவினத் தேவைகளை நோக்கி காசுப்பாய்ச்சல் சேமிப்புகளை செலுத்துவதற்கு இடமளித்து குறிப்பிடத்தக்க அரசிறை நிவாரணத்தை வழங்கும். மேலும், வணிகக் கடன் மறுசீரமைப்பு முடிவடைந்தவுடன் கடன் மறுசீரமைப்பு நிறைவடைவதன் மூலம் கடன் மதிப்பீடுகளை நேர்மறையாகத் திருத்துவதற்கு அனுமதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இது சர்வதேச நிதிச் சந்தைகளுக்கு எளிதான மற்றும் குறைந்த விலையிலான அணுகலை வழங்கும்.

## 1.2 பணவீக்கம்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (கொ.நு.வி.சு. 2021=100) ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்படுகின்றவாறு முதன்மைப் பணவீக்கம் 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பதிவாகிய 70 சதவீத அதன் உச்சப் பெறுமதியிலிருந்து 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் விரைவாகக் குறைந்துள்ள அதேவேளையில் 2024 ஆம் ஆண்டு மே மாதத்தில் 0.9 சதவீதத்தை அடைந்தது. எவ்வாறாயினும், 2023 அக்டோபர் மாதம் முதல் 2024 ஜனவரி மாதம் வரை பணவீக்கம் சற்று அதிகரிக்கும் போக்கைக் காட்டிய அதேவேளையில் 2024 ஜனவரியில் பெறுமதி சேர் வரி அதிகரிப்பு பற்றிய மக்களின் உணர்வுகள், முக்கியமாக 2024 ஜனவரியில் உண்மையான திட்டமிடப்பட்ட பெறுமதி சேர் வரி அதிகரித்தமை மற்றும் சாதகமற்ற வானிலை காரணமாக உணவு விநியோகத்தை சீர்குலைத்தமை இதற்குக் காரணமாக அமைந்தது. எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் பணவீக்கம் மீண்டும் குறையத் தொடங்கியதுடன் முக்கியமாக மின்சாரக் கட்டணங்கள் 22 சதவீதம் குறைக்கப்பட்டதனால் இது 2024 மார்ச் மாதத்தில் பணவீக்கம் கடுமையான வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

அதன் பிரகாரம், 2024 ஜனவரி மாதத்தில் 6.4 சதவீதமாக இருந்த பணவீக்கம் 2024 மே மாதத்தில் 0.9 சதவீதமாகக் குறைந்துள்ளது. அதே விதமாக, தேசிய நுகர்வோர் விலைக் குறியீட்டில் (தே.நு.வி.கு. 2021=100) ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்படும் முதன்மைப் பணவீக்கம் 2024 ஜனவரி மாதத்தில் 6.5 சதவீதமாக இருந்த பணவீக்கம் 2024 மே மாதத்தில் 1.6 சதவீதமாகக் குறைந்துள்ளது. பணவீக்கத்தின் இந்த வீழ்ச்சியடையும் போக்கிற்கு முக்கியமான காரணம், மின்சாரக் கட்டணம் மற்றும் எரிபொருள் மற்றும் திரவப் பெற்றோலிய எரிவாயு விலைகள் குறைக்கப்பட்டமையாகும். அதுமட்டுமல்லாமல், உணவுப் பொருட்களின் விலையில் இருந்த மிதமான நிலை மற்றும் கேள்வி குறைவடைந்தமை என்பனவும் பணவீக்கம் குறைவதற்கு பங்களிப்புச் செய்தள்ளன.

பொருளாதாரத்தில் அடிக்கடி விலை ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுகின்ற உணவு, எரிசக்தி மற்றும் போக்குவரத்து வகைகளின் அகற்றல் பொருட்களைத் தவிர்த்து, அடிப்படைப் பணவீக்கப் போக்குகளைப் பிரதிபலிக்கும் தேசிய நுகர்வோர் விலைக் குறியீட்டில் (2021=100) இன் ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்படும் மையப் பணவீக்கம் 2024 ஜனவரி மாதத்தில் பதிவு செய்யப்பட்ட 2.2 சதவீதத்திலிருந்து 2024 மே மாதத்தில் 3.5 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதேபோல், தேசிய நுகர்வோர் விலைக் குறியீட்டினால் (2021=100) அளவிடப்படும் மையப் பணவீக்கம் 2024 ஜனவரியில் காணப்பட்ட 2.2 சதவீதத்திலிருந்து 2024 மே மாதத்தில் 3.1 சதவீதமாக அதிகரித்தது. மேற்குறிப்பிட்டவாறு ஓரளவு அதிகரித்த போதிலும், பொருளாதாரத்தில் குறைந்த தேவை அழுத்தங்களை பிரதிபலித்து, மையப் பணவீக்கம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. உணவுப் பொருட்களின் விலை குறைவடைந்தமை மற்றும் பொருத்தமான கொள்கை நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டமை ஆகியவற்றின் காரணமாக பணவீக்கமானது எதிர்வரும் மாதங்களில் இலக்கு வைக்கப்பட்ட பெறுமதியாகிய 5 சதவீதத்தில் நிலைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**அட்டவணை 1.1 பணவீக்க அசைவுகள் (%)**

| வருடம் | மாதம் | கொ.நு.வி.சு. (2021=100) | | | | தே.நு.வி.சு. (2021=100) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தலைக்குரிய பணவீக்கம் | | மையப் * பணவீக்கம் | | தலைக்குரிய பணவீக்கம் | | மையப் * பணவீக்கம் | |
| | | புள்ளிக்குப் புள்ளி | ஆண்டுச் சராசரி | புள்ளிக்குப் புள்ளி | ஆண்டுச் சராசரி | புள்ளிக்குப் புள்ளி | ஆண்டுச் சராசரி | புள்ளிக்குப் புள்ளி | ஆண்டுச் சராசரி |
| 2023 | பெப்ரவரி | 50.6 | த.இ. | 43.6 | த.இ. | 53.6 | த.இ. | 50.1 | த.இ. |
| | மார்ச் | 50.3 | த.இ. | 39.1 | த.இ. | 49.2 | த.இ. | 44.2 | த.இ. |
| | ஏப்பிரல் | 35.3 | த.இ. | 27.8 | த.இ. | 33.6 | த.இ. | 31.8 | த.இ. |
| | மே | 25.2 | த.இ. | 20.3 | த.இ. | 22.1 | த.இ. | 21.6 | த.இ. |
| | யூன் | 12.0 | த.இ. | 9.8 | த.இ. | 10.8 | த.இ. | 11.3 | த.இ. |
| | யூலை | 6.3 | த.இ. | 5.9 | த.இ. | 4.6 | த.இ. | 6.3 | த.இ. |
| | ஆகஸ்ட் | 4.0 | த.இ. | 4.6 | த.இ. | 2.1 | த.இ. | 4.1 | த.இ. |
| | செப்டெம்பர் | 1.3 | த.இ. | 1.9 | த.இ. | 0.8 | த.இ. | 1.7 | த.இ. |
| | ஒக்டோபர் | 1.5 | த.இ. | 1.2 | த.இ. | 1.0 | த.இ. | 0.6 | த.இ. |
| | நவம்பர் | 3.4 | த.இ. | 0.8 | த.இ. | 2.8 | த.இ. | 0.8 | த.இ. |
| | திசெம்பர் | 4.0 | 17.4 | 0.6 | 14.5 | 4.2 | 16.5 | 0.9 | 15.8 |
| 2024 | சனவரி | 6.4 | 14.2 | 2.2 | 11.3 | 6.5 | 13.4 | 2.2 | 12.3 |
| | பெப்ரவரி | 5.9 | 11.3 | 2.8 | 8.5 | 5.1 | 10.2 | 2.7 | 9.2 |
| | மார்ச் | 0.9 | 8.0 | 3.1 | 6.1 | 2.5 | 7.2 | 3.4 | 6.5 |
| | ஏப்பிரல் | 1.5 | 5.7 | 3.4 | 4.4 | 2.7 | 5.2 | 3.0 | 4.6 |
| | மே | 0.9 | 3.9 | 3.5 | 3.3 | 1.6 | 3.7 | 3.1 | 3.3 |

*மூலம் : தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

** கொ.நு.வி.சு. / தே.நு.வி.சு. மையப் பணவீக்கம் - மாறுபடும் உணவு, வலு மற்றும் போக்குவரத்து நீங்கலாக*

*த.இ. - தகவல் இல்லை*

## 1.3 பணம் மற்றும் கடன்

2023 ஜூன் மாதம் முதல் இலங்கை மத்திய வங்கி நாணயக் கொள்கையை தளர்த்தியது. ஆண்டின் ஆரம்பத்தில் முறையே 9.00 சதவீதம் மற்றும் 10.00 சதவீதமாக இருந்த துணைநில் வைப்பு வசதி விகிதம் (SDFR) மற்றும் துணைநில் கடன் வசதி விகிதம் (SLFR), 2024 மார்ச் மாதத்தில் தலா 50 அடிப்படை புள்ளிகள் குறைக்கப்பட்டு, அவை முறையே 8.50 சதவீதம் மற்றும் 9.50 சதவீதம் என நிர்ணயம் செய்யப்பட்டது. நாணயக் கொள்கையைத் தளர்த்தும் நடவடிக்கைகளின் விளைவாக, சந்தை வட்டி விகிதங்கள் 2022 ஏப்ரல் மாதத்தில் பதிவு செய்யப்பட்ட வரலாற்றுரீதியான உயர் மட்டங்களிலிருந்து வீழ்ச்சியடைந்துள்ளன. குறைக்கப்பட்ட கொள்கை வட்டி விகிதங்களுக்கு இணங்கியதாக, அரசாங்கப் பிணையங்களிலும் தொடர்ந்து சரிவைச் சந்தித்தது. நியதி ஒதுக்க விகிதம் (SRR) இந்த ஆண்டு முழுவதும் இதுவரை 2.00 சதவீதமாக மாறாமல் உள்ளது.

குறிப்பிடத்தக்க நாணயக் கொள்கையைத் தளர்த்தி, ஒட்டுமொத்த திரவத்தன்மை நிலைகளில் முன்னேற்றங்கள் இருந்தபோதிலும், இந்த ஆண்டுக்காக இதுவரை தனியார் துறைக்கான கடன் பாய்ச்சல்கள் சிறிதளவு அதிகரிப்பை மட்டுமே காணக்கூடியதாக உள்ளன. சில்லறை கடன் வட்டி விகிதங்களை மேலும் குறைப்பது, தனியார் துறை கடன் வளர்ச்சியைத் தூண்டுவதற்கு உதவுகின்ற அதேவேளையில் அதன் மூலம் தற்போதைய பொருளாதார மீட்சிக்கு ஆதரவு கிடைக்கும்.

**அட்டவணை 1.2 பணம் மற்றும் தனியார்த் துறைக் கடன்**

ரூபா.பில்லியன்

| விடயம் | 2023 | | | | 2024 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்பிரல் | சனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்பிரல் | 2024 ஏப்பிரல்/2023 ஏப்பிரல் வளர்ச்சி (%) |
| ஒதுக்குப் பணம் | 1,589.72 | 1,504.68 | 1,424.21 | 1,417.07 | 1,488.61 | 1,413.71 | 1,405.56 | 1,426.50 | 0.67 |
| விரிந்த பணம் (M2b) | 12,322.46 | 12,345.80 | 12,293.35 | 12,386.65 | 13,114.94 | 13,201.13 | 13,324.62 | 13,420.00 | 8.34 |
| தனியார்த் துறைக் கடன் | 7,315.43 | 7,257.89 | 7,138.36 | 7,087.70 | 7,314.21 | 7,321.48 | 7,393.38 | 7,377.20 | 4.08 |

*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

## 1.4 பங்குச் சந்தை

2024 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் இலங்கையின் பங்குச் சந்தை துரிதமாக வளர்ச்சியடைந்தது. அனைத்து பங்கு விலைச் சுட்டெண்களும் (ASPI, 1985=100) 2023 மே மாத இறுதியில் காணப்பட்ட 8,555 புள்ளிகளுடன் ஒப்பிடுகையில் 2024 மே மாத இறுதியில் 12,106 புள்ளிகள் வரை 41.5 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அதிக திரவத்தன்மையான பங்குகளை பிரதிநிதித்துவப்படுத்தகின்ற, ஸ்டாண்டர்ட் அண்ட் புவர்ஸ் ஸ்ரீ லங்கா 20 (2004=1,000) சுட்டெண், 2023 மே மாத இறுதியில் காணப்பட்ட 2,421 புள்ளிகளிலிருந்து 2024 மே இறுதியில் 3,569 புள்ளிகள் வரை 47.4 புள்ளிகளால் அதிகரித்தது.

சந்தை மூலதனம் 2023 மே மாத இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 3,598 பில்லியனுடன் ஒப்பிடும்போது 2024 மே மாத இறுதியில் ரூபா 4,781 பில்லியன் வரை 32.8 சதவீதத்தினால் அதிகரித்து. 2024 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில், கொழும்பு பங்குச் சந்தை (கொ.ப.ச.) சராசரி நாளாந்த விற்பனைப் புரள்வு 2023 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 1,481 மில்லியனுடன் ஒப்பிடும்போது 1,767 மில்லியன் வரை 19.3 சதவீத அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டது.

**அட்டவணை 1.3 மூலதன சந்தையின் அசைவுகள்**

| குறிகாட்டிகள் | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | மே மாத இறுதி 2023 | மே மாத இறுதி 2024 |
|---|---|---|---|---|---|---|---|
| அனைத்து பங்கு விலைச் சுட்டெண் (1985=100) | 6,129 | 6,774 | 12,226 | 8,490 | 10,594 | 8,555 | 12,106 |
| எஸ் அன்ட் பீ.எஸ்.எல். 20 சுட்டெண் | 2,937 | 2,638 | 4,233 | 2,636 | 3,010 | 2,421 | 3,569 |
| சந்தை மூலதனமாக்கல் (ரூபா. பில்) | 2,851 | 2,961 | 5,489 | 3,847 | 4,261 | 3,598 | 4,781 |
| வர்த்தகப் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை | 289 | 283 | 296 | 290 | 290 | 289 | 284 |
| நாளாந்த சராசரி புரள்வு (ரூபா.மில்) | 711 | 1,899 | 4,888 | 2,972 | 1,697 | 1,481 | 1,767 |
| வெளிநாட்டு விற்பனை (ரூபா.மில்) | 68,272 | 104,165 | 86,689 | 36,863 | 34,810 | 13,809 | 32,540 |
| வெளிநாட்டு கொள்முதல் (ரூபா.மில்) | 56,537 | 52,889 | 39,410 | 67,488 | 39,826 | 15,168 | 24,423 |
| தேறிய கொள்முதல் (ரூபா.மில்) | -11,735 | -51,276 | -47,279 | 30,625 | 5,017 | 1,359 | -8,117 |

*மூலம் : கொழும்பு பங்குச் சந்தை மற்றும் இலங்கை மத்திய வங்கி*

## 1.5 வெளிநாட்டுத் துறையின் அபிவிருத்திகள்

2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் இலங்கையின் வெளிநாட்டுத் துறையானது, தொழிலாளர்களின் பண அனுப்பீடுகள் மற்றும் சுற்றுலாத் துறையிலிருந்து பெறப்பட்ட வருமானத்தின் அதிகரிப்புடன் மேம்பட்ட செயலாற்றுகையினை வெளிப்படுத்தியுள்ளது. அதன் பிரகாரம், 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் சுற்றுலாத் துறையின் வருமானம் ஐ.அ.டொலர் 1,251.6 மில்லியன் வரை 91.9 சதவீதம் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ள அதே நேரத்தில் தொழிலாளர்களின் பண அனுப்பீடு ஐ.அ.டொலர் 2,079.9 மில்லியன் வரை 11.4 சதவீதம் அதிகரித்துள்ளது.

பொருளாதார மீட்சி மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் இருந்து அதிகரித்த கேள்வி ஆகியவற்றுடன் ஏற்றுமதி உற்பத்தி துறைகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் காரணமாக கைத்தொழில் மற்றும் விவசாய ஏற்றுமதிகளின் வருமானத்தின் அதிகரிப்புடன்

அட்டவணை 1.4 வெளிநாட்டு வர்த்தகம் : 2024 சனவரி - ஏப்ரல்

ஐ.அ.டொ. மில்லியன்

| வகை | 2023 | 2024 | % மாற்றம் |
|---|---|---|---|
| **ஏற்றுமதிகள்** | **3,846.3** | **4,056.1** | **5.5** |
| விவசாய உற்பத்திகள் | 792.3 | 828.4 | 4.6 |
| தேயிலை | 407.7 | 450.2 | 10.4 |
| ஆரம்ப நிலை உற்பத்திகள் (இறப்பர், தெங்கு உற்பத்திகள்) | 114.1 | 133.7 | 17.2 |
| ஏனைய விவசாய உற்பத்திகள் | 270.5 | 244.5 | -9.6 |
| கைத்தொழில் உற்பத்திகள் | 3,035.7 | 3,210.1 | 5.7 |
| புடவை மற்றும் தைக்கப்பட்ட ஆடைகள் | 1,616.7 | 1,570.0 | -2.9 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 168.7 | 369.8 | 119.2 |
| ஏனைய கைத்தொழில் உற்பத்திகள் | 1,250.2 | 1,270.3 | 1.6 |
| கனிப் பொருட்கள் | 9.1 | 8.4 | -7.9 |
| ஏனையவை | 9.3 | 9.2 | -0.9 |
| **இறக்குமதிகள்** | **5,325.2** | **5,833.2** | **9.5** |
| நுகர்வுப் பொருட்கள் | 948.8 | 1,058.5 | 11.6 |
| உணவு மற்றும் குடிபானங்கள் | 500.0 | 577.2 | 15.4 |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 448.8 | 481.3 | 7.2 |
| இடைநிலைப் பொருட்கள் | 3,600.6 | 3,778.5 | 4.9 |
| பெற்றோலியம் | 1,635.1 | 1,529.7 | -6.4 |
| உரம் | 50.1 | 23.9 | -52.4 |
| புடவைகள் மற்றும் தைக்கப்பட்ட ஆடைகள் | 787.2 | 866.9 | 10.1 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 1,128.2 | 1,358.0 | 20.4 |
| முதலீட்டுப் பொருட்கள் | 769.9 | 991.4 | 28.8 |
| இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 526.8 | 666.3 | 26.5 |
| போக்குவரத்து உபகரணங்கள் | 26.8 | 40.5 | 51.4 |
| கட்டிட மூலப்பொருட்கள் | 215.3 | 283.8 | 31.8 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 1.0 | 0.8 | -23.9 |
| ஏனையவை | 5.8 | 4.7 | -18.9 |
| **வர்த்தக மீதி** | **-1,479.0** | **-1,777.1** | **-20.2** |

*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ஏற்றுமதியின் வருமானம் ஐ.அ.டொலர் 4,056.1 மில்லியன் வரை 5.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. உலகச் சந்தைகளின் உயர் நுகர்வப் பொருட்களின் விலைகளின் தாக்கத்துடன் இணைந்து, பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சி, இறக்குமதி கட்டுப்பாடுகள் மீதான தளர்வு ஆகியவற்றின் காரணமாக நுகர்வோர் பொருட்கள், இடைநிலை பொருட்கள் மற்றும் முதலீட்டு பொருட்கள் மீதான இறக்குமதி செலவினங்களின் அதிகரிப்பு காரணமாக 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் இறக்குமதிக்கான செலவினம் ஐ.அ.டொலர் 5,833.2 மில்லியன் வரை 9.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. அதன்பிரகாரம், ஏற்றுமதி வருமானத்தைத் தாண்டி இறக்குமதி மீதான செலவினம் அதிகரித்ததன் காரணமாக 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 1,479.0 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வர்த்தக பற்றாக்குறை 1,777.1 மில்லியன் வரை விரிவடைந்தது.

அண்மை ஆண்டுகளில் வெளிநாட்டு வேலைக்கான புறப்பாடுகள் அதிகரித்தமை மற்றும் உத்தியோகபூர்வ வழிகளின் மூலம் பணம் அனுப்புவதை ஊக்குவிப்பதற்கான அரசாங்கத்தின் கொள்கையுடன் முறையான வழிகளினூடாக தொழிலாளர்களின் பண அனுப்பீடு அதிகரித்துள்ளதுடன் 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 1,867.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ஐ.அ.டொலர் 2,079.9 மில்லியன் வரை தொழிலாளர்களின் பண அனுப்பீடு அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், வெளிநாட்டு வேலைக்கான புறப்பாடுகள் 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட 96,038 நபர்களுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 95,795 நபர்களாக சற்று குறைந்துள்ளது. அதேவேளையில், இந்த காலப் பகுதியில் இந்தியா, ரஷ்யா, ஐக்கிய இராச்சியம், ஜெர்மனி, சீனா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருந்து அதிகரித்த சுற்றுலாப் பயணிகளின் வருகையுடன் 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 652.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் மூலமான வருமானம் ஐ.அ.டொலர் 1,251.6 மில்லியன் வரை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. சுற்றுலாப் பயணிகளின் வருகை

2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட 441,177 நபர்களுடன் ஒப்பிடும் போது 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 784,651 நபர்கள் வரை 77.9 சதவீதம் அதிகரித்துள்ளது.

கொழும்பு பங்குச் சந்தை (கொ.ப.வி.சு.) 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 3.9 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ஐ.அ.டொலர் 23.4 மில்லியன் வரை தேறிய உட்பாய்ச்சலில் அதிகரிப்பொன்று பதிவாகியுள்ளது. 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 252.2 மில்லியன் உட்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் அரசாங்க பிணையங்கள் சந்தையில் தேறிய வெளிப்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 113.0 மில்லியன் பதிவாகியுள்ளது. அதேவேளையில் மொத்த அலுவல்சார் ஒதுக்கங்கள் சீனாவின் மக்கள் வங்கியிலிருந்து ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் இடமாற்று வசதி உட்பட 2024 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத இறுதியில் உள்ளவாறு ஐ.அ.டொலர் 5.5 பில்லியனாக இருந்தது.

மொத்த சென்மதி நிலுவை 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 883.3 மில்லியன் மிகையுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ஐ.அ.டொலர் 1,288.2 மில்லியன் மிகையுடன் வளர்ச்சி அடைந்துள்ளது. 2024 மே 31 இறுதியில் இலங்கை ரூபாய் அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில் 7.3 சதவீதத்தினால் பெறுமதியேற்றமடைந்துள்ளது.

### ஏற்றுமதி

புடைவை மற்றும் ஆடை ஏற்றுமதி வருமானம் குறைவடைந்த போதிலும் பிரதானமாக கைத்தொழில் ஏற்றுமதியின் வருமானம் அதிகரித்ததன் காரணமாக ஏற்றுமதியின் வருமானம் 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 3,846.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 4,056.1 மில்லியன் வரை 5.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. கைத்தொழில் ஏற்றுமதி வருமானத்தின் மொத்த ஏற்றுமதி வருமானத்திற்கு 79.1 சதவீத பங்களிப்பை வழங்கியுள்ள அதேவேளையில் விவசாயம் மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதி மொத்த ஏற்றுமதி வருமானத்தில் முறையே 20.4 மற்றும் 0.2 சதவீதமாக காணப்பட்டது.

பெற்றோலியப் உற்பத்திகள், இறப்பர் உற்பத்திகள் மற்றும் உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை பொருட்களின் ஏற்றுமதி வருமானம் அதிகரித்ததன் காரணமாக கைத்தொழில் ஏற்றுமதியின் வருமானம் 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 3,035.6 மில்லியன்களிலிருந்து 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 3,210.1 மில்லியன் வரை 5.7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. கப்பல் மற்றும் விமான எரிபொருள் ஏற்றுமதி அளவின் அதிகரிப்புடன் பெற்றோலிய உற்பத்திகளின் சம்பாத்தியம் ஐ.அ.டொலர் 369.8 மில்லியன் வரை 119.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. இறப்பர் தயாரிப்புகளின் மூலம் கிடைத்த சம்பாத்தியம் ஐ.அ.டொலர் 326.9 மில்லியன் வரை 14.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ள அதே வேளையில் உணவு, குடி பானங்கள் மற்றும் புகையிலை மூலம் கிடைக்கும் வருமானம் ஐ.அ.டொலர் 206.3 மில்லியன் வரை 28.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், புடைவை மற்றும் ஆடைகளின் மூலம் கிடைத்த சம்பாத்தியம் 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 1,616.7 மில்லியனுடன் ஒப்பிடுகையில், ஐ.அ.டொலர் 1,570.0 மில்லியன் வரை 2.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. மேலும், இயந்திரங்கள் மற்றும் இயந்திர சாதனங்கள், இரத்தினக் கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், விலங்கு உணவு மற்றும் போக்குவரத்து சாதனங்கள் ஆகியவற்றின் ஏற்றுமதி வருமானம் குறைவடைந்துள்ள அதே வேளையில் இரசாயன பொருட்கள், அடிப்படை உலோகம் மற்றும் அது சார்ந்த உற்பத்திகள், பலகை மற்றும் காகித பொருட்கள் ஆகியவற்றிலிருந்து அதிகரித்த ஏற்றுமதி வருமானம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

விவசாய ஏற்றுமதியின் மூலமான வருமானம் தேயிலை, தென்னை, சிறு விவசாய உற்பத்திகள் மற்றும் மரக்கறிகள் ஆகியவற்றின் மூலம் 2023 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 792.3 மில்லியனிலிருந்து 2024 முதல் நான்கு மாதங்களில் ஐ.அ.டொலர் 828.4 மில்லியன் வரை 4.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. அதிக தேயிலை ஏற்றுமதி அளவுகளுடன் 2024 முதல் நான்கு மாதங்களில் தேயிலையின் மூலமான வருமானம் ஐ.அ.டொலர் 450.2 மில்லியன் வரை 10.4 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. மேலும், ஏற்றுமதி வருமானம் தேங்காயிலிருந்து ஐ.அ.டொலர் 125.6 மில்லியன் வரை 24.1 சதவீதத்தினாலும், சிறு விவசாய உற்பத்திப் பொருட்களிலிருந்து ஐ.அ.டொலர் 52.9 மில்லியன் வரை 33.5 சதவீதத்தினாலும், மரக்கறிகளிலிருந்து ஐ.அ.டொலர் 9.2 மில்லியன் வரை 0.6 சதவீதத்தினாலும் அதிகரித்துள்ளது. இருப்பினும், பலசரக்குப் பொருட்கள், கடல் உணவுகள், இறப்பர் மற்றும் தயார் செய்யப்படாத புகையிலை ஆகியவற்றின் ஏற்றுமதி வருமானம் முறையே ஐ.அ.டொலர் 84.7 மில்லியன் வரை 30.2 சதவீதத்தினாலும், ஐ.அ.டொலர் 90.7 மில்லியன் வரை 0.9 சதவீதத்தினாலும், ஐ.அ.டொலர் 8.1 மில்லியன் வரை 37.2 சதவீதத்தினாலும், ஐ.அ.டொலர் 7.0 மில்லியன் வரை 21.7 சதவீதத்தினாலும், 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்துள்ளது. அதே வேளையில், கனிப்பொருள் மூலமாக ஏற்றுமதி வருமானம் 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ஐ.அ.டொலர் 9.1 மில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 8.4 மில்லியன் வரை 7.9 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது

### இறக்குமதிகள்

பொருளாதார நடவடிக்கைகளின் மறுமலர்ச்சி மற்றும் அத்தியாவசியமற்ற இறக்குமதி பொருட்களின்

இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளை நீக்குதல் காரணமாக நுகர்வோர், இடைநிலை மற்றும் முதலீட்டு பொருட்கள் மீதான இறக்குமதி செலவினங்களின் அதிகரிப்பு காரணமாக, இறக்குமதிக்கான செலவு 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 5,325.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 5,833.2 மில்லியன் வரை 9.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. நுகர்வோர் பொருட்கள் இறக்குமதி மீதான செலவு ஐ.அ.டொலர் 1,058.5 மில்லியன் வரை 11.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ள அதே வேளையில், இது மொத்த இறக்குமதி செலவில் 18.1 சதவீதமாக உள்ளது. மேலும், இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிச் செலவு 3,778.5 மில்லியன் வரை 4.9 சதவீதம் அதிகரித்து, மொத்த இறக்குமதி செலவில் 64.8 சதவீதத்திற்கு பங்களிப்பு செய்துள்ள அதேவேளையில் முதலீட்டுப் பொருட்களின் மீதான இறக்குமதிச் செலவு ஐ.அ.டொலர் 991.4 மில்லியன் வரை 28.8 சதவீதம் அதிகரித்து மொத்த ஏற்றுமதிச் செலவில் 7.0 சதவீதமாக காணப்பட்டது.

நுகர்வுப் பொருட்கள் மீதான இறக்குமதி செலவினம், 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 948.8 மில்லியனுடன் ஒப்பிடும்போது, 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,058.5 மில்லியன் வரை 11.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. உணவு மற்றும் குடிபானங்கள் மற்றும் உணவு அல்லாத நுகர்வோர் பொருட்கள் ஆகிய இரண்டின் மீதான இறக்குமதி செலவினம் அதிகரித்தமை இதற்கு முக்கியமான காரணமாக அமைந்துள்ளது. சீனி மற்றும் இனிப்பு பொருட்கள் மற்றும் பல சரக்கு பொருட்கள் ஆகியவற்றுக்கான செலவினம் வீழ்ச்சியடைந்த போதிலும் ஏனைய சகல விதமான உப உணவு பொருட்களின் செலவுகள் அதிகரித்ததை தொடர்ந்து உணவு மற்றும் பானங்கள் மீதான இறக்குமதிச் செலவு 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 500.0 மில்லியனுடன் ஒப்பிடும்போது, 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 577.2 மில்லியன் வரை 15.4 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதன் பிரகாரம், மரக்கறிகள், பால் உற்பத்திகள், தானியங்கள் மற்றும் அரைக்கும் கைத்தொழில் பொருட்கள் சார்ந்த உற்பத்திகள் மற்றும் கடல் உணவு வகைகளின் இறக்குமதி செலவு அதிகரித்தது. மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருள் உற்பத்திகளுக்கான செலவினங்கள் குறைந்த போதிலும், பிரதானமாக ஆடைகள் மற்றும் துணைப் பொருட்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்களுக்கான செலவினங்கள் அதிகரித்ததன் காரணமாக உணவு அல்லாத நுகர்வுப் பொருட்களின் மீதான செலவினம் 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 448.8 மில்லியனுடன் ஒப்பிடும்போது, 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 481.2 மில்லியன் வரை 7.2 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

புடவை மற்றும் ஆடை உற்பத்திகள், இரசாயன பொருட்கள், அடிப்படை உலோகங்கள், பிளாஸ்டிக் மற்றும் பிளாஸ்டிக் சார்ந்த உற்பத்திகள் மற்றும் கடதாசி மற்றும் திண்ம கடதாசிகள் மீதான இறக்குமதி செலவுகள் 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 3,600.6 மில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 3,778.5 மில்லியன் வரை 4.9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. சுத்திகரிக்கப்பட்ட பெற்றொலியத்திற்கான இறக்குமதிச் செலவு ஐ.அ.டொலர் 1,015.9 மில்லியன் வரை 0.7 சதவீதத்தினாலும் மசகு எண்ணெய் ஐ.அ.டொலர் 373.1 மில்லியன் வரை 19.4 சதவீதம் அதிகரித்துள்ள போதிலும், நிலக்கரி இறக்குமதி செலவு ஐ.அ.டொலர் 140.7 மில்லியன் வரை 55.1 சதவீதத்தினாலும் குறிப்பிடத்தக்க அளவில் குறைவடைந்ததன் காரணமாக எரிபொருளுக்கான இறக்குமதி செலவு 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ஐ.அ.டொலர் 1,529.7 மில்லியன் வரை 6.4 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. மேலும், 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வைரங்கள், விலைமதிப்பற்ற கற்கள் மற்றும் உலோக வகைகள், கோதுமை மற்றும் சோளம், விவசாய உள்ளீடுகள் மற்றும் உரங்கள் மீதான இறக்குமதிச் செலவு குறைந்துள்ளது.

முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிச் செலவு 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 769.9 மில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ஐ.அ.டொலர் 991.4 மில்லியன் வரை 28.8 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. வெளிநாட்டு சந்தைகளில் விலைகள் அதிகரித்தமை மற்றும் பொருளாதாரத்தின் மறுமலர்ச்சியுடன் முதலீட்டு நடவடிக்கைகள் உயர்வடைந்தமை ஆகியவற்றின் காரணமாக இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுக்கான செலவினம் ஐ.அ.டொலர் 666.3 மில்லியன் வரை 26.5 சதவீதத்தினாலும் கட்டிடப் பொருட்களின் செலவினம் 283.8 மில்லியன் வரை 31.8 சதவீதத்தினாலும் போக்குவரத்து உபகரணங்கள் ஐ.அ.டொலர் 40.5 மில்லியன் வரை 51.4 சதவீதத்தினாலும் அதிகரித்து காணப்பட்டது.

### 1.6 உலகளாவிய பொருளாதார முன்னோக்குகள்[1]

2022-2023 ஆண்டு காலப்பகுதியில் தொடர்ச்சியாக எழுந்த பொருளாதார சவால்களுக்கு மத்தியில் உலகளாவிய பொருளாதாரம் வலுவாக காணப்பட்டது. 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட வரலாற்று ரீதியாக உயர்ந்த பணவீக்கத்திலிருந்து உலகளாவிய பணவீக்கமற்ற நிலை மற்றும் அதிக வட்டி விகிதங்கள் இருந்தபோதிலும், உலகப் பொருளாதாரம் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் முறையே 3.5 மற்றும் 3.2 சதவீதங்களினால் வளர்ச்சி அடைந்தது

புவிசார் அரசியல் பதட்டங்கள், உயர் முக்கிய பணவீக்கம் மற்றும் இறுக்கமான தொழிலாளர் சந்தைகள், அதிக வட்டி விகித எதிர்பார்ப்புகள் மற்றும்

[1] உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் (ஏப்ரல் 2024, சர்வதேச நாணய நிதியம்), அரசிறைக் கண்காணிப்பு (ஏப்ரல் 2024, சர்வதேச நாணய நிதியம்), உலகளாவிய நிதி உறுதிப்பாட்டு அறிக்கை (ஏப்ரல் 2024, உலக வங்கி), பொருட்பண்டச் சந்தைக் கண்ணோட்டம் (ஏப்ரல் 2024, உலக வங்கி), உலகப் பொருளாதார நோக்கு (யூன் 2024, உலக வங்கி), ஆசிய அபிவிருத்திக் கண்ணோட்டம் (ஏப்ரல் 2024, ஆசிய அபிவிருத்தி வங்கி) மற்றும் ஏனைய தகவல்கள் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் இணையத்தில் பெறப்பட்டவற்றை அடிப்படையாகக் கொண்டவை.

குறைக்கப்பட்ட சொத்து விலைகள் ஆகியவற்றின் மீதான மக்களின் உணர்வுகள் மேலோங்கி இருந்தபோதிலும், அபாயங்கள் பரந்த அளவில் சமநிலையில் இருப்பதாகத் தெரிகிறது. எவ்வாறாயினும், பணவீக்கம் இலக்கு மட்டங்களில் பராமரிக்கப்படுவதற்கும் மத்திய வங்கிகளினால் தொடர்ந்து கொள்கை தளர்த்தலுக்கும் மத்தியில் அரசிறைக் கொள்கைகளின் இறுக்கத்தால் வளர்ச்சிக் கண்ணோட்டம் பாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலகப் பொருளாதாரம் 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் தலா 3.2 சதவிகிதம் வளர்ச்சியடையவுள்ள அதே வேளையில் கொவிட்-19 தொற்றுநோய்க்குப் பின்னரான தாக்கம், புவி-அரசியல் பதட்டங்கள், உற்பத்தித் துறையின் பலவீனமான வளர்ச்சி மற்றும் அதிகரித்து வரும் புவி-பொருளாதார துண்டாடுதல் ஆகியவற்றின் அந்தப் பெறுமதி குறிப்பாக 2000-2019 காலப் பகுதியில் பதிவு செய்யப்பட்ட ஆண்டு சராசரியான 3.8 சதவிகித வரலாற்று ரீதியான சாதாரண பெறுமதியிலும் பார்க்க குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது. ஒப்பீட்டுரீதியில் குறைந்த வளர்ச்சியை காட்டுகின்ற இந்த எதிர்கால நோக்கினூடாக கட்டுப்படுத்தப்பட்ட நாணயக் கொள்கைகள், அரசிறை ஆதரவைத் திரும்பப் பெறுதல் மற்றும் குறைந்த உற்பத்தித்திறன் வளர்ச்சி ஆகியவற்றைப் பிரதிபலிக்கிறது.

**அட்டவணை 1.5 உலகம் பற்றிய ஓர் பார்வை - 2023**

| நாடு | 2023<br>உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (வருடாந்த சதவீத மாற்றம்) | பணவீக்கம் (சதவீதம்) | வேலையின்மை (சதவீதம்) | அரசிறை மீதி (உள்நாட்டு உற்பத்தி சதவீதம்) | மொத்த கடன்(உள்நாட்டு உற்பத்தி சதவீதம்) |
|---|---|---|---|---|---|
| ஆஜன்டீனா | -1.6 | 133.5 | 6.6 | -4.2 | 154.5 |
| அவுஸ்ரேலியா | 2.1 | 5.6 | 3.7 | -0.9 | 49.4 |
| பிரேசில் | 2.9 | 4.6 | 8.0 | -7.9 | 84.7 |
| கனடா | 1.1 | 3.9 | 5.4 | -0.6 | 107.1 |
| சிலி | 0.2 | 7.6 | 8.8 | -2.2 | 39.4 |
| சீனா | 5.2 | 0.2 | 5.2 | -7.1 | 83.6 |
| பிரான்ஸ் | 0.9 | 5.7 | 7.4 | -5.5 | 110.6 |
| ஜேர்மனி | -0.3 | 6.0 | 3.0 | -2.1 | 64.3 |
| கிரீஸ் | 2.0 | 4.2 | 10.9 | -1.6 | 168.8 |
| இந்தியா | 7.8 | 5.4 | ... | -8.6 | 82.7 |
| இந்தோனேசியா | 5.0 | 3.7 | 5.3 | -1.6 | 39.9 |
| இத்தாலி | 0.9 | 5.9 | 7.7 | -7.2 | 137.3 |
| யப்பான் | 1.9 | 3.3 | 2.6 | -5.8 | 252.4 |
| கொரியா | 1.4 | 3.6 | 2.7 | -1.0 | 55.2 |
| மலேசியா | 3.7 | 2.5 | 3.6 | -4.4 | 67.3 |
| மெக்சிகோ | 3.2 | 5.5 | 2.8 | -4.3 | 53.1 |
| ரஷ்யா | 3.6 | 5.9 | 3.2 | -2.3 | 19.7 |
| சிங்கப்பூர் | 1.1 | 4.8 | 1.9 | 3.6 | 162.1 |
| தென் ஆகிரிக்கா | 0.6 | 5.9 | 32.8 | -6.0 | 73.9 |
| ஸ்பெயின் | 2.5 | 3.4 | 12.1 | -3.6 | 107.5 |
| இலங்கை | -2.3 | 17.4 | 4.7 | -8.3 | 103.9 |
| தாய்லாந்து | 1.9 | 1.2 | 1.2 | -3.2 | 62.4 |
| ஐக்கிய இராச்சியம் | 0.1 | 7.3 | 4.0 | -6.0 | 101.1 |
| ஐக்கிய அமெரிக்கா | 2.5 | 4.1 | 3.6 | -8.8 | 122.1 |
| வியட்நாம் | 5.0 | 3.3 | 2.0 | -1.6 | 34.0 |
| வெனிசுலா | 4.0 | 337.5 | ... | -3.4 | 148.2 |

*மூலம் : "உலக பொருளாதாரக் கண்ணோட்டம்", சர்வதேச நாணய நிதியம் 2024 ஏப்ரல்*
*நிதிக் கண்காணிப்பு கண்காணிப்பு, சர்வதேச நாணய நிதியம், 2024 ஏப்ரல், அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*
*இலங்கை மத்திய வங்கி*
*தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*
*....தகவல் இல்லை*

## உலகளாவிய வளர்ச்சி

வளர்ச்சி அடைந்த பொருளாதாரங்கள் மற்றும் வளர்ந்து வரும் சந்தை மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரங்கள் இரண்டும் 2024-26 ஆண்டுகளுக்கான வளர்ச்சி தொற்றுநோய்க்கு முன்னரான தசாப்தத்தை விட மெதுவான வேகத்தில் வளரும். ஐக்கிய அமெரிக்காவில் 2.7 சதவீதம், ஐரோப்பிய பிராந்தியத்தில் 0.8 சதவீதம்,

ஜப்பானில் 0.9 சதவீதம் மற்றும் இனிய அபிவிருத்தி அடைந்த பொருளாதாரங்களில் 1.6 சதவீதம் என எதிர்பார்ப்பட்டுள்ள வளர்ச்சியின் காரணமாக 2024 ஆம் ஆண்டில் வளர்ச்சி அடைந்த பொருளாதாரங்களின் வளர்ச்சி 1.7 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேம்பட்ட பொருளாதாரங்களின் மிதமான வளர்ச்சியானது, உக்ரைன்-ரஷ்யா மோதலின் அதிக வெளிப்பாடு காரணமாக 2023 ஆம் ஆண்டில் 0.4 சதவிகிதம் குறைந்த வளர்ச்சியை எடுத்துக்காட்டிய ஐரோப்பிய பிராந்தியத்தில் சமூக நிலையை அடைந்தமை வளர்ச்சி அடைந்த பொருளாதரங்களின் நடுத்தர வளர்ச்சிக்கு காரணமாக அமைந்தது. 2023 ஆம் ஆண்டில் வளர்ச்சியை ஆதரித்த ஒரு தடவை மாத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்ட காரணிகளின் விளைவுகள் ஒரே அடியாக மங்குவதால் 2023 ஆம் ஆண்டில் 1.9 சதவீதமாக இருந்த ஜப்பானின் வளர்ச்சி 2024 ஆம் ஆண்டில் 0.9 சதவீதமாகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வளர்ந்து வரும் சந்தை மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்களின் வளர்ச்சி 2024-26 ஆம் ஆண்டு காலப்பகுதியை விட ஆண்டுக்கு 4 சதவீதத்திற்கு மேல் இருக்கும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. தொற்றுநோய்க்குப் பிறகு நுகர்வு அதிகரித்தமை மற்றும் அரசிறை ஊக்குவிப்பு உள்ளிட்ட ஒரு தடவை மாத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளின் நேர்மறையான விளைவுகள் வீழ்ச்சி அடைந்தமை மற்றும் சொத்து துறை தொடர்ச்சியாக பலவீனமடைந்தமை காரணமாக 2023 ஆம் ஆண்டில் பதிவாகிய 5.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு குறைந்து 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மேலும் எளிதாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சீனாவைத் தவிர்த்து, வளர்ந்து வரும் சந்தை மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்களின் வளர்ச்சி இந்த ஆண்டு 3.5 சதவிகிதம் வரை அதிகரிக்கும் என்றும் பின்னர் 2025-26 ஆம் ஆண்டுகளில் சராசரியாக 3.9 சதவிகிதமாக வளர்ச்சி அடையும் என்றும் எதிர்ப்பு கூறப்பட்டுள்ளது. வலுவான உள்நாட்டு தேவை மற்றும் அதிகரித்து வரும் உழைக்கும் வயது மக்கள் தொகையின் அதிகரிக்கும் தாக்கத்தின் காரணமாக இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 2024 ஆம் ஆண்டில் 6.8 சதவீதமாகவும், 2025 ஆம் ஆண்டில் 6.5 சதவீதமாகவும் நிலையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறைந்த வருமானம் கொண்ட அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் வளர்ச்சி 2023 ஆம் ஆண்டில் 4.0 சதவீதமாக காணப்பட்ட வளர்ச்சியில் இருந்து 2024 ஆம் ஆண்டில் 4.7 சதவீதமாகவும், 2025 ஆம் ஆண்டில் 5.2 சதவீதமாக மேலும் வளர்ச்சி அடையும் என்றும் எதிர் கூறப்பட்டுள்ளது. மிகச் சிறந்த முதலீடு, நுகர்வு சுமுக நிலையை அடைதல், மற்றும் இலத்திரனியல் மற்றும் சேவைகள் ஏற்றுமதியின் வளர்ச்சி ஆகியவற்றின் காரணமாக இந்தியா ஆசியாவில் பிரதான வளர்ச்சியடைந்த பொருளாதாரமாக தனது நிலைப்பாட்டை உறுதிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பாகிஸ்தானிலும் இலங்கையிலும் பேரிணப் பொருளாதார உறுதிப்பாடு 2024 ஆம் ஆண்டில் நேர்மறையான வளர்ச்சியைக் கொண்டு வருவதுடன் 2025 ஆம் ஆண்டில் மேலும் துரிதமான வளர்ச்சிக்கு காரணமாக அமையும்

### பணவீக்கம்

கொள்கை வரி விகிதங்களை தளர்த்துவதன் மூலம் 2022 ஆம் ஆண்டு முதல் படிப்படியாகக் குறைந்துள்ள முதன்மைப் பணவீக்கம், 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் உலகளாவிய முதன்மை மற்றும் மையப் பணவீக்கம் மேலும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலகளாவிய முதன்மைப் பணவீக்கம் 2023 ஆம் ஆண்டில் காணப்பட்ட 6.8 சதவீதத்திலிருந்து 2024 ஆம் ஆண்டில் 5.9 சதவீதமாகக் குறைவடைந்து அதன்பின்னர் 2025 ஆம் ஆண்டில் 4.5 சதவீதமாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. வர்த்தகப் பொருட்களின் விலையில் ஒரு சிறிய வீழ்ச்சிக்கு மேலதிகமாக சேவைகள் தேவை நடுத்தர நிலையில் காணப்படுதல் மற்றும் சம்பள அதிகரிப்பு மிதமாக அமைவதுடன் மையப் பணவீக்கம் குறைவடைவது இந்த மந்த நிலைக்கு காரணமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களில், பணவீக்கம் 2023 ஆம் ஆண்டில் பதிவாகிய 4.6 சதவீதத்திலிருந்து 2024 ஆம் ஆண்டில் 2.6 சதவீதம் வரை 2.0 சதவீதத்தினால் வீழ்ச்சி அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. வளர்ச்சி அடைந்த பொருளாதாரங்கள் 2025 ஆம் ஆண்டில் தொற்றுநோய்க்கு முன்னைய பணவீக்க நிலைகளை அடையும். வளர்ந்துவரும் சந்தைகள் மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்களில் பணவீக்கத்தின் வேகம் 2023 இல் காணப்பட்டவாறு 2024 ஆம் ஆண்டிலும் அதே மட்டத்தில் 8.3 சதவீதமாக ஒப்பீட்டு அளவில் குறைவாக உள்ளது. வளர்ந்துவரும் சந்தைகள் மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதரங்கள் 2026 ஆம் ஆண்டில் மட்டுமே தொற்றுநோய்க்கு முன்னைய சராசரியான 5.0 சதவீதத்தை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### நுகர்வுப் பொருட் சந்தைகள்

2023 ஆகஸ்ட் மாதத்திற்கும் 2024 பெப்ரவரி மாதத்திற்கும் இடையில் எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக முதன்மை வர்த்தகப் பொருட்களின் விலைகள் சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவுசெய்துள்ளன. எண்ணெய் விலைகள் சுமார் 2.5 சதவீதம் குறையும் என்ற எதிர்பார்ப்புடன் எரிபொருள் பொருட்களின் விலைகள் 2024 ஆம் ஆண்டில் 9.7 சதவீதம் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, நிலக்கரி மற்றும் இயற்கை எரிவாயு அதேபோன்று உணவுப் பொருட்களின் விலைகளும் வீழ்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வர்த்தகப் பொருட்களின் விலைச் சுட்டி 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் முறையே 3 சதவீதம் மற்றும் 4 சதவீதம் குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது. கொக்கோ மற்றும் கோப்பி விலைகளில் ஏற்பட்ட சடுதியான அதிகரிப்பு காரணமாக, 2024 ஏப்ரல் மாத ஆரம்பத்தில் விவசாய விலைச் சுட்டி அதிகரித்தது.

இருப்பினும், வழங்கல் அதிகரித்து எல் நினோ காலநிலை நிலைமைகள் குறைவதால், விவசாய விலைச் சுட்டி 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் முறையே 1 சதவீதம் மற்றும் 4 சதவீதம் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எரிசக்தி விலைச் சுட்டி 2024 ஆம் ஆண்டில் 3 சதவீதம் குறைவடைந்து 2025 ஆம் ஆண்டில் மேலும் 4 சதவீதம் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. உலோகங்களின் விலைச் சுட்டி 2024-25 ஆம் ஆண்டுகளில் மாறாமல் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தங்கத்தின் விலை 2024 ஆம் ஆண்டில் 8 சதவீதம் உயரும் என்றும், அதற்கு முன்னர் 2025 ஆம் ஆண்டில் சிறிது குறையும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 1.6 : சர்வதேச நுகர்வுப் பொருட்சந்தை விலைகள்**

| விடயம் | அலகு | உண்மையான | | மதிப்பிடப்பட்ட | |
|---|---|---|---|---|---|
| | | 2022 | 2023 | 2024 | 2025 |
| **சக்தி** | | | | | |
| நிலக்கரி, அவுஸ்திரேலியா | $மெ.தொ | 344.9 | 172.8 | 125.0 | 110.0 |
| கச்சா எண்ணெய், பிரென்ட் | $/பெரல் | 99.8 | 82.6 | 84.0 | 79.0 |
| இயற்கை எரிவாயு, ஐ.அ. | $/MMBTU | 6.4 | 2.5 | 2.4 | 3.5 |
| **சக்தியற்ற** | | | | | |
| **விவசாயம்** | | | | | |
| **குடிபானங்கள்** | | | | | |
| கோலா | $/கிகி | 2.39 | 3.28 | 5.00 | 4.00 |
| கோப்பி, ரொபஸ்டா | $/கிகி | 2.29 | 2.63 | 3.50 | 2.80 |
| தேயிலை | $/கிகி | 3.05 | 2.74 | 2.75 | 2.77 |
| **உணவு** | | | | | |
| **கொழுப்புகள் மற்றும் எண்ணெய்கள்** | | | | | |
| பாம் எண்ணெய் | $மெ.தொ | 1,276 | 886 | 905 | 825 |
| சோயாபீன் உணவு | $மெ.தொ | 548 | 541 | 480 | 460 |
| சோயாபீன்கள் | $மெ.தொ | 675 | 598 | 500 | 475 |
| **தானியங்கள்** | | | | | |
| சோளம் | $மெ.தொ | 319 | 253 | 200 | 195 |
| நெல் | $மெ.தொ | 437 | 554 | 595 | 550 |
| கோதுமை | $மெ.தொ | 430 | 340 | 290 | 295 |
| **ஏனைய உணவுகள்** | | | | | |
| சீனி | $/கிகி | 0.40 | 0.52 | 0.50 | 0.46 |
| **மூலப் பொருட்கள்** | | | | | |
| பருத்தி | $/கிகி | 2.86 | 2.09 | 2.15 | 2.20 |
| இறப்பர் | $/கிகி | 1.54 | 1.38 | 1.55 | 1.60 |
| அறுக்கப்பட்ட மரம் | $/cum | 675 | 678 | 680 | 690 |
| **உலோகங்கள் மற்றும் கனிமங்கள்** | | | | | |
| அலுமினியம் | $மெ.தொ | 2,705 | 2,256 | 2,300 | 2,400 |
| செம்பு | $மெ.தொ | 8,822 | 8,490 | 8,900 | 8,800 |
| நிக்கல் | $மெ.தொ | 25,834 | 21,521 | 17,000 | 18,000 |

*மூலம் : உலக வங்கியின் நுகர்வோர் பங்குச் சந்தை கண்ணோட்டம் - 2024 ஏப்ரல்*

## உலகளாவிய வர்த்தகம்

உலகளாவிய கைத்தொழில் உற்பத்தியின் மந்தநிலை காரணமாக, 2023 ஆம் ஆண்டில் பொருட்களின் வர்த்தகத்தின் அளவு 1.9 சதவீத்தினால் சுருங்கியது. எவ்வாறாயினும், பொருட்களின் வர்த்தகத்தில் உள்ள மேம்பாடுகள் மற்றும் வீட்டு நுகர்வோர் பொருட்களின் அதிகரிப்பு ஆகியவற்றால் ஆதரிக்கப்படுகின்றபடியினால் உலகளாவிய வர்த்தகம் 2024 ஆம் ஆண்டில் முன்னேற்றத்தின் அறிகுறிகளைக் காட்டுகிறது. உலகளாவிய வர்த்தகம் 2024 ஆம் ஆண்டில் 3.0 சதவீதமாகவும், 2025 ஆம் ஆண்டில் 3.3 சதவீதமாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், பிராந்திய மோதல்கள் மற்றும் புவிசார் அரசியல் பதட்டங்கள் இந்த முன்னேற்றத்தை மோசமாக பாதிக்கும். மேலும், வர்த்தக வளர்ச்சியானது அதன் வரலாற்று ரீதியான 2000-2019 சராசரியாகிய 4.9 சதவீதத்திற்கும் கீழே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## நாணய மற்றும் நிதித் துறை

பணவீக்கத்தை எதிர்க்கொள்வதற்கு பெரும்பாலான மத்திய வங்கிகள், அடமானச் செலவுகள் அதிகரிப்பு, படுகடனை மிள்நிதியிடுவதில் உள்ள சிரமங்கள்,

நிறுவனங்களின் வங்குரோத்து நிலைகள் மற்றும் குறைக்கப்பட்ட பணவீக்கம் ஆகியவற்றில் அதிகரிப்புக்கு இட்டுச் செல்லக்கூடிய கொள்கை வட்டி விகிதங்களை உயர்த்தியது. இருப்பினும், பணவீக்கத்தில் படிப்படியாக வீழ்ச்சி ஏற்படுவதனால், வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களில் உள்ள கொள்கை விகிதங்கள் 2024 ஆம் ஆண்டின் இரண்டாம் அரைப் பகுதியில் குறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பெரும்பாலான மத்திய வங்கிகளின் அதிகாரிக்கும் சுழற்சிகள் பூர்த்தியடைந்தும் சிலவற்றில் இலகுவாக்குவது ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும், கொள்கை விகிதங்கள் அதிகமாகவே உள்ளன. இதன் விளைவாக, எதிர்வுகூறல் பணவீக்கம் குறைவதால் உண்மையான வட்டி விகிதங்கள் அதிகரித்துள்ளன. இறுக்கமான நாணயக் கொள்கை மற்றும் அதிக விவசாய உற்பத்தியின் பின்தங்கிய விளைவுகள் தென் ஆசியா, தென்கிழக்கு ஆசியா மற்றும் மத்திய ஆசியாவில் பணவீக்க இயக்கவியலையும் குறைக்கும். பணவீக்க செயல்முறையை ஆதரிப்பதற்கு அரசிறைக் கட்டுப்பாடும் அவசியமாகும்.

பல நாடுகளுக்கு அரசிறை நிலைத்தன்மையைப் பாதுகாப்பதற்கும், அவற்றின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களைப் பாதுகாக்கும் அதேவேளையில் இடையகங்களை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் பாரிய அரசிறை சீராக்கங்கள் தேவைப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வளர்ந்துவரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதரங்கள் 2024 இல் நடுநிலை அரசிறை நிலைப்பாட்டை பின்பற்றும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற அதே நேரத்தில் வளர்ச்சியடைந்த பொருளாதாரங்கள் 2024 ஆம் ஆண்டில் தங்கள் அரசிறைக் கொள்கைகளை மேலும் இறுக்கமாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# அத்தியாயம் 2

## அரசிறை அபிவிருத்திகள்

### 2.1 மேன்நோக்கு

2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் நிதி ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுடன் சேர்த்து, அதிகரித்த வருமானம் மற்றும் குறைக்கப்பட்ட செலவினங்கள் காரணமாக நிதித்துறையானது மிகச் சிறந்த செயலாற்றுகையை வெளிப்படுத்தியுள்ளது. இதன் விளைவாக, 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் பதிவு செய்யப்பட்ட முதன்மை பற்றாக்குறை ரூபா 5.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் போது ரூபா 365.0 பில்லியன் முதன்மை உபரி பதிவு செய்யப்பட்டது. வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையும் 2023 இன் அதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 2024 முதல் நான்கு மாதங்களில் ரூபா 463.2 பில்லியனில் இருந்து ரூபா 361.1 பில்லியனுக்கு குறைந்துள்ளது.

2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் அரசாங்கத்தின் மொத்த வருமானமானது, 2023 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் ரூபா 821.3 பில்லியன் என்ற நிலையில் இருந்து 48.3 சதவீதம் அல்லது ரூபா 396.7 பில்லியனினால் ரூபா 1,218.1 பில்லியன் ஆக அதிகரித்துள்ளது. இது வருடாந்த மதிப்பீட்டில் 29.5 சதவீதமாகும். இது 2022 ஜுன் மாதம் முதல் அறிமுகப்படுத்தப்பட்ட வீரியமான வரிக் கொள்கை நடவடிக்கைகள், வருமான நிர்வாகத்தில் ஏற்பட்ட படிப்படியான முன்னேற்றங்கள், 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டிலிருந்து பதிவு செய்யப்பட்ட நேர்மறையான பொருளாதார வளர்ச்சி மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகளை படிப்படியாக நீக்குதல் உள்ளிட்ட பல காரணிகளின் விளைவாகும். வரி வருமானம் 50.5 சதவீதம் அதிகரித்து 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 1,117.8 பில்லியன்களை அடைந்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டில் 29.3 சதவீதமாகும்.

வருமான வரி மூலம் சேகரிக்கப்பட்ட வருமானமானது 27.3 சதவீதம் அதிகரித்து 2024 முதல் நான்கு மாதங்களில் ரூபா 244.0 பில்லியனை அடைந்துள்ளது. இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 191.8 பில்லியன்களாக காணப்பட்டது. இது 2023 ஜனவரி 1 அன்று அறிமுகப்படுத்தப்பட்ட வரிக் கொள்கை நடவடிக்கைகளின் முழு தாக்கம், பொருளாதார நடவடிக்கைகளின் மறுமலர்ச்சியுடன் அரச மற்றும் முறைசாரா தனியார் துறைகளில் சம்பள அதிகரிப்பு ஆகிய காரணங்களினாலாகும்.

பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான வரி 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 63.8 சதவீதம் அதிகரித்து ரூபா 724.5 பில்லியனாக இருந்தது. இது பெறுமதி சேர் வரி (பெ.சே.வரி) வருமானம் 89.5 சதவீதம் அதிகரித்து ரூபா 422.9 பில்லியன் பெ.சே.வரி விகிதத்தின் அளவு அதிகரிப்பு, பெ.சே.வரி பதிவு வரம்பு குறைப்பு மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்கியதன் தாக்கத்துடன் சேர்த்து 2024 ஜனவரி 1 முதல் நடைமுறைக்கு வந்த பெ.சே. வரி வரி விலக்குகளின் பெரும்பகுதியை நீக்கியமை போன்ற காரணங்களினாலாகும். உற்பத்தித் தீர்வை மற்றும் மதுவரி வருமானம் 45.2 சதவீதம் அதிகரித்து ரூபா 198.3 பில்லியனை அடைந்தது. பெற்றோலியத் துறை மீதான உற்பத்தித் தீர்வை அதிகரிப்பு இதற்கு முக்கிய காரணமாகும். சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டிலிருந்து (ச.பா.ப.அ.) அதிகரித்த பலன்கள் காரணமாக பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான ஏனைய வரிகளும் 25.1 சதவீதம் அதிகரித்து ரூபா 103.3 பில்லியனை அடைந்தது.

2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இருந்து இறக்குமதி கட்டுப்பாடுகள் தளரத்தப்பட்டதுடன், சுங்க இறக்குமதி தீர்வையிலிருந்து (சு.இ.தீ.) சேகரிக்கப்பட்ட வருமானத்தில் 68.5 சதவீதம் அதிகரித்ததன் காரணமாக 2024 முதல் நான்கு மாதங்களில் வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதான வரி வருமானம் 37.6 சதவீதம் அதிகரித்துள்ளது. இறக்குமதி வரிகளில் இருந்து குறிப்பிடத்தக்க வருமான அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் இது மற்றும் சீனி மற்றும் உருளைக்கிழங்கு மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டு (வி.வி.ப.அ.) விகிதங்களின் அதிகரிப்பு காரணமாக விசேட வியாபார பண்ட அறவீட்டு ஆகியவற்றிலிருந்து பதிவு செய்யப்பட்டுள்ளது. கனிசமான பொருட்களின் மீதான செஸ் மற்றும் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு (வி.நி.அ.அ.) படிப்படியாக நீக்கப்பட்ட போதிலும், படிப்படியாக இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்கியதன் காரணமாக, செஸ் மற்றும் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட வருமானம் முறையே 64.3 சதவீதம் மற்றும் 0.4 சதவீதம் அதிகரித்துள்ளது.

வரி அல்லாத வருமானம் தண்டப் பணம், கட்டணங் கள் அளவீடுகளிலிருந்து வருமான அதிகரிப்பு காரணமாக 26.8 சதவீதம் அதிகரித்து 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 98.3 பில்லியனாக இருந்தது.

அரச செலவினம் 4.0 சதவீதம் குறைந்து 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 1,645.6

பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 1,579.2 பில்லியனை அடைந்துள்ளது. இது முக்கியமாக வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறைகள் மற்றும் நீடித்து நிற்க முடியாத கடன் நிலைகளை நிவர்த்தி செய்வதற்கு அதிக நிதி ஒழுக்கத்தை கடைப்பிடிக்க அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட தொடர்ச்சியான செலவினக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை பிரதிபலிக்கிறது.

2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மொத்த செலவினத்தில் சுமார் 90 சதவீதமாக கணிக்கப்பட்ட மீண்டுவரும் செலவு 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ரூபா 1485.0 இலிருந்து 4.4 சதவீதம் குறைந்து ரூபா 1,419.3 பில்லியனாக இருந்தது. இது முதன்மையாக வட்டிச் செலவில் 11.3 சதவீதம் சரிந்து 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 819.0 பில்லியனிலிருந்து ரூபா 726.1 பில்லியனுக்கு குறைந்தமையாகும். இது உள்நாட்டு வட்டி விகிதங்களின் சரிவு மற்றும் உள்நாட்டு கடன் மேம்படுத்துகை பூர்த்தி செய்ததன் விளைவுகளால் உள்நாட்டு வட்டி கொடுப்பனவுகளில் 12.3 சதவீதம் குறைந்து ரூபா 692.1 பில்லியனை எட்டியமையினாலாகும். எவ்வாறாயினும், மொத்த வட்டி கொடுப்பனவுகளில் 4.7 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வெளிநாட்டு வட்டி கொடுப்பனவுகள் 13.9 சதவீதம் அதிகரித்து ரூபா 34.0 பில்லியனை அடைந்துள்ளது.

எவ்வாறாயினும், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வட்டி அல்லாத மீண்டுவரும் செலவு 4.1 வீதத்தால் அதிகரித்ததுடன், பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான செலவினம் 12.5 வீதத்தால் அதிகரித்து ரூபா 88.7 பில்லியனிலிருந்து ரூபா 99.8 பில்லியனுக்கு அதிகரித்ததுடன், மானியங்கள் மற்றும் பரிமாற்றங்களுக்கான செலவினம் 6.4 சதவீதம் அதிகரித்து ரூபா 274.0 பில்லியனில் இருந்து ரூபா 291.5 பில்லியனுக்கு அதிகரித்துள்ளது. இருப்பினும், சம்பளம் மற்றும் ஊதியத்திற்கான செலவு புதிய ஆட்சேர்ப்புகளை அத்தியாவசிய பதவிகளுக்கு மட்டுப்படுத்தியதன் விளைவு மற்றும் பணியாளர்களை திறம்பட நிர்வகிப்பதன் காரணமாக 0.5 சதவீதம் குறைந்து 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 303.3 பில்லியனில் இருந்து 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப் பகுதியில் ரூபா 301.8 பில்லியனை அடைந்துள்ளது.

**அட்டவணை 2.1 : 2024 சனவரி முதல் ஏப்பிரல் வரையிலான வரவு செலவுத்திட்ட சுருக்கம்**

ரூபா.மில்லியன்

| விடயம் | 2023 | 2024 (தற்காலிகமானது) |
|---|---|---|
| **வருமானம் மற்றும் மானியங்கள்** | **821,346** | **1,218,065** |
| **வருமானம்** | **820,070** | **1,216,030** |
| வரி வருமானம் | 742,578 | 1,117,762 |
| வரி அல்லாத வருமானம் | 77,493 | 98,268 |
| மானியங்கள் | 1,276 | 2,035 |
| **செலவினம்** | **1,645,602** | **1,579,166** |
| **மீண்டெழும்** | **1,484,984** | **1,419,264** |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 818,969 | 726,122 |
| ஏனையவை | 666,015 | 693,142 |
| அரசாங்க முதலீடுகள் | 177,903 | 165,335 |
| ஏனையவை | (17,285) | (5,433) |
| **நடைமுறைக் கணக்கு மீதி** | **(664,913)** | **(203,234)** |
| **முதன்மை மீதி** | **(5,287)** | **365,021** |
| **வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை** | **(824,256)** | **(361,101)** |
| **நிதியீட்டம்** | **824,256** | **361,101** |
| வெளிநாட்டு நிதியீட்டம் | (77,498) | (7,449) |
| கடன் பெறுகை | 49,970 | 35,536 |
| மீள் கொடுப்பனவுகள் | (127,468) | (42,986) |
| உள்நாட்டு நிதியீட்டம் | 901,753 | 368,551 |
| கடன் பெறுகை | 6,045,994 | 3,098,450 |
| மீள் கொடுப்பனவுகள் | (5,144,241) | (2,729,899) |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

மூலதனம் மற்றும் நிகர கடன் 0.4 சதவீதம் சரிந்து 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 160.6 பில்லியனில் இருந்து 2024 முதல் நான்கு மாதங்களில் ரூபா 159.9 பில்லியனுக்கு குறைந்துள்ளது. இது நிலையான சொத்துக்களை கையகப்படுத்துவதற்கான செலவினம் 20.8 சதவிகிதம் அதிகரித்த போதிலும் பொது நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் நிகரக் கடன் வழங்கல் ஆகியவற்றுக்கான பரிமாற்றங்களில் ஏற்பட்ட சரிவினால் பதிவானது.

**அட்டவணை 2.2 : 2024 சனவரி முதல் ஏப்பிரல் வரையிலான மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானமும் செலவினமும்**

ரூபா.பில்லியன்

| விடயம் | மதிப்பிடப்பட்ட (வருடாந்த) | உண்மையான (தற்காலிக) | அடைவு (%) |
|---|---|---|---|
| **மொத்த வருமானம்** | **4,107** | **1,216** | **29.6** |
| வரி வருமானம் | 3,820 | 1,118 | 29.3 |
| வரியல்லா வருமானம் | 287 | 98 | 34.2 |
| **மொத்த செலவினம்** | **6,978** | **1,579** | **22.6** |
| மீண்டெழும் செலவினம் | 5,277 | 1,419 | 26.9 |
| மூலதனச் செலவினம் மற்றும் தேறிய பெறுகைகள் | 1,701 | 160 | 9.4 |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம், திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களம் மற்றும் அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

## 2.2 அரசாங்க வருமானம்

கொடைகள் தவிர்த்து அரசின் மொத்த வருமானம் 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இருந்த ரூபா 820.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 முதல் நான்கு மாதங்களில் 48.3 சதவீதம் அதிகரித்து ரூபா 1,216.0 பில்லியனுக்கு அதிகரித்துள்ளது. இது வரி வருமானம் 50.5 சதவீதம் அதிகரித்து ரூபா 742.6 பில்லியனில் இருந்து ரூபா 1,117.8 பில்லியன் அதிகரித்தமையினாலாகும்.

வரி வருமான அதிகரிப்பு, பின்வரும் வருமானங்களில் ஏற்பட்ட அதிகரிப்பினாலாகும்:

1) பெ.சே.வரி வரி 2024 ஜனவரி 1 முதல் நடைமுறைக்கு வரும்வகையில் 15 சதவிகிதத்திலிருந்து 18 சதவிகிதமாக அதிகரிப்பட்டதன் மூலம் 89.5 சதவிகிதம் அல்லது 199.7 பில்லியன் அடைவு, பெ.சே.வரி பதிவு வரம்பு 2024 ஜனவரி 1 முதல் ஆண்டுக்கு ரூபா 80 மில்லியனிலிருந்து ரூபா 60 மில்லியனுக்கு குறைப்பு, 2024 ஜனவரி 1 முதல் நடைமுறைக்கு வரும் பெ.சே.வரி வரி விலக்குகளின் பெரும்பகுதியை நீக்கியமை மற்றும் 2023 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 2024 இன் முதல் நான்கு மாதங்களில் 9.5 சதவிகிதம் இறக்குமதி அதிகரிப்பு.

2) வருமான வரி 27.3 சதவீதம் அல்லது ரூபா 52.3 பில்லியன் அதிகரிப்பு. இந்த உயர்வு பல காரணிகளால் ஏற்பட்டதாகும், 2023 ஜனவரி 1 முதல் நடைமுறைக்கு வரும் வரிக் கொள்கையின் முழு தாக்கம், 2023 பெப்ரவரி முதல் வருவாய் அதிகரிப்பில் பிரதிபலிக்கத் தொடங்கியமை, 2024 பெப்ரவரியில் பொதுத்துறை (10.6 சதவீதம்) மற்றும் முறைசாரா தனியார் துறை (7.1 சதவீதம் வரை) ஆகிய இரண்டிலும் ஊதியங்கள் அதிகரிக்கப்பட்டமை, பெருநிறுவன மற்றும் தனிநபர் வருமான வரிகளில் அதிகரித்த பொருளாதார நடவடிக்கை மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு திரும்பும் நேர்மறையான விளைவுகள்.

3) பெற்றோலியத்தின் மீதான உற்பத்தித்தீர்வை 165.7 சதவீதம் அல்லது ரூபா 46.0 பில்லியனாகும். இது 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் பெற்றோலிய இறக்குமதியில் 14.4 சதவிகிதம் அதிகரிப்பு மற்றும் உற்பத்தித்தீர்வையில் நிகர அதிகரிப்பு காரணமாக ஏற்பட்டது. பெற்றோல் மற்றும் டீசல் விலை 2023 ஜூன் 1 அன்று லீட்டருக்கு ரூபா 25 அதிகரித்து பின்னர் 2024 ஜனவரி 1 அன்று டீசல் லீட்டருக்கு ரூபா ரூபா 6 மற்றும் பெற்றோல் லீட்டருக்கு ரூபா 5 குறைவடைந்தது.

4) சீனி மற்றும் உருளைக்கிழங்கு விலையை ஒரு கிலோவிற்கு ரூபா 50 அதிகரிப்பு மற்றும் முக்கிய பண்டங்களின் இறக்குமதி அளவு அதிகரிப்பு காரணமாக விசேட வியாபார பண்ட அறவீடு 107.4 சதவீதம் அல்லது ரூபா 16.0 பில்லியனாக அதிகரித்தமை

5) 2023 மார்ச் 28 முதல் சுங்க இறக்குமதி வரி விகிதங்கள் 0:10:15 சதவீதத்தில் இருந்து 0:15:20 சதவீதமாக அதிகரித்ததன் காரணமாக சுங்க இறக்குமதி வரி 68.5 சதவீதம் அல்லது ரூபா 13.9 பில்லியன்கள்

6) 2024 ஜனவரி 1 முதல் பதிவு வரம்பு ஆண்டுக்கு ரூபா 120 மில்லியனில் இருந்து ஆண்டுக்கு ரூபா 60 மில்லியன் ஆக்கப்பட்டதுடன் வரி செலுத்துவோர் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் இறக்குமதி அதிகரிப்பின் தாக்கம் காரணமாக சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி 19.3 சதவீதம் அல்லது ரூபா 13.5 பில்லியன்

7) 2023 ஜூலை 1 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆக குறைவடைந்தது. மதுபானத்தின் மீதான மதுவரி வீத திருத்தங்களின் முழு தாக்கத்தை உணர்ந்தமை, பணவீக்கத்திற்கேற்ப மதுவரியின் சுட்டியாக்கம் மற்றும் 2024 ஜனவரி 1 அன்று மதுவரி விகிதங்கள் 14 சதவீதம் அதிகரித்தமை, மற்றும் 2024 ஜனவரி 12 முதல் அமுலுக்கு வரும் வகையில் வருடாந்த மதுவரி அனுமதிப் பத்திர கட்டணங்கள் திருத்தம் காரணமாக மதுபானத்தின் மீதான மதுவரி 20.6 சதவீதம் அல்லது ரூபா 12.0 பில்லியன்; மற்றும்

8) இறக்குமதி அதிகரிப்பு காரணமாக செஸ் வரி 64.3 சதவீதம் அல்லது ரூபா 10.7 பில்லியன்.

**அட்டவணை 2.3 : 2024 சனவரி - ஏப்பிரல் வரையில் வருடாந்த மதிப்பீடு மற்றும் உண்மையான வரி வருமானம்**

ரூபா.பில்லியன்

| விடயம் | வருடாந்த மதிப்பீடு | உண்மையான (சன - ஏப்) (தற்காலிகமானது) |
|---|---|---|
| **உள்நாட்டு இறைவரித் திணைக்களம்** | | |
| வருமானம் மற்றும் இலாபங்கள் மீதான வரி | 1,080 | 244 |
| பெறுமதிசேர் வரி - உள்நாட்டு | 740 | 242 |
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு - உள்நாட்டு | 195 | 63 |
| **உப மொத்தம்** | **2,015** | **549** |
| **சுங்கத் திணைக்களம்** | | |
| இறக்குமதி தீர்வைகள் | 175 | 34 |
| பெறுமதிசேர் வரி - இறக்குமதிகள் | 660 | 181 |
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு - இறக்குமதி | 55 | 20 |
| துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு | 175 | 57 |
| இறக்குமதி/ஏற்றுமதி செஸ் | 60 | 27 |
| விசேட வியாபார பண்ட அறவீடு | 95 | 31 |
| உற்பத்தி தீர்வை (விசேட ஏற்பாடுகள்) | 313 | 128 |
| சிகரட் | 143 | 35 |
| பெற்றோலியம் | 135 | 74 |
| மோட்டார் வாகனங்கள் மற்றும் பிற | 35 | 19 |
| **உப மொத்தம்** | **1,533** | **478** |
| **மதுவரித் திணைக்களம்** | | |
| மதுபானம்/புகையிலை | 232 | 71 |
| **உப மொத்தம்** | **232** | **71** |
| **ஏனையவை** | | |
| தொலைத்தொடர்பு அறவீடு | 19 | 6 |
| உரிமப் பத்திர வரி மற்றும் ஏனையவை | 22 | 13 |
| **உப மொத்தம்** | **40** | **20** |
| **மொத்த வரி வருமானம்** | **3,820** | **1,118** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

வரி அல்லாத வருமானத்தில் ஏற்பட்ட 26.8 சதவீதம் அல்லது ரூபா 20.8 பில்லியன் அதிகரிப்பும் 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வருவாய் அதிகரிப்புக்கு பங்களித்தது. இது வட்டி மூலமான வருவாய் ரூபா 11.5 பில்லியன், அபராதம், கட்டணம் மற்றும் அறவீடுகள் மூலம் 8.6 பில்லியன் மற்றும் இலாபம் மற்றும் பங்கிலாபத் தொகை 3.7 பில்லியன் அதிகரிப்பினால் ஏற்பட்டது.

**அட்டவணை 2.4 : 2024 சனவரி முதல் ஏப்பிரல் வரையில் அரசாங்க வருமான செயலாற்றுகையின் சுருக்கம்**

ரூபா.மில்லியன்


| விடயம் | 2023 | 2024 (தற்காலிகமானது) | வளர்ச்சி % |
|---|---|---|---|
| **வரி வருமானம்** | **742,578** | **1,117,762** | **50.5** |
| வருமான வரி | 191,768 | 244,048 | 27.3 |
| உள்நாட்டு நுகர்வு அடிப்படையிலான வரி | 314,848 | 412,799 | 31.1 |
| பெறுமதி சேர் வரி | 158,181 | 242,116 | 53.1 |
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு | 54,396 | 63,244 | 16.3 |
| உற்பத்தி வரி | 102,246 | 107,350 | 5.0 |
| தேச கட்டுமான வரி | 24 | 89 | 267.4 |
| இறக்குமதி அடிப்படையிலான வரி | 223,414 | 441,019 | 97.4 |
| சுங்கத் தீர்வை | 20,264 | 34,137 | 68.5 |
| பெறுமதிசேர் வரி | 65,007 | 180,768 | 178.1 |
| தேச கட்டுமான வரி | 148 | 2 | -98.4 |
| துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்கள் அபிவிருத்தி அறவீடு | 56,685 | 56,892 | 0.4 |

ரூபா.மில்லியன்

| விடயம் | 2023 | 2024 (தற்காலிகமானது) | வளர்ச்சி % |
|---|---|---|---|
| விசேட வியாபார பண்ட அறவீடு | 14,872 | 30,846 | 107.4 |
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு | 15,456 | 20,075 | 29.9 |
| உற்பத்தி தீர்வை மற்றும் மதுவரி | 34,319 | 90,922 | 164.9 |
| செஸ் அறவீடு | 16,663 | 27,376 | 64.3 |
| உரிமப் பத்திர வரிகள் மற்றும் ஏனையவை | 12,548 | 19,896 | 58.6 |
| **வரி அல்லாத வருமானம்** | **77,493** | **98,268** | **26.8** |
| **மொத்த வருமானம்** | **820,070** | **1,216,030** | **48.3** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

**வரைபு 2.1 : 2024 சனவரி முதல் ஏப்பிரல் வரையில் அரச வருமானத்தின் பங்குகள்**




*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

## வரி வருமானம்

மானியங்கள் தவிர்த்து ரூபா 1,117.8 பில்லியன் வரி வருமானம் அரசாங்க வருமானத்தில் 91.9 என கணக்கிடப்பட்டது. பெ.சே.வரி மற்றும் வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதான வரிகளின் வருமான வளர்ச்சியுடன், வரி வருமானத்தின் ஒரு பங்காக நேரடி வரிகள் 2023 இன் முதல் நான்கு மாதங்களில் பதிவு செய்யப்பட்ட 25.8 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 2024 முதல் நான்கு மாதங்களில் 21.8 சதவீதமாகக் குறைந்துள்ளது. 2024 முதல் நான்கு மாதங்களில், வரி வருமான சேகரிப்பு 2024 ஆம் ஆண்டிற்கான ரூபா 3,820.0 பில்லியன் மதிப்பீட்டில் 29.3 சதவீதமாக இருந்தது.

## வருமான வரி

வருமான வரிகள் மூலமான வருமான சேகரிப்பு 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 191.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 முதல் நான்கு மாதங்களில் 27.3 சதவீதம் அதிகரித்து ரூபா 244.0 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்தது. இது 2023 ஜனவரி 1 முதல் தனிநபர் வருமான வரி மற்றும் கூட்டுறவு வருமான வரி (கூ.வ.வரி), உயர் தனிநபர் வருமான வரி (உ.த.வ.வரி) மற்றும் நிறுத்தி வைத்தல் வரி தொடர்பாக நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை மாற்றங்களின் முழு தாக்கம் காரணமாகவாகும். மேலும், ஊதிய உயர்வு மற்றும் உண்மையான துறையில் ஏற்பட்ட பிற நேர்மறையான முன்னேற்றங்கள் மற்றும் வரி நிர்வாக நடவடிக்கைகளின் விளைவுகளும் இந்த வருமான அதிகரிப்புக்கு பங்களித்தன.

2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் உயர் தனிநபர் வருமான வரி வருமானம் 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 40.1 பில்லியனிலிருந்து கணிசமாக 62.1 சதவீதம் ரூபா 65.0 பில்லியன் அதிகரித்துள்ளது. வட்டி மீதான நிறுத்திவைப்பு வரியின் வருமானமும் . 39.3 பில்லியனிலிருந்து 40.6 சதவீதம் ரூபா 55.2 பில்லியன் அதிகரித்துள்ளது. கூட்டுறவு வருமான வரி வருவாய் ரூபா 105.0 பில்லியனில் இருந்து 112.4 பில்லியனாக 7.1 சதவீதம் அதிகரித்து, அதேசமயம் தனிநபர் வருமான வரி (த.வ.வ.) வருமானம் ரூபா 7.4 பில்லியனில் இருந்து ரூபா 11.2 பில்லியன் 51.6 சதவீதம் அதிகரித்துள்ளது.

**அட்டவணை 2.5 : 2024 சனவரி முதல் ஏப்பிரல் வரையில் வருமான வரி மூலமான வருமானங்களின் செயலாற்றுகை**

ரூபா.மில்லியன்

| வரி அடிப்படை | 2023 | 2024 (தற்காலிகமானது) | மாற்றம் % |
|---|---|---|---|
| நிறுவன மற்றும் நிறுவனமல்லாத | 111,843 | 123,591 | 10.5 |
| உழைக்கும் போது செலுத்தும் வரி | 40,082 | 64,989 | 62.1 |
| வட்டி வருமானம் மீதான வரி | 39,301 | 55,250 | 40.6 |
| ஏனைய | 543 | 218 | (59.9) |
| **மொத்தம்** | **191,769** | **244,048** | **27.3** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட வரி நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் வருமான வரிகளின் வருவாய் சேகரிப்பில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கு பங்களித்தன. இந்த நடவடிக்கைகளில், பண மீளளிப்பு செயல்முறையை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொகையைத் மீளப் பெறுதல், தனிநபர் வருமான வரி செலுத்துவோர் இலத்திரனியல் வரி கோவைப்படுத்தலை கட்டாயமாக்குதல், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு (உ.இ.தி) தனிப்பட்ட அளவில் வரி செலுத்துவோர் பரிவர்த்தனை தகவலை சமர்ப்பிக்க நிதி

நிறுவனங்களைக் கட்டாயப்படுத்துதல், மொத்தமாக ஒரு நாளில் ரூபா 500,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகை, ஒற்றை பரிவர்த்தனை அல்லது நிகழ்வை வரி நோக்கங்களுக்காக செலவுகளாக கழிக்க அனுமதிக்காது பணப் பரிவர்த்தனைகளை அதைரியப்படுத்தல். மேலும், தனிநபர்கள் மற்றும் அரச நிறுவனங்கள் போன்றவற்றின் மூலம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு இதுபோன்ற பரிவர்த்தனைகள் குறித்து வழக்கமான தகவலை பகிர்ந்துகொள்ள ஒரு ஒழுங்குமுறையை வெளியிடல்.

பெறுமதி சேர் வரி

பெயரளவிலான அடிப்படையில், பெ.சே.வரி வரியின் வருமானம் 2023 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் அடைந்த 223.2 பில்லியன் தொகையுடன் ஒப்பிடும்போது 2024 முதல் நான்கு மாதங்களில் 422.9 பில்லியன் 89.5 சதவீதம் கணிசமாக அதிகரித்து. இது 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் 30.2 சதவிகிதம் ஆகும். உள்நாட்டு நடவடிக்கைகளின் வருமானம் 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 53.1 சதவிகிதம் அதிகரித்து ரூபா 242.1 பில்லியனாக இருக்கும் அதே வேளையில், 2024 முதல் நான்கு மாதங்களில் இறக்குமதியிலிருந்து பெறப்படும் பெ.சே. வரி வருமானம் 178.1 சதவீதம் குறிப்பிடத்தக்களவு அதிகரித்து ரூபா 180.8 பில்லியனை அடைந்தது. இது நிலையான பெ.சே.வரி விகிதம் 15 சதவிகிதத்திலிருந்து 18 சதவிகிதமாக அதிகரித்தமை, பெ.சே.வரி பதிவு வரம்பைக் குறைத்தமை மற்றும் 2024 ஜனவரி 01 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பெ.சே.வரி வரி விலக்குகளில் பெரும்பகுதி நீக்கப்பட்டமை மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதன் தாக்கம் மற்றும் இறக்குமதியில் அடுத்தடுத்த அதிகரிப்பே இதற்கு முக்கியக் காரணமாகும்.

**அட்டவணை 2.6 : 2024 சனவரி முதல் ஏப்பிரல் வரையில் பெறுமதி சேர் வரி மூலமான வருமானங்களின் செயலாற்றுகை**

ரூபா.மில்லியன்

| வரி அடிப்படை | 2023 | 2024 (தற்காலிகமானது) | வளர்ச்சி % |
|---|---|---|---|
| உள்நாட்டு | 158,181 | 242,116 | 53.1 |
| இறக்குமதி | 65,007 | 180,768 | 178.1 |
| **மொத்த வருமானம்** | **223,189** | **422,884** | **89.5** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

## உற்பத்தி தீர்வை மற்றும் மதுவரி

2024 முதல் நான்கு மாதங்களில் உற்பத்தி தீர்வை மற்றும் மதுவரி மூலம் கிடைத்த வருமானம் 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் அடைந்த ரூபா 136.6 பில்லியனுடன் ஒப்பிடும் போது 45.2 சதவீதம் அதிகரித்து ரூபா 198.3 பில்லியனை அடைந்துள்ளது. பெற்றோலியம், மதுபானம், மோட்டார் வாகனங்கள் மற்றும் சிகரெட்டுகளின் வருமானம் குறைந்துள்ள போதிலும், பிற உற்பத்திப் பொருட்களில் இருந்து வருவாயில் அதிகரிப்பு ஏற்பட்டமை இதற்கு முக்கிய காரணமாகும். உற்பத்தி தீர்வை வருமானம் 17.7 சதவீதமாக கணக்கிடப்பட்டுள்ளதுடன், 2024 முதல் நான்கு மாதங்களில் சேகரிக்கப்பட்ட மொத்த வருவாயில் உற்பத்தி தீர்வை வருமானமானது 16.3 சதவீதமாகும். இது ஆண்டு மதிப்பீட்டில் 36.4 சதவீதத்தை எட்டியது.

பெற்றோலியப் பொருட்களின் வருமானம் 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் அடைந்த ரூபா 27.8 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2024 முதல் நான்கு மாதங்களில் 165.7 சதவீதம் அதிகரித்து ரூபா 73.8 பில்லியனாக இருந்தது. இது 2023 ஜூன் 01 முதல் நடைமுறைக்கு வந்த லீட்டருக்கு ரூபா 25 அதிகரிப்புடன் எரிபொருளின் மீதான உற்பத்தி தீர்வை நிகர அதிகரிப்பு மற்றும் 2024 ஜனவரி 1 முதல் நடைமுறைக்கு வந்த டீசல் விலை லீட்டருக்கு ரூபா 6 மற்றும் பெட்ரோலுக்கு லீட்டருக்கு 5 ரூபாய் குறைப்பு மற்றும் 2024 முதல் காலாண்டில் பதிவுசெய்யப்பட்ட பொருளாதார வளர்ச்சியுடன் கோட்டா முறை நீக்கம் மற்றும் தேவை அதிகரிப்புடன் எரிபொருள் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு ஆகிய காரணங்களினாலாகும்.

மதுபானங்கள் மீதான வருவாய் 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 58.2 பில்லியனிலிருந்து 2024 முதல் நான்கு மாதங்களில் 20.6 சதவீதம் அதிகரித்து ரூபா 70.2 பில்லியனை அடைந்தது. இது 2024 ஜனவரி 01 முதல் மதுவரி விகிதங்கள் 14 சதவீதம் அதிகரித்ததன் காரணமாகவாகும். இருப்பினும், 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மொத்த மதுபான உற்பத்தி 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 12.1 மில்லியன் முழுமையான லீட்டருடன் ஒப்பிடுகையில். 11.1 சதவீதம் குறைந்து 10.7 மில்லியன் முழுமையான லீட்டராக இருந்தது. 2024 முதல் நான்கு மாதங்களில் கடுமையான மதுபானத்தின் வருமானம் 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 39.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 9.8 சதவீதம் அதிகரித்து ரூபா 43.5 பில்லியனாக இருந்தது. அதேபோன்று, கழன மதுபானத்தின் வருவாய் 43.9 சதவீதம் அதிகரித்து 2024 முதல் நான்கு மாதங்களில் ரூபா 25.2 பில்லியனாக இருந்தது, மேலும் கழன மதுபானவகைகளில் இருந்தான வருமான சேகரிப்பு 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் அடையப்பெற்ற 17.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 43.9 சதவீத கணிசமான அதிகரிப்புடன் ரூபா 25.2 பில்லியனை அடைந்தது. இது 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மதுபானத்தின் மீதான மதுவரி சேகரிப்பு 2024 ஆம் ஆண்டின் மொத்த மதிப்பிடப்பட்ட வருவாயில் 30.5 சதவீதமாக இருந்தது.

2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மோட்டார் வாகனங்களுக்கான உற்பத்தித் தீர்வை 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 6.6 பில்லியன்களுடன் ஒப்பிடுகையில் 161.7 சதவீதம் அதிகரித்து ரூபா 17.2 பில்லியனாக இருந்தது. உள்நாட்டு வாகனங்களை பொருத்தும் தொழிலை ஊக்குவிக்கும் வகையில், மோட்டார் வாகனங்களின் இறக்குமதிக்கான தற்காலிகக் கட்டுப்பாடுகளை semi-knock-down முறையில் ஓரளவு தளர்த்தியமை இதற்குக் காரணமாகும்.

மேலும், 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் இனிப்பு பானங்கள், குளிர்சாதனப் பெட்டிகள், பாம் எண்ணெய் கொழுப்பு அமிலம் போன்ற தீர்வை விலக்கக்கூடிய பொருட்களிலிருந்தான உற்பத்தி தீர்வை வருமானம் 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் அடைந்த ரூபா 1.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 61.2 சதவீதம் அதிகரித்து ரூபா 2.2 பில்லியனை அடைந்தது. இது இறக்குமதி கட்டுப்பாடுகளின் பகுதியளவான தளர்வின் விளைவை பிரதிபலிக்கிறது.

இருப்பினும், சிகரெட் வருமானம் 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் அடைந்த 42.7 பில்லியனுடன் ஒப்பிடுகின்ற போது, 2024 ஜனவரி 1 முதல் ஆண்டுதோறும் சராசரி பணவீக்கத்திற்கு வரியை சரிசெய்யும் அடிப்படையில் அனைத்து வகையான சிகரெட்டுகளின் உற்பத்தி தீர்வை விகிதம் 14 சதவிகிதம் அதிகரித்த போதிலும் 18.1 சதவீதம் குறைந்து ரூபா 35.0 பில்லியனை அடைந்திருந்தது. வரி அதிகரிப்புடன் கூடிய மேல்நோக்கிய விலை மாற்றங்களின் விளைவாக சிகரெட்டுகளின் விற்பனை குறைந்ததுடன், (60 மிமீ முதல் 67 மிமீ நீளம் வரையானவை தவிர) ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் சிகரெட்டுகள் மீதான மதுவரி வருவாயைக் குறைத்தது.


**அட்டவணை 2.7 : 2024 சனவரி முதல் ஏப்பிரல் வரையில் உற்பத்தி தீர்வை மற்றும் மதுவரி செயலாற்றுகை**

ரூபா.மில்லியன்

| வரி அடிப்படை | 2023 | 2024 (தற்காலிகமானது) | வளர்ச்சி % |
|---|---|---|---|
| மதுபானம் | 58,158 | 70,163 | 20.6 |
| சிகரெட்டு | 42,706 | 34,961 | -18.1 |
| மோட்டார் வாகனங்கள் | 6,559 | 17,163 | 161.7 |
| பெற்றோலியம் | 27,759 | 73,759 | 165.7 |
| ஏனையவை | 1,382 | 2,227 | 61.1 |
| மொத்தம் | **136,564** | **198,272** | **45.2** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

**வரைபு 2.2 : 2023 மற்றும் 2024 சனவரி முதல் ஏப்பிரல் வரையில் உற்பத்தி தீர்வை மற்றும் மதுவரி செயலாற்றுகை**




*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

## ஏனைய வரிகள்

சுங்க இறக்குமதி தீர்வை, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி வரி, விசேட பண்டங்கள் அறவீடு, சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு தொலைத்தொடர்பு வரி மற்றும் செஸ் வரி போன்ற பிற வரிகளின் மூலம் கிடைக்கும் வருவாய் 2024 முதல் நான்கு மாதங்களில் 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் அடைந்த 191.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 32.2 சதவீதம் அதிகரித்து ரூபா 252.6 பில்லியன் பதிவு செய்யப்பட்டது.

சுங்க இறக்குமதி வருவாய் 2024 முதல் நான்கு மாதங்களில் 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் அடைந்த 20.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க வகையில் 68.5 சதவீதம் அதிகரித்து ரூபா 34.1 பில்லியனாக இருந்தது, இது முக்கியமாக 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் காரணமாகவும், 2023 மார்ச் மாதம் சுங்க இறக்குமதி தீர்வை விகிதங்கள் 0 சதவிகிதம், 10 சதவிகிதம் மற்றும் 15 சதவிகிதத்தில் இருந்து 0 சதவிகிதம், 15 சதவிகிதம் மற்றும் 20 சதவிகிதம் என மேல்நோக்கித் திருத்தப்பட்டதன் காரணமாகவும் ஆகும். 2024 முதல் நான்கு மாதங்களில் து. வி. நி. அபிவிருத்தி அறவீட்டிலிருந்து சேகரிக்கப்பட்ட வருவாய் 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் அடைந்த ரூபா 56.7 பில்லியனில் இருந்து, 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் காரணமாக 2023 ஏப்ரலில் 1,631 பொருட்களையும் 2024 ஜனவரியில் 26 பொருட்களையும் படிப்படியாக நீக்கிய போதிலும் 0.4 சதவீதம் அதிகரித்து ரூபா 56.9 பில்லியனை அடைந்தது. 2024 முதல் நான்கு மாதங்களில் சேகரிக்கப்பட்டது. து. வி. நி. அபிவிருத்தி அறவீடு 2024 ஆம் ஆண்டுக்கான ரூபா 175 பில்லியன் ஆண்டு மதிப்பீட்டின் 32.5 சதவீதத்தை பிரதிபலிக்கிறது. வி. ப. அறவீட்டு வரியிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானமானது 2023 மூன்றாம் காலாண்டில் இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதாலும், சீனி மீதான விகிதங்கள் மேல்நோக்கி திருத்தப்பட்டதாலும் கணிசமாக 107.4 சதவீதம் அதிகரித்து ரூபா 30.8 பில்லியனை அடைந்தது. 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு வரியிலிருந்து கிடைத்த வருவாயானது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 19.3 சதவீதம் அதிகரித்து ரூபா 83.3 பில்லியனாக கணிசமாக அதிகரித்திருந்தது. அதேபோன்று, 2024 முதல் நான்கு மாதங்களில் தொலைத்தொடர்பு வரி வருமானம் 2023 இன் அதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 20.7 வீதத்தால் அதிகரித்து ரூபா 6.4 பில்லியனை அடைந்துள்ளது.

2024 முதல் நான்கு மாதங்களில் செஸ் வரியின் மூலமான வருவாய் 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் காரணமாக 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் அடையப்பெற்ற 16.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 64.3 சதவீதம் அதிகரித்து ரூபா 27.4 பில்லியனாக இருந்தது. அதன்படி, 2024 முதல் நான்கு மாதங்களில்

2023 இன் அதே காலகட்டத்தில் அடையப்பெற்ற 16 பில்லியனிலிருந்து இறக்குமதி மீதான செஸ் வரியிலிருந்து வருவாய் கணிசமாக 66.9 சதவீதம் அதிகரித்து ரூபா 26.7 பில்லியனாக இருந்தது. இதற்கிடையில், 2024 முதல் நான்கு மாதங்களில் ஏற்றுமதி மீதான செஸ் வரி வருவாய் நாணய மாற்று விகித உயர்வின் தாக்கம் காரணமாக 2023 இன் அதே காலகட்டத்தில் அடையப்பெற்ற 0.70 பில்லியனிலிருந்து 1.6 சதவிகிதம் குறைந்து ரூபா 0.69 பில்லியன் பதிவானது. 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் சேகரிக்கப்பட்ட செஸ் வருவாய் 2024 ஆம் ஆண்டிற்கான ரூபா 60.0 பில்லியன் ஆண்டு மதிப்பீட்டின் 45.6 சதவிகித அடைவாகும்.

### வரி அல்லாத வருமானம்

வரி அல்லாத வருமானமானது, 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் அடைந்த ரூபா 77.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் வட்டி வருமானம் மற்றும் அபராதங்கள், கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் ஆகியவற்றிலிருந்து வருவாய் அதிகரித்ததன் காரணமாக 26.8 சதவீதம் அதிகரித்து ரூபா 98.3 பில்லியனை அடைந்தது. அதன்படி, வட்டி வருமானம் 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் அடைந்த 3.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் கடன் வட்டி விகிதங்களின் அதிகரிப்பு காரணமாக 372.9 சதவீதம் குறிப்பிடத்தக்களவு அதிகரித்து ரூபா 14.5 பில்லியனை அடைந்தது. மேலும், அபராதம், கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் மூலமான வருவாயானது 2024 முதல் நான்கு மாதங்களில் 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் அடைந்த 39.6 பில்லியன்களில் இருந்து மோட்டார் போக்குவரத்து திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் மற்றும் ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படும் கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் அதிகரிப்பட்டதன் காரணமாக 21.8 சதவீதம் குறிப்பிடத்தக்களவு அதிகரித்து ரூபா 48.3 பில்லியனை அடைந்தது. அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் இலாபம் மற்றும் பங்கிலாப பற்றுச்சீட்டுகளும் 2024 முதல் நான்கு மாதங்களில் 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் அடைந்த 9.6 பில்லியனிலிருந்து 38.4 சதவீதம் அதிகரித்து 13.2 பில்லியனை அடைந்தது. அதே சமயம் சமூக பாதுகாப்பு பங்களிப்புகளின் வருவாய் 2024 முதல் நான்கு மாதங்களில் 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் அடைந்த 11.3 பில்லியனிலிருந்து 10.9 சதவீதம் அதிகரித்து ரூபா 12.5 பில்லியனை அடைந்தது. அதேசமயம், வாடகை வருவாய் மூலமான வருவாயானது 2024 முதல் நான்கு மாதங்களில் 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் அடைந்த 1.3 பில்லியனில் இருந்து 78.2 சதவீதம் அதிகரித்து ரூபா 2.4 பில்லியனை அடைந்தது. ரூபா 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில். 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் சேகரிக்கப்பட்ட வரி அல்லாத வருவாய் 2024ஆம் ஆண்டிற்கான ரூபா 287.0 பில்லியன் ஆண்டு மதிப்பீட்டின் 34.2 சதவிகிதமாகும்.

**அட்டவணை 2.8 : அரசாங்க வருமான மாறுபடுதலுக்கான பகுப்பாய்வு**

ரூபா. பில்லியன்

| விடயம் | 2023 சனவரி-ஏப்ரல் | 2024 (வருடாந்த மதிப்பீடு) | 2024(அ) சனவரி-ஏப்ரல் | மாறுபடுதலுக்கான முக்கிய காரணங்கள் |
|---|---|---|---|---|
| வருமான வரிகள் | 191.8 | 1,080.0 | 244.0 | 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வருமான வரி வருமானம் 27.3 சதவிகிதம் அதிகரித்துள்ளது, இது ஆண்டு மதிப்பீட்டில் 22.6 சதவிகிதம் ஆகும். இதற்கு முக்கியமான காரணங்கள்<br>- 2024ல் முழு நான்கு மாதங்களுக்கும் 2023 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை மாற்றங்களின் முழு தாக்கத்தை எய்தப்பட்டமை<br>- பொது மற்றும் தனியார் துறையினரின் ஊதிய உயர்வு மற்றும்<br>- பொருளாதார நடவடிக்கைகள் படிப்படியாக இயல்படைந்தமை |
| பெறுமதி சேர் வரி | 223.2 | 1,400.0 | 422.9 | 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் பெறுமதி சேர் வரி வருவாய் 89.5 சதவிகிதம் கணிசமாக அதிகரித்துள்ளது மற்றும் தேறப்பட்ட பெறுமதி சேர் வரி வருவாய் ஆண்டு மதிப்பீட்டில் 30.2 சதவிகிதமாக இருந்தது. இதற்கான முக்கியமான காரணங்கள்:<br>- 2024 சனவரி 01 முதல் பெறுமதி சேர் வரி விகிதம் 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக உயர்த்தப்பட்டது<br>- பெறுமதி சேர் வரி பதிவு வரம்பை 2024 சனவரி 1 முதல் ஆண்டுக்கு ரூபா 80 மில்லியனிலிருந்து ரூபா 60 மில்லியன் ஆகக் குறைத்தல்.<br>- 2024 சனவரி 1 முதல் நடைமுறைக்கு வரும் முக்கிய பொருட்களுக்குப் பொருந்தும் பெரும்பாலான பெறுமதி சேர் வரி விலக்குகளை நீக்குதல் மற்றும்<br>- மொத்த இறக்குமதியில் 9.5 சதவீதத்தால் அதிகரித்தல். |

ரூபா. பில்லியன்

| விடயம் | 2023 சனவரி-ஏப்ரல் | 2024 (வருடாந்த மதிப்பீடு) | 2024(அ) சனவரி-ஏப்ரல் | மாறுபடுதலுக்கான முக்கிய காரணங்கள் |
|---|---|---|---|---|
| உற்பத்தி தீர்வை மற்றும் மதுவரி | 136.6 | 545.0 | 198.3 | 2024 இன் முதல் நான்கு மாதங்களில் உற்பத்தி தீர்வை மற்றும் மது வரியிலிருந்து வருவாய் 45.2 சதவீதத்தால் ரூபா 198.3 பில்லியனாக அதிகரித்ததோடு இவ் வரி வருவாய் ஆண்டு மதிப்பீட்டின்படி 36.4 சதவீதமாகவும் காணப்பட்டது. இதற்கான முக்கியமாக காரணமாக இருப்பது:<br><br>– அனைத்து வகையான பெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதி மீதான உற்பத்தி தீர்வையின் நிகர அதிகரிப்பு காரணமாக பெற்றோலிய பொருட்கள் மீதான உற்பத்தி தீர்வை வருவாய் அதிகரிப்பு மற்றும் பெற்றோல் மற்றும் டீசல் வரி விகிதம் 2023 ஜுன் 01 முதல் லீட்டருக்கு ரூபாய் 25 மற்றும் 2024 ஜனவரி 01 அன்று டீசல் விலைகள் லீட்டருக்கு ரூபாய் 6 மற்றும் பெற்றோலுக்கு ரூபாய் 5 இனால் குறைந்தமை மற்றும் பெற்ரோலிய இறக்குமதி 14.4 சதவிகிதம் அதிகரித்தமை .<br><br>– புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு மின்சார வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதித்ததாலும், சில வாகன வகைகளுக்கு தற்காலிகமாக விதிக்கப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்தியதாலும் மோட்டார் வாகன இறக்குமதி அதிகரிப்புடன் மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தி வரி வருவாய் அதிகரிப்பு மற்றும்<br><br>– 2023 ஜுலை இல் நடைமுறைப்படுத்தப்பட்ட மதுபானத்தின் மீதான மது வரி விகித திருத்தங்களின் முழு தாக்கத்தை அடைந்ததால் மது வரியிலிருந்து வருவாய் அதிகரிப்பு, பணவீக்கத்திற்கேற்ப மதுவரி/ உற்பத்தி வரிக்கான சுட்டியின் மூலம் சனவரி 2024 இல் விகிதங்கள் 14 சதவீதம் அதிகரித்தல் மற்றும் 2024 சனவரி 12 முதல் வருடாந்த மதுவரி உரிமக் கட்டணம் திருத்தம். |
| இறக்குமதித் தீர்வை | 20.3 | 175.0 | 34.1 | – 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் இறக்குமதி வரியின் வருவாய் 68.5 சதவிகிதம் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டியது. மதிப்பீட்டின் படி இறக்குமதி வரி 19.5 ஆக இருந்து. இது முக்கியமாக அடையப்பட்டதற்கான காரணங்களாக:<br><br>– 2023 மார்ச் 29 முதல் இறக்குமதி தீர்வை விகிதங்களை 0 சதவீதம், 10 சதவீதம் மற்றும் 15 சதவீதம் முதல் 0 சதவீதம், 15 சதவீதம் மற்றும் 20 சதவீதம் வரை மேல் நோக்கி திருத்தியதன் முழு தாக்கம் மற்றும்<br><br>– 2024 முதல் நான்கு மாதங்களில் இறக்குமதி 9.5 சதவீதத்தினால் அதிகரித்தமை. |
| துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு | 56.7 | 175.0 | 56.9 | துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டிலிருந்தான வருமானம் 0.4 சதவீதமாக ஓரளவு அதிகரித்துள்ளது. இதற்கு காரணம்:<br><br>– 2023 ஏப்ரல் 4 முதல் காப்பு வரிகளை படிப்படியாக நீக்குவதன் ஒரு பகுதியாக, மொத்த துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டு பொறுப்புப் பொருட்களில் 20 சதவீதம் விலக்களிக்கப்பட்டமை<br><br>– 2024 மார்ச் 29 முதல் நடைமுறைக்கு வரும் இலங்கை - சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் விதிகளின்படி சிங்கப்பூரில் இருந்து அத்தகைய பொருட்களை இறக்குமதி செய்யும் போது 3,117 பொருட்களுக்கு சலுகை விலைகள் மற்றும் 595 பொருட்களுக்கு விலக்களிப்பதற்கு<br><br>2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் இறக்குமதியின் அதிகரித்த மதிப்பின் தாக்கம் காரணமாக வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 32.5 வீதம் எட்டப்பட்டது. |

ரூபா. பில்லியன்

| விடயம் | 2023 சனவரி-ஏப்ரல் | 2024 (வருடாந்த மதிப்பீடு) | 2024(அ) சனவரி-ஏப்ரல் | மாறுபடுதலுக்கான முக்கிய காரணங்கள் |
|---|---|---|---|---|
| விசேட வியாபார பண்ட அறவீடு | 14.9 | 95.0 | 30.8 | சீனி மற்றும் உருளைக்கிழங்கு மீதான வரி விகிதங்கள் மேல்நோக்கி திருத்தப்பட்டமை மற்றும் முக்கிய பண்டங்களின் இறக்குமதி அதிகரிப்பு காரணமாக விசேட வியாபார பண்ட வரியின் வருமானம் 107.4 வீதத்தால் அதிகரித்துள்ளதோடு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 32.5 வீதம் அடையப்பெற்றது. |
| சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு | 69.9 | 250.0 | 83.3 | சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரிக்கு பொருந்தக்கூடிய பதிவு வரம்பு 2024 சனவரி 1 முதல் ஆண்டுக்கு ரூபா 120 மில்லியனிலிருந்து ஆண்டுக்கு ரூபா 60 மில்லியன் ஆகக் குறைக்கப்பட்டதன் விளைவாக வரி செலுத்துவோர் அதிகரித்ததன் காரணமாக 2024 இன் முதல் நான்கு மாதங்களில் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரியிலிருந்து வருவாய் 19.3 சதவீதம் அதிகரித்ததுடன் 2024 இன் முதல் நான்கு மாதங்களில் அதிகரித்த இறக்குமதியிலும் தாக்கம் செலுத்தியது.<br><br>சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரியிலிருந்து வருவாய் சேகரிப்பு ஆண்டு மதிப்பீட்டில் 33.3 சதவீதத்தை எட்டியுள்ளது. |
| ஏனைய வரிகள் | 29.4 | 100.0 | 47.4 | 2024 முதல் நான்கு மாதங்களில் இதர வரிகளின் வருவாய் வசூல் 61.2 சதவீதம் அதிகரித்துள்ளது, இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டில் 47.4 ஆக இருந்தது.<br>- இறக்குமதி அதிகரிப்பின் காரணமாக செஸ் வரி 64.3 சதவீதத்தினாலும்<br>- தொலைத்தொடர்பு வரி 20.7 சதவீதம் மற்றும்<br>- இதர வரிகள் 86.5 சதவீதத்தினாலும் அதிகரித்தது. |
| வரியல்லா வருமானம் | 77.5 | 287.0 | 98.3 | வட்டி வருமானம், வாடகை, அபராதம், கட்டணங்கள் மற்றும் விதிப்பனவுகள் மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களிருந்தான இலாபம் மற்றும் பங்கிலாபம் ஆகியவற்றின் அதிகரித்த வருவாய் செயல்திறன் காரணமாக வரி அல்லாத வருவாய் வசூல் கணிசமாக 26.8 சதவீதம் அதிகரித்துள்ளது.<br><br>2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வரி அல்லாத வருவாய் 2023 ஆண்டு மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் 34.2 சதவீதமாக எட்டப்பட்டது.. |
| **மொத்தம்** | **820.1** | **4,107.0** | **1,216.0** | |

*அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்டது*
*(அ) தற்காலிகமானது*

**கட்டம் 2.1 | முக்கிய அரசிறை நடவடிக்கைகள்: சனவரி - யூன் 2024**

| பயன்வலு திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **வருமான வரி- 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள்** | |
| 01.04.2024 | 21.03.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2376/25<br>- அரசாங்க நிறுவனங்கள் உட்பட நபர்களால் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு கிரமமான அடிப்படையில் பகிரப்பட வேண்டிய தகவல்களை விதித்துரைப்பதற்கு. |
| 06.06.2024 | 06.06.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2387/40<br>- ஸ்ரீ சத்ய சாயி கருணா நிலையத்தை அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனமாக வெளிப்படுத்துவதற்கு |
| **2010 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம்** | |
| 12.01.2024 | 12.01.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2366/33<br>- 2022 ஆம் ஆண்டின் சீட்டாட்டத் தொழில் உரிம ஒழுங்குவிதி இல. 01 இன் பிரிவு 05 ஐ பதிலிடுவதோடு அதில் கொடுக்கப்பட்டுள்ள உரிமக் கட்டணம் மற்றும் உரிமம் புதுப்பித்தல் கட்டணக் கட்டமைப்புகளை திருத்தும் அட்டவணை 11 இனை இணைப்பதற்கும். |
| 02.02.2024 | 02.02.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2369/42<br>- ஒழுங்குவிதியின் அட்டவணை 11 இல் கொடுக்கப்பட்டுள்ள உரிமக் கட்டணங்கள் மற்றும் உரிமம் புதுப்பித்தல் கட்டணங்களுடன் தொடர்புடைய முதலீட்டு அளவுகோல்களைத் திருத்துவதற்கு. |

**கட்டம் 2.1 | முக்கிய அரசிறை நடவடிக்கைகள்: சனவரி - யூன் 2024 (தொடர்ச்சி)**

| பயன்வலு திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 22.04.2024 | 22.04.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2381/16<br><br>- 2024 சனவரி 12 தேதியிட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2366/33 மற்றும் 2024 பெப்ரவரி 02 தேதியிட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2369/42 ஆகியவற்றில் உள்ள சிங்கள மொழிபெயர்ப்பு பிழைகளை திருத்துவதற்கு. |
| 29.05.2024 | 29.05.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2386/09<br><br>- ஒழுங்குவிதியின் அட்டவணை 11 இல் கொடுக்கப்பட்டுள்ள உரிமக் கட்டணங்கள் மற்றும் உரிமம் புதுப்பித்தல் கட்டணங்களுடன் தொடர்புடைய முதலீட்டு அளவுகோல்களைத் திருத்துவதற்கு. |
| **சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு - 2022 ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டுச் சட்டம்** | |
| 01.01.2024 | 2024 இன் சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு (திருத்தம்) சட்ட இல.15<br><br>- சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டுக்கு பொருந்தும் வகையில் பதிவு வரம்பை ஆண்டுக்கு ரூபா120 மில்லியனிலிருந்து ஆண்டுக்கு ரூபா 60 மில்லியனிற்கு குறைப்பதற்கு |
| **பெறுமதி சேர் வரி - 2002 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம்** | |
| 01.01.2024 | 19.12.2023 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2363/22<br><br>- பெறுமதி சேர் வரியை 15 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக உயர்த்துவதற்கு. |
| 01.01.2024 | 2003 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (திருத்தம்) சட்டம்<br><br>- முக்கிய பொருட்களுக்கு பொருந்தக்கூடிய பெரும்பாலான பெறுமதி சேர் வரி விலக்குகளை அகற்றுவதற்கு. |
| 01.01.2024 | 2004 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க 2024 பெறுமதி சேர் வரி (திருத்தம்) சட்டம்<br><br>- பெறுமதி சேர் வரி பதிவு வரம்பை ஆண்டுக்கு ரூபா 80 மில்லியனிலிருந்து ஆண்டுக்கு ரூபா 60 மில்லியனிற்கு குறைப்பதற்கு |
| **உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) – 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்** | |
| 01.01.2024 | 31.12.2023 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2364/36<br><br>- அலகு விகிதங்கள் கொண்ட அனைத்து கலால் வரிகளையும் ஒரு குறியீட்டு அடிப்படையில் 14 சதவிகிதத்தினால் திருத்தவும் மற்றும் ஒரு லீட்டர் பெட்ரோலின் மீதான கலால் வரியை 5 ரூபாயினாலும், டீசலினை லீட்டருக்கு 6 ரூபாயினாலும் குறைப்பதற்கு |
| **மதுவரி (கட்டளைச் சட்டம்) – மது வரி கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 52)** | |
| 01.01.2024 | மது வரி அறிவித்தல் இல. 04/2023 (31.12.2023 இன் வர்த்தமானி அறிவிப்பு இல. 2364 /35)<br><br>- மது வரிக்கான வருடாந்த பணவீக்க சீராக்கலினை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் அனைத்து வகையான மதுபானங்கள் மீதான கலால் வரிகளை 14 சதவீதம் உயர்த்துவதற்கு. |
| 12.01.2024 | மது வரி அறிவித்தல் இல. 01/2024 (12.01.2024 இன் வர்த்தமானி அறிவிப்பு இல. 2366 /38)<br><br>- ஆண்டு மதுவரி உரிமக் கட்டணங்களைத் திருத்துவதற்கு. |
| 12.01.2024 | மது வரி அறிவித்தல் இல. 02/2024 (12.01.2024 இன் வர்த்தமானி அறிவிப்பு இல. 2366 /39)<br><br>- 902 ஆம் இலக்க மது வரி அறிவித்தலிள்ள விதிகளை திருத்துவதற்கு. |
| 01.02.2024 | மது வரி அறிவித்தல் இல. 03/2024 (01.02.2024 இன் வர்த்தமானி அறிவிப்பு இல. 2369/32)<br><br>- ஆண்டு மதுவரி உரிமக் கட்டணங்களைத் திருத்துவதற்கும் ஒரு நேர தொழில் நுழைவுக் கட்டணத்தை அறிமுகப்படுத்துவதற்கும். |

**கட்டம் 2.1 I முக்கிய அரசிறை நடவடிக்கைகள்: சனவரி - யூன் 2024 (தொடர்ச்சி)**

| பயன்வலு திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு – 2011ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்.** | |
| 01.01.2024 | 31.12.2023 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2364/37<br><br>- 2023 வரவுசெலவுத் திட்ட முன்மொழிவு இல. 34.6 (காப்பீட்டு வரிகளை படிப்படியாக நீக்குதல்) இன் பிரகாரம் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டினை ஐந்து (05) ஆண்டுகளுக்குள் முழுமையாக நீக்கப்பட வேண்டியதால் பெற்றோல், டீசல் மற்றும் உரங்கள் உள்ளிட்ட 26 அத்தியாவசியப் பொருட்களுக்கு துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டிலிருந்து விலக்களிப்பதற்கு, |
| 29.03.2024 | 28.03.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2377/39<br><br>- இலங்கை - சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் விதிகளின்படி, 3,117 பொருட்களுக்கு சலுகைக் கட்டணங்களைப் பயன்படுத்துதல் மற்றும் சிங்கப்பூரில் இருந்து அத்தகைய பொருட்களை இறக்குமதி செய்யும் போது 595 பொருட்களுக்கு விலக்கு அளித்தல். |
| **செஸ் வரி - 1979 ஆம் ஆண்டின் 40 இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்,** | |
| 06.01.2024 | 04.01.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2365/50<br><br>- இலங்கை - சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் பிரகாரம் செஸ் வரி தொடர்பான கட்டண தாராளமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தை வெளியிடுவதற்கு. |
| **வரி அல்லாத (கட்டணங்கள் மற்றும் விதிப்பனவுகள்) – 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம்** | |
| 01.02.2024 | 12.01.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2366/34<br><br>- சந்தை இடைத்தரகர்கள் மற்றும் சந்தை நிறுவனங்களுக்காக பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் வசூலிக்கப்படும் கட்டணங்கள் மற்றும் விதிப்பனவுகளை மறுபரிசீலனை செய்வதற்காக. |
| **சுங்க இறக்குமதி தீர்வை - 1962 ஆம் ஆண்டின் 19 இலக்க வருமான பாதுகாப்பு சட்டம்,** | |
| 06.01.2024 | 06/2023 ஆம் இலக்க வருமான பாதுகாப்பு சட்டம் (04.01.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2365/51)<br><br>- இலங்கை சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் 1,222 கட்டண வரிகளில் சுங்க இறக்குமதி தீர்வையின் சுங்கவரி தாராளமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் வகை "6" இன் கீழ் ஆறு வருடாந்த தவணைகளில் இரண்டாவது தவணையை நீக்குவதற்கு |
| **விசேட வியாபார பண்ட அறவீடு – 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட பண்ட அறவீட்டுச் சட்டம்,** | |
| 02.01.2024 | 02.01.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2365/04<br><br>- 02.01.2024 முதல் 21.01.2024 வரை அமலுக்கு வரும் வகையில் அரிசி இறக்குமதியில் ஒரு கிலோவுக்குரூபா 64.00 தீர்வை விலக்கு அளிப்பதற்கு |
| 08.01.2024 | 07.01.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2365/84<br><br>- 2024 டிசம்பர் 31 வரை உருளைக்கிழங்கு இறக்குமதிக்கான விசேட வியாபார பண்ட அறவீட்டைத் தொடர்வதற்கு. |
| 20.02.2024 | 19.02.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2372/06<br><br>- சோளம், உளுந்து மற்றும் பச்சைப்பயறு இறக்குமதியின் மீதான நடைமுறையில் உள்ள விசேட வியாபார பண்ட அறவீட்டினை செல்லுபடியாகும் காலத்தை நீடிக்கவும், அதேசமயம் கௌபி மற்றும் குரக்கன் மீதான விசேட வியாபார பண்ட அறவீடு விகிதத்தை கிலோவிற்கு ரூபா.70.00 இலிருந்து ரூபா 300.00 விற்கு அதிகரிப்பதற்கும் |
| 02.03.2024 | 01.03.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2373/42<br><br>- 2024 ஏப்ரல் 11 வரை ரமலான் பண்டிகைக் காலத்தைக் கருத்தில் கொண்டு பேரிச்சம்பழம் இறக்குமதிக்கு ஒரு கிலோவுக்கு ரூ.199 வரி விலக்கு அளிப்பதற்காக. |
| 27.03.2024 | 26.03.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல. 2377/17<br><br>- 2024 ஏப்ரல் 30 பண்டிகைக் காலத்தைக் கருத்தில் கொண்டு 01 கிலோ ரோஸ் வெங்காயத்தின் இறக்குமதிக்கு ரூபா10 என்ற சலுகை விசேட வியாபார பண்ட அறவீட்டு விகிதத்தைப் பயன்படுத்தவும், 02.01.2024 முதல் 21.01.2024 வரையிலான காலக்கட்டத்தில் ஒரு கிலோ அரிசி இறக்குமதிக்கு ரூபா 64 அறவீட்டினை விலக்கினை நீடிக்கவும் |

கட்டம் 2.1 I முக்கிய நிதி நடவடிக்கைகள்: சனவரி - யூன் 2024 (தொடர்ச்சி)

| பயன்வலு திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள்- 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) சட்டம்** | |
| 11.01.2024 | 2024 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (11.01.2024 இன் வர்த்தமானி அறிவிப்பு இல. 2366/19<br>- பல அரசு நிறுவனங்களின் குறிப்பிட்ட தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதித்தல் |
| 07.02.2024 | 2024 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (07.02.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல 2370/15).<br>- 2024 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளினால் வெளியிடப்பட்ட (2312/78 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது) ஒழுங்குவிதிகள் இலக்கம் 12(அ) ஐ திருத்துவதன் மூலம் வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு முழுமையாக மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட காலத்தை நீடிக்க. |
| 19.02.2024 | 2024 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (19.02.2024 இன் வர்த்தமானி அறிவித்தல் இல 2372/04)<br>- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் பதனிடல் மற்றும் மீள்ஏற்றுமதி நோக்கங்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட வாசனை திரவியங்களை (எ.கா. மிளகு, ஜாதிக்காய் மற்றும் மசாலா போன்றவை) இறக்குமதி செய்ய அனுமதிப்பதற்கு. |
| 29.02.2024 | 2024 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (28.02.2024 இன் வர்த்தமானி அறிவிப்பு இல. 2373/28)<br>- டிபி மற்றும் டிஏ கட்டண விதிமுறைகளின் முன் ஒப்புதல் தேவையுடன் தொடர்புடைய இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஒழுங்குமுறையின் ஒழுங்குவிதி இல.06 இனை நீக்குவதற்கு, |
| 19.03.2024 | 2024 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (19.03.2024 இன் வர்த்தமானி அறிவிப்பு இல. 2376/14)<br>- பல அரசு நிறுவனங்களின் குறித்துரைத்த தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதித்தல். |
| 08.04.2024 | 2024 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (08.04.2024 இன் வர்த்தமானி அறிவிப்பு இல. 2379/03)<br>- ஒழுங்குவிதிகளின் அட்டவணை ரோமன் இல.5 இல் வகைப்படுத்தப்பட்டு பட்டியலிடப்பட்ட மொத்த அளவிளான 2,000 மெட்ரிக் தொன் உளுந்து இறக்குமதி தொடர்பான இறக்குமதி கட்டுப்பாட்டு ஒழுங்குவிதியை (ஐசிஎல்) வெளியிடுவதற்காக |
| **புறப்படுகை அறவீடு - 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க நிதிச் சட்டம்** | |
| 01.02.2024 | 01.02.2024 இன் வர்த்தமானி அறிவிப்பு இல. 2369/27<br>- கொழும்பு சர்வதேச விமான நிலையம் மற்றும் யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்திலிருந்து செயல்படத் தொடங்கும் விமானங்கள் மூலம் இலங்கையை விட்டு வெளியேறும் நபருக்கு 60 அமெரிக்க டொலர்களின் பொருந்தக்கூடிய புறப்படுகை அறவீட்டிலிருந்து 30 அமெரிக்க டொலர் சலுகை விகிதத்திற்கு, ஒரு வருடத்திற்கு நீடிப்பு வழங்குவதற்காக |
| 07.03.2024 | 06.03.2024 வர்த்தமானி அறிவிப்பு இல. 2374/19<br>- படகு மூலம் இலங்கையை விட்டு வெளியேறும் நபருக்கு புறப்படுகை அறவீட்டில் அமெரிக்க டொலர் 05 மற்றும் கப்பல் மூலம் இலங்கையை விட்டு வெளியேறும் நபருக்கு அமெரிக்க டொலர் 20 என்ற சலுகை விகிதத்தை 2024 மார்ச் 07 முதல் 2026 டிசம்பர் 31 வரை மூன்று வருட காலத்திற்கு 60 அமெரிக்க டொலர்கள் பொருந்தக்கூடிய வரியிலிருந்து வழங்குதல். |
| **மோட்டார் வாகனத்தின் மீதான சொகுசு வரி - 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டம்** | |
| 24.01.2024 | 24.01.2024 இன் வர்த்தமானி அறிவிப்பு இல. 2368/24<br>- 10.02.2023 இன் அதிவிசேட வர்த்தமானி இல. 2318/53 இல் வெளியிடப்பட்ட, பணம் அனுப்புதல், நாணயக் கடிதங்களைத் திறப்பது மற்றும் வாகனங்களைப் பதிவு செய்வதற்கான பரிசீலனை காலத்தை மேலும் நீடிக்க (புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு ரூபா 6 மில்லியனிலிருந்து ரூபா 12 மில்லியன் வரை முழு மின்சார மோட்டார் வாகனங்களின் வரியற்ற வரம்பினை அதிகரித்தல்) |

## 2.3 அரசாங்க செலவினம்

2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 1,645.6 பில்லியனாக இருந்த அரசாங்கச் செலவினம், 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 4.0 சதவீதமாக குறைவடைந்து ரூபா 1,579.2 பில்லியனாக இருந்தது. 2023 இன் இதே காலப்பகுதியில் ரூபா 1,485.0 பில்லியனாகக் காணப்பட்ட மீண்டெழும் செலவினம் 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 4.4 சதவிகிதமாக குறைந்து ரூபா 1,419.3 பில்லியனாக, குறைந்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 160.6 பில்லியனாக இருந்த மூலதனச் செலவினம் மற்றும் நிகரக் கடன் 2024 முதல் நான்கு மாதங்களில் ரூபா 159.9 பில்லியனாக 0.4 சதவீதம் குறைந்துள்ளது.

**அட்டவணை 2.9 : 2024 சனவரி முதல் ஏப்பிரல் வரையில் அரசாங்க செலவினங்களின் செயலாற்றுகை**

ரூபா.மில்லியன்

| விடயம் | 2023 | 2024 (தற்காலிகமானது) |
|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | **1,484,984** | **1,419,264** |
| சம்பளம் | 303,310 | 301,811 |
| ஓய்வூதியம் | 105,924 | 123,643 |
| வட்டிக் கொடுப்பனவு | 818,969 | 726,122 |
| ஏனையவை | 256,781 | 267,688 |
| **மூலதன செலவினம் மற்றும் தேறிய கடன்** | **160,618** | **159,902** |
| **மொத்தம்** | **1,645,602** | **1,579,166** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

### வட்டிக் கொடுப்பனவுகள்

2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 819.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்கள் உட்பட வட்டி செலுத்துதலுக்கான மொத்தச் செலவு 11.3 சதவீதம் குறைந்து ரூபா 726.1 பில்லியனாகக் குறைவடைந்துள்ளது. உள்நாட்டு கடனுக்கான வட்டிக் கொடுப்பனவுகள் 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 789.1 பில்லியனாக இருந்து, 12.3 சதவீதம் குறைந்து 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 692.1 பில்லியனாக குறைவடைந்தது. எவ்வாறாயினும், 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வெளிநாட்டுக் கடனுக்கான வட்டி செலுத்துதல் 13.9 சதவீதம் அதிகரித்து ரூபா 34.0 பில்லியனாக அதிகரித்துள்ளது. இது 2023 இன் இதே காலப்பகுதியில் 29.8 பில்லியனாக காணப்பட்டது.

### சம்பளம் மற்றும் ஓய்வூதியம்

மாகாண சபைகள் உட்பட அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் சம்பளத்திற்கான செலவு 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 303.3 பில்லியனாக இருந்த நிலையில், 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 0.5 வீதத்தால் ரூபா 301.8 பில்லியனாக குறைந்துள்ளது. அத்தியாவசிய ஆட்சேர்ப்புகளுக்கு மாத்திரம் அரச சேவைக்கான பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வது மட்டுப்படுத்தப்பட்டமை மற்றும் பொதுத் துறை பணியாளர்களை திறம்பட நிர்வகித்தல் ஆகிய காரணங்களால் இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக காணப்பட்டது.

எவ்வாறாயினும், நிலுவைத் தொகையை சரியான நேரத்தில் செலுத்தியதன் காரணமாக ஓய்வூதியங்களுக்கான செலவினம் 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 105.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2024 இன் முதல் நான்கு மாதங்களில் 16.7 சதவீதம் அதிகரித்து ரூபா 123.6 பில்லியனாக இருந்தது.

### நலன்புரிச் செலவுகள்

2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், அஸ்வெசும குடும்ப மானியங்கள், 70 வயதிற்கு மேற்பட்ட முதியோருக்கான கொடுப்பனவு, சிறுநீரக நோயாளிகளுக்கு நிதியுதவி, ஊனமுற்றோருக்கான கொடுப்பனவு, மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி, உணவு, கருவுற்ற தாய்மார்களுக்கான பொதிகள், உர மானியம் மற்றும் பாடசாலை சீருடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் உள்ளிட்ட சமூக நலன் மற்றும் சமூகப் பாதுகாப்பிற்காக அரசாங்கம் ரூபா 152.8 பில்லியன் செலவிட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் அஸ்வெசும மற்றும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட ரொக்க மானியங்களுக்கான சமூகப் பாதுகாப்புச் செலவுகள் ரூபா 46 பில்லியனாகும். 2024 ஆம் ஆண்டிற்கான அஸ்வெசும மற்றும் பிற வகைப்பட்ட வீட்டு பண மானியங்களுக்கான செலவினங்களுக்காக ரூபா 205 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் அரசாங்க மருத்துவமனைகளுக்கான மருத்துவப் பொருட்கள் உட்பட சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து திட்டங்களுக்கான அரசாங்க செலவினம் ரூபா 14.4 பில்லியன் ரூபாவாகும். 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் கடினமான பாடசாலைகளில் மாணவர்களுக்கான இலவச பாடப்புத்தகங்கள், சீருடைகள் மற்றும் காலணிகள் போன்ற கல்விக்கான நலன்புரி திட்டங்களுக்காக ரூபா 3.8 பில்லியன் செலவானது. இரசாயன உரத்துக்கான அரசாங்கத்தின் மானியத்திற்கான செலவீனமானது வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 12.5 பில்லியன் ரூபாவாகும்.

அட்டவணை 2.10 : பிரதான நலன்புரி செலவினம்: 2024 சனவரி - ஏப்ரல்

ரூபா.மில்லியன்

| நிகழ்ச்சித்திட்டம் | 2024 (தற்காலிகமானது) |
|---|---|
| **சமூக நலன்புரி** | |
| குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கான உதவித்தொகை | 41,289.30 |
| குறை வருமான அங்கவீனமுற்றவர்களுக்கான ஒத்துழைப்பு | 1,260 |
| வயோதிபர்களுக்கான நிதி ஒத்துழைப்பு | 2,820 |
| சிறுநீரக நோயாளர்களுக்கான நிதி ஒத்துழைப்பு | 591 |
| "ரணவிரு மாபிய ரக்கவரண" கொடுப்பனவு | 715.9 |
| வெள்ளம் மற்றும் வறட்சி நிவாரணம் | 32.9 |
| முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு | 23 |
| மரணம் மற்றும் அங்கவீனமுற்ற படையினருக்கான சேவை நட்டஈடு | 3,941 |
| **சுகாதார மற்றும் போசாக்கு** | |
| திரிபோஷா நிகழ்ச்சித்திட்டம் | 490 |
| கர்ப்பிணி தாய்மார்களுக்கான போசாக்குணவு பொதி | 1,564 |
| பாடசாலை போசாக்குணவு நிகழ்ச்சித்திட்டம் | 3,182 |
| முன்பள்ளி மாணவர்களுக்கான காலை உணவு | 135 |
| அரசாங்க வைத்தியசாலைகளுக்கான மருத்துவ வழங்கல்கள் (ஆயுர்வேத) | 13,476.80 |
| **கல்வி** | |
| பாடசாலை பாடப்புத்தகங்கள் | 2,579 |
| பாடசாலை சீருடைகள் | 997 |
| கஷ்ட மற்றும் மிகக் கஷ்ட பாடசாலைகளில் மாணவர்களுக்கான பாதணிகள் | 200 |
| புலமைப்பரிசில் - தரம் 5 மாணவர்கள் | 1,000 |
| மஹாபொல மற்றும் மாணவர் உதவு தொகைகள் | 1,000 |
| பல்கலைக்கழக மாணவர்களுக்கான மடி கணனி மற்றும் வைபை வசதிகளுக்கான வட்டி மானியம் | 0.057 |
| அரச பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற முடியாத மாணவர்களுக்கான கடன் திட்டம் | 685 |
| மாணவர்களுக்கான தம்ம பாடசாலை பாடப்புத்தகம் | 14.75 |
| தம்ம பாடசாலை ஆசிரியர்களுக்கான சீருடைகள் | 8.68 |
| **மானியங்கள்** | 12,816 |
| பசளை மற்றும் பயிர் மானியம் | |
| **ஏனைய மானியங்கள்** | |
| இ.போ.ச வருமானமீட்டாத பாதைகளுக்கான மானியம் மற்றும் படைவீரர்களுக்கு பருவச்சீட்டு மற்றும் பேரூந்து அனுமதிப்பத்திரங்கள் | 4,026 |
| **மொத்தம்** | ***91,995.30*** |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

## துறைரீதியான செலவினங்கள்

### பாடசாலைக் கல்வி

2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், பாடசாலைக் கல்விக்காக ரூபா 99,373 மில்லியன் செலவிடப்பட்டதுடன், இதில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவு முறையே ரூபா 97,214 மில்லியன் மற்றும் ரூபா 2,159 மில்லியன் ஆகும். 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், முதல் நான்கு மாதங்களில் தொடர் செலவினம் 4 சதவீதம் குறைந்துள்ளது.

2024 ஆம் ஆண்டில் பாடசாலை ஊட்டச்சத்து உணவுத் திட்டம், பாடசாலை பாடப் புத்தகங்கள் மற்றும் பாடசாலை சீருடைகள் அச்சிடுதல் மற்றும் கடினமான பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு காலணிகள் போன்ற நலத் திட்டங்களை அரசு தொடர்ந்தது. பாடசாலை மாணவர்களின் போசாக்கு நிலையை மேம்படுத்துவதற்காக, ஒரு மாணவருக்கு சத்தான உணவுக்கான தினசரி கொடுப்பனவை 85 ரூபாயில் இருந்து ஒரு மாணவருக்கு 110 ரூபாயாக அரசாங்கம் உயர்த்தி, 2024 இல் 3,419 மில்லியன் ரூபாயை செலவிட்டுள்ளது. முதல் நான்கு மாதங்களில், பள்ளி போஷாக்கு உணவுத் திட்டம் மற்றும் பாடப் புத்தகங்கள் மற்றும் பள்ளி சீருடைகளை அச்சிடுவதற்கான மொத்தச்

செலவு ரூபா 6,994 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், இந்த நலத்திட்டங்களுக்கான செலவினம் 30 சதவீதம் குறைந்துள்ளது. மூலதனச் செலவு முக்கியமாக பாடசாலைகளில் புனர்வாழ்வு / உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் மாகாண கல்வித் துறை உட்பட தரமான அபிவிருத்தி சீர்திருத்தங்களுக்காக செலவிடப்பட்டது.

**அட்டவணை 2.11: பாடசாலைக் கல்வி தொடர்பான பிரதான செயற்பாட்டுச் செலவினம் : 2024 சனவரி – ஏப்ரல்**

ரூபா.மில்லியன்

| விபரம் | 2023 சன - ஏப் | 2024 சன - ஏப் (தற்காலிகமானது) |
|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | | |
| பாடசாலை ஆசிரியர்கள், ஏனைய பதவியனருக்கான வேதனாதிகள் | 83,909 | 87,529 |
| **தேசிய** | *17,669* | *19,379* |
| **மாகாண** | *66,240* | *68,150* |
| நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் | 9,969 | 7,350 |
| பரீட்சை மதிப்பீடு | 649 | 1,292 |
| **மூலதனச் செலவினம்** | | |
| பாடசாலைகள் புனரமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 377 | 121 |
| ஆசிரிய அபிவிருத்தி | 12 | - |
| கல்வியில் விசேட அபிவிருத்தி | 2 | - |
| மாகாணக் கல்வி | 981 | 654 |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

## உயர் கல்வி

2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் பல்கலைக்கழகக் கல்விக்கான மொத்தச் செலவு 10.4 வீதத்தால் ரூபா 26,845 மில்லியனாக அதிகரித்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மீள்செலவு 13.7 வீதத்தால் அதிகரித்து ரூபா 21,847 மில்லியனாக இருந்தது. 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மூலதனச் செலவினம் 2.2 சதவீதம் குறைந்து ரூபா 4,998 மில்லியனாக இருந்தது.

**அட்டவணை 2.12 : உயர் கல்வியின் பிரதான செயற்பாடுகளுக்கான செலவினம் : 2024 சனவரி - ஏப்ரல்**

ரூபா.மில்லியன்

| விபரம் | 2023 சன - ஏப் | 2024 சன - ஏப் (தற்காலிகமானது) |
|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | | |
| பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களின் ஆள்சார் வேதனாதிகள் | 16,796 | 17,769 |
| மஹாபொல மற்றும் மாணவர் உதவு தொகைக் கொடுப்பனவு | 716 | 1,000 |
| **மூலதனச் செலவினம்** | | |
| உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி கருத்திட்டத்தினைத் துரிதப்படுத்தல் (உலக வங்கி) | 967 | 597 |
| விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப, மனிதவள அபிவிருத்தி கருத்திட்டம் (இ.அ/ஆசிய அபிவிருத்தி வங்கி) | 1,286 | 824 |
| வயம்ப பல்பலைக்கழக நகர அபிவிருத்தித் திட்டம் (இ.அ/சவுதி) | 342 | 61 |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

## திறன் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற் கல்வி

2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் திறன் மேம்பாடு மற்றும் தொழிற்கல்விக்காக செலவிடப்பட்ட மொத்த செலவு ரூபா 2,790 மில்லியனாக இருந்தது. இதில் ரூபா 2,623 மில்லியன் மற்றும் ரூபா 167 மில்லியன் முறையே மூலதனம் மற்றும் மீண்டெழும் செலவினங்களுக்காக செலவிடப்பட்டது.

**அட்டவணை 2.13 : திறன் அபிவிருத்தி சார்ந்த பிரதான செயற்பாடுகள் மீதான செலவினம் : 2024 சனவரி - ஏப்ரல்**

ரூபா.மில்லியன்

| விபரம் | 2023 சன - ஏப் | 2024 சன - ஏப் |
|---|---|---|
| நிபுனதா சிசு திரிய | 194 | 45 |
| திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (ஆ.அ.வ. / உ.வ.) | 152 | - |
| 07 தொழில்நுட்ப மற்றும் பொறிமுறைத் தொழில்நுட்ப கல்லூரிகளின் நவீனமயமாக்கல் | - | 78 |
| கொள்திறன் மேம்பாடு கருத்திட்டம் இலங்கையின் தொழில்நுட்பக் கல்லூ ரிகள் மற்றும் பொறிமுறைத் தொழில்நுட்பக் கல்லூரிகளின் பாடநெறிகளுக்கானது. (இலங்கை அரசாங்கம்/ KOICA) | 48 | 2 |
| You Lead (USAID) | - | 3 |
| இலங்கையில் தொழிற்பயிற்சி (ஜேர்மனி) | - | 3 |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

## விஞ்ஞானம் மற்றும் புத்தாக்கம்

2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், அறிவியல் மற்றும் கண்டுபிடிப்புகளுக்குச் செலவிடப்பட்ட மொத்தச் செலவு ரூபா 335.5 மில்லியனாக இருந்தது, இதில் ரூபா 335.0 மில்லியன் மற்றும் ரூபா 0.5 மில்லியன் முறையே மீண்டெழும் செலவு மற்றும் மூலதனச் செலவினங்களுக்காகச் செலவிடப்பட்டது.

**அட்டவணை 2.14: 2024 சனவரி முதல் ஏப்பிரல் வரையான பிரதான விஞ்ஞானம் மற்றும் புத்தாக்க செயற்பாடுகளுக்கான செலவினம்**

ரூபா.மில்லியன்

| விபரம் | 2023 சன - ஏப் | 2024 சன - ஏப் |
|---|---|---|
| சிதைந்த மண்ணை மேம்படுத்தல் | - | 2 |
| அறிவியல் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | 2 | - |
| இருதரப்பு மற்றும் பல்தரப்பு கூட்டமைப்பின் கீழ் இணைந்த விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம் | - | 2 |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திற்கான முதலீட்டு கட்டமைப்பை செயற்படுத்தல் | - | 1 |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

## சுகாதாரம்

2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மேற்கு மற்றும் சுதேச மருத்துவத் துறைகள் உட்பட மாகாண மற்றும் மத்திய அரசின் சுகாதாரச் செலவினங்களுக்கான மொத்த அரசாங்கச் செலவினம் 20 வீதத்தால் 98,881 மில்லியனாக குறைந்துள்ளது. மொத்த சுகாதாரச் செலவினங்களில், மீண்டெழும் செலவு ரூபா 92,526 மில்லியனாகவும், மூலதன முதலீடு ரூபா 6,355 மில்லியனாகவும் இருந்தது. மீண்டெழும் செலவினத்தின் முக்கிய வகைகளில் ஒன்றான மருத்துவப் பொருட்கள் சம்பந்தமாக, 13,476 மில்லியன் ரூபாய் மருந்துகள், சத்திரசிகிச்சைப் பொருட்கள் மற்றும் ஆய்வுகூடப் பொருட்களுக்கு செலவிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.15 : 2024 சனவரி முதல் ஏப்பிரல் வரை சுகாதாரத் துறையில் பிரதான செயற்பாடுகள் மீதான செலவினம்**

ரூபா.மில்லியன்

| விபரம் | 2023 சன - ஏப் | 2024 (தற்காலிகமானது) |
|---|---|---|
| **மொத்த மீண்டெழும் செலவினம்** | **117,215** | **92,526** |
| சேவை வழங்கல் செலவினம் | 47,483 | 55,714 |
| அதில் மருத்துவ பணியாளர் மற்றும் ஆதரவு ஊழியர்கள் சம்பளங்கள் | 38,620 | 44,032 |
| மருத்துவத்திற்கான வழங்கல் | 41,146 | 13,476 |
| மாகாண சுகாதாரம் | 28,586 | 23,336 |
| **அரச முதலீட்டுச் செலவினம்** | **6,446** | **6,355** |
| மருத்துவ உபகரணம் | 560 | 214 |
| சுகாதார முறைமை மேம்பாட்டுக் கருத்திட்டம் - ஆ.அ. வங்கி | 155 | 929 |
| இலங்கை கொவிட் 19 அவசர பொறுப்பு மற்றும் சுகாதார முறைமை தயார்நிலைக் கருத்திட்டம் (உ.வ) | 174 | 842 |
| நிரல் அமைச்சு வைத்தியசாலைகளின் கீழ் அவசர சிகிச்சைப் பிரிவை மேம்படுத்தல் | 137 | - |
| உயர் சக்தி கதிரியக்கத்துடன் இலங்கையில் புற்றுநோயாளர்களுக்கான உயர் தர கதிரியக்க சிகிச்சை ஏற்பாடு | 53 | - |
| தாதியர் பீடம்/ விடுதி நிர்மாணம் | 23 | 83 |
| ஏனைய மூலதன முதலீடு | 3,244 | 2,991 |
| மாகாண சுகாதார முதலீடு | 2,100 | 1,296 |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

## விவசாயம்

பெருந்தோட்டம், கால்நடைகள், மீன்பிடி மற்றும் காணி அபிவிருத்தி உள்ளிட்ட விவசாயத் துறைக்கான மொத்த செலவினம் 2023 ஆம் ஆண்டின் இதே

காலப்பகுதியில் ரூபா 25,071 மில்லியனாக இருந்ததை விட, 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 33 சதவீதம் அதிகரித்து ரூபா 33,245 மில்லியனாக அதிகரித்துள்ளது. இத்தொகையில், உர மானியத் திட்டத்திற்காக ரூபா 12,452 மில்லியனும், பயிர் விவசாயத்திற்காக ரூபா 183 மில்லியனும், தோட்டத் துறை அபிவிருத்திக்காக ரூபா 791 மில்லியனும், மீன்பிடி அபிவிருத்திக்காக ரூபா 831 மில்லியனும், காணி அபிவிருத்திக்காக ரூபா 338 மில்லியனும் செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை கால்நடை வளர்ப்பு மற்றும் துறைக்கு தேவையான வசதிகளை வழங்க உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக செலவிடப்பட்டது.

### நீர் வழங்கல் மற்றும் சுகாதாரம்

2024 இன் முதல் நான்கு மாதங்களில், பாதுகாப்பான குடிநீர் மற்றும் தரமான துப்புரவு சேவைகளை அணுகுவதை உறுதி செய்வதற்காக நீர் வழங்கல் மற்றும் சுகாதாரம் மீதான முதலீடுகளை அரசாங்கம் தொடர்ந்தது. இந்த செலவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வங்கிகளில் இருந்து ரூபா 6,267 செலவில் பெறப்பட்ட கடன்களுக்கான சேவையும் அடங்கும். மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக முறையே ரூபா 411 மில்லியன் மற்றும் ரூபா 5,856 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. உற்பத்தி திறனை மேம்படுத்துதல், புதிய நீர் வழங்கல் திட்டங்களை நிறுவுதல் மற்றும் முழு மக்களுக்கும் பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதை உறுதிசெய்யும் திட்டப்பணிகளை விரைவுபடுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் திறன் மேம்பாடு மற்றும் விநியோக விரிவாக்கத் திட்டம் 2024 இல் செயல்படுத்தப்படுகிறது.

### பாதைகளும் பாலங்களும்

2024 இன் முதல் நான்கு மாதங்களில், பாதைகள் மற்றும் பாலங்களுக்கான செலவினம் ரூபா 78,910 மில்லியனாக இருந்தது, இது 2023 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் சற்று குறைவாகும். இவ்வருடத்தின் முதல் காலாண்டில், தற்போதுள்ள வீதி வலையமைப்பைப் பராமரிப்பதற்கும், ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டங்களின் முக்கியமான செயற்பாடுகளை நிறைவு செய்வதற்கும், அவ்வாறான திட்டங்களால் மூடப்பட்ட வீதிகளை வாகனம் செல்லக்கூடிய மட்டத்திற்கு அபிவிருத்தி செய்வதற்கும் அரசாங்கம் அதிக முன்னுரிமை அளித்துள்ளது. மொத்தத் தொகையில், தேசிய மற்றும் கிராமப்புற பாதை மேம்பாட்டுக்காக ரூபா 17,147 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இதன் கீழ், ஒருங்கிணைந்த பாதை முதலீட்டுத் திட்டத்தின் (ஐ-ரோடு) மீதிப் பணிகளை நிறைவுசெய்வதற்கு ரூபா 1,772 மில்லியன் செலவிடப்பட்டுள்ள, அதே நேரத்தில் பிரதான சாலைகளை அணுகும் வகையில் 100,000 கி.மீ மாற்று பாதைகளை மேம்படுத்த ரூபா 6,419 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. வீதி பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 4,689 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

அதிவேக நெடுஞ்சாலைகள் அபிவிருத்திக்கான செலவினம் ரூபா 15,874 மில்லியனாகும். அதில் கணிசமான தொகை மத்திய அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்தி திட்டத்திற்காக செலவிடப்பட்டுள்ளது. சாலைகளை விரிவுபடுத்துதல் மற்றும் மேம்படுத்துவதற்கான செலவு ரூபா 283 மில்லியனாகும், பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள் கட்டுவதற்கான செலவு ரூபா 716 மில்லியனாகும்.

மேலும், வீதி புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக உள்ளூர் வங்கிகளிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பெறப்பட்ட கடனுக்கான வட்டி மற்றும் மூலதனத் திருப்பிச் செலுத்துதலாக மொத்த செலவினமான சுமார் ரூபா 41,622 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.16 2024 சனவரி முதல் ஏப்பிரல் வரை பாதைகள் மற்றும் பாலங்கள் மீதான செலவினம்**

ரூபா.மில்லியன்

| | கருத்திட்டம்/நிகழ்ச்சித்திட்டம் | 2023 சன - ஏப் | 2024 சன - ஏப் (தற்காலிகமானது) |
|---|---|---|---|
| 1 | **அதிவேக பாதை அபிவிருத்தி** | **17,766** | **15,874** |
| | மத்திய அதிவேகப் பாதை கருத்திட்டம் | 13,933 | 12,015 |
| | கொழும்பு - இரத்தினபுரி - பெல்மதுல்ல அதிவேகப் பாதை | 10 | 1,722 |
| | புதிய களனி பாலத்திலிருந்து உயர்த்தப்பட்ட அத்துருகிரியவிற்கான அதிவேகப் பாதை | 13 | - |
| | துறைமுக அடைவு உயர்த்தப்பட்ட அதிவேகப்பாதை கருத்திட்டம் | 1,965 | 1,637 |
| | தெற்கு அதிவேக நெடுஞ்சாலை திட்டத்தின் விரிவாக்கம் | 1,745 | 500 |
| 2 | **நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி** | **17,845** | **17,147** |
| | பாதைகள் பராமரிப்பு | 1,434 | 4,689 |
| | கொழும்பு மாவட்ட பாதை அபிவிருத்தி கருத்திட்டம் | 276 | 639 |
| | தெற்கு பாதை இணைப்புக் கருத்திட்டம் | 316 | - |
| | ஒருங்கிணைந்த பாதை முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (ஐ பாதை) | 4,034 | 1,772 |
| | மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் வீதிகள், பாலங்களை விரிவுபடுத்தல் மற்றும் மேம்படுத்தல் | 15 | - |
| | உள்ளடக்கிய இணைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் | 1,740 | 1,469 |

ரூபா.மில்லியன்

| | கருத்திட்டம்/நிகழ்ச்சித்திட்டம் | 2023<br>சன - ஏப் | 2024<br>சன - ஏப்<br>(தற்காலிகமானது) |
|---|---|---|---|
| | பிரதான பாதைகள் , அதிவேகப் பாதைகள் அடைவுக்கான மற்றும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கான மாற்றுச்சாலைத் தொடர்பு அபிவிருத்தி | 8,269 | 6,419 |
| | ஏனையவை | 1,733 | 2,031 |
| **3** | **பாதைகள் விரிவாக்கல் மற்றும் மேம்பாடு** | **511** | **283** |
| **4** | **பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள் நிர்மாணம்** | **941** | **716** |
| | தேசிய அதிவேகப் பாதைகளில் சேதமடைந்த பலவீனமான பாலங்களின் மீள்கட்டமைப்பு | 130 | 81 |
| | பழைய பாலங்களின் தொகுதிகளைக் கொண்டு கிராமிய பாலங்கள் நிர்மாணம் | 125 | 74 |
| | இரண்டாவது புதிய களனி பால நிர்மாணக் கருத்திட்டம் | 2 | - |
| | கொஹுவல மற்றும் காதம்பே மேம்பாலங்களின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானம் | 115 | 43 |
| | உத்தரனாந்த மாவத்தையிலும், சிலேவாயில் ரயில் நிலையத்திற்கு அருகாமையிலும் ரயில் பாதைக்கு மேல் மேம்பாலங்கள் கட்டுதல் | 559 | 418 |
| | தேசிய அதிவேகப் பாதையிலுள்ள 25 பாலங்களை புணரமைத்தல் | 10 | 100 |
| **5** | **மகநெகும கிராமிய பாதை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்** | **1,080** | **648** |
| **6** | **வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கான மாற்றல்கள்** | **3,000** | **-** |
| **7** | **காணி மற்றும் காணி மேம்பாடு (முன்னுரிமை கருத்திட்டங்கள் நீங்களாக ஏனைய கருத்திட்டங்கள்** | **623** | **2,620** |
| **8** | **வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அர்ப்பணிப்புகளுக்கு இடைவெளி நிதியளிப்பு** | **39,960** | **41,622** |
| **9** | **ஏனைய** | **-** | **-** |
| | **மொத்தம்** | **81,626** | **78,910** |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

### போக்குவரத்து

போக்குவரத்துத் துறைக்கான மொத்த அரசாங்கச் செலவு 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 8.1 சதவீதம் குறைவடைந்து ரூபா 17,721 மில்லியனாக இருந்தது. மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக முறையே ரூபா 13,254 மில்லியன் மற்றும் ரூபா 4,467 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. கொழும்பு புறநகர் புகையிரத பாதைத்திட்டம், மஹவ முதல் ஓமந்தை வரையிலான புகையிரத பாதையை புனரமைத்தல், தற்போதுள்ள புகையிரத பாதைகளை பராமரித்தல் மற்றும் சிறிய மற்றும் பாரிய அளவிலான திருத்தப்பணிகளுக்காக புகையிரத திணைக்களத்தினால் ரூபா 2,145 மில்லியன் செலவிடப்பட்டது.

2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், பேருந்து போக்குவரத்துக்கான மொத்தச் செலவு ரூபா 4,046 மில்லியனாகும். இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகளை பொருளாதார ரீதியாக இலாபமில்லாத பாதைகளில் இயக்குதல், பாடசாலை மற்றும் உயர்கல்வி பருவச் சீட்டுகள் மற்றும் ஆயுதப் படைகளுக்கு பேருந்து அனுமதிப்பத்திரம் வழங்குதல் போன்ற நலன்புரி சேவைகளுக்காக செலவிடப்பட்டது. இந்த காலப்பகுதியில் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் 866 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது.

### வீடமைப்பு அபிவிருத்தி

2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், மோதலில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மீள்குடியேற்றம் / நிரந்தர வீடுகள் மற்றும் குறைந்த வருமானம் கொண்ட மக்களுக்கான சீன உதவித் திட்டத்தின் கீழ் 2,000 வீட்டு அலகுகளை நிர்மாணித்தல் உள்ளிட்ட வீடுகள் மற்றும் தொடர்புடைய உள்கட்டமைப்புகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 36 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

### நகர அபிவிருத்தி

2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் நகர்ப்புற அபிவிருத்திக்கான மொத்தச் செலவு ரூபா 1,166 மில்லியனாகும். இதில் ரூபா 97 மில்லியன் மற்றும் ரூபா 1,069 மில்லியன் மீண்டெழும் செலவு மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக செலவிடப்பட்டது. நகர அபிவிருத்தித் துறைக்கான மொத்த செலவினங்களில், கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம், நகர மறுசீரமைப்புத் திட்டம், மூலோபாய நகர அபிவிருத்தித் திட்டம் (யாழ்ப்பாணம்) மற்றும் “சியாக் நகர” நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ரூபா 345 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. வெராஸ் கங்கை வெள்ள நீர் வடிகால் மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டு திட்டம் மற்றும் மெட்ரோ கொழும்பு தின்மக்கழிவு முகாமைத்துவக் கருத்திட்டத்திற்கு ரூபா 596 மில்லியன் செலவிடப்பட்டது.

### தின்மக் கழிவு

2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், தின்மக் கழிவு முகாமைத்துவம் மற்றும் காணி மேம்பாட்டிற்காக ரூபாய் 684 மில்லியன் செலவிடப்பட்டது. இதில் ரூபா 596 மில்லியன் வெராஸ் கங்கை வெள்ள நீர் வடிகால் மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டு திட்டம் மற்றும் மெட்ரோ கொழும்பு திடக்கழிவு முகாமைத்துவக் கருத்திட்டத்திற்கு செலவிடப்பட்டது.

### சுற்றாடல்

2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், சுற்றுச்சூழல் துறைக்கான மொத்த அரசாங்க செலவினம் ரூபா 2,519 மில்லியனாக இருந்தது, இதில் முறையே ரூபா 2,374 மில்லியன் மற்றும் 145 மில்லியன் மீண்டெழும் செலவினமாகவும் மூலதனச் செலவினங்களுக்காகவும் மேற்கொள்ளப்பட்டது. சுற்றாடல் பாதுகாப்புக்காக ரூபா 30 மில்லியனும், வனப் பரப்பு மற்றும் வனப் பாதுகாப்பிற்காக ரூபா 75 மில்லியன் ரூபாவும், மின்சார வேலிகள் அமைத்தல் உட்பட மனித யானை மோதலைத் தணிக்க 95 மில்லியன் ரூபாயும், விலங்கியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கு 11 மில்லியன் ரூபாயும் செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை சுற்றுச்சூழல் பாதுகாப்பு, வனவிலங்குகள் மற்றும் வனப் பாதுகாப்பு தொடர்பான பிற திட்டங்கள் மற்றும் கொள்கைகளை செயற்படுத்த சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டது.

### நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவம்

2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவத்துக்கான மொத்த முதலீடு ரூபா 7,212 மில்லியனாகும். மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு திட்டத்திற்காக ரூபா 2,853 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. நீர்ப்பாசன அமைப்புகளின் அபிவிருத்தி மற்றும் முன்னேற்ற நடவடிக்கைகளுக்காக நீர்ப்பாசன அமைச்சு மற்றும் நீர்ப்பாசன திணைக்களத்திற்கு மீதியான ரூபா 4,359 மில்லியன் ஒதுக்கப்பட்டது.

## 2.4 பொது திறைசேரியின் காசுப்பாய்ச்சல் செயலாற்றுகை

2024 இன் முதல் நான்கு மாதங்களில், பொது திறைசேரிக்கு வருவாய் மற்றும் பிற வரவுகள் மூலம் ரூபா 1,205.1 பில்லியனாக இருந்த பண வரவுகள் ரூபா 1116.1 பில்லியன் மதிப்பீட்டிற்கு எதிராக, மதிப்பீட்டில் இருந்து 107.9 சதவீதத்தை எட்டியது. இதற்கிடையில், 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், ரூபா 1,719.8 பில்லியன் மதிப்பீட்டிற்கு எதிராக, 1,608.5 பில்லியனாக மீண்டெழும் மற்றும் பொது முதலீட்டிற்கான பணப் புழக்கம் இருந்தது, இது மதிப்பீட்டில் இருந்து 93.5 சதவீதத்தை எட்டியுள்ளது. இதன்படி, 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 1,619.7 பில்லியன் ரூபாயுடன் ஒப்பிடுகையில், தொடர்ச்சியான மற்றும் பொது முதலீடுகள் இரண்டிற்கும் மொத்த ரொக்க வெளியேற்றம் 0.7 சதவீதம் சரிவை பிரதிபலிக்கிறது.

2024 ஏப்ரல் 30 இல் மொத்த பணப் பற்றாக்குறை ரூபா 403.4 பில்லியனாக இருந்தது. இது ஏப்ரல் 2023 இன் இறுதியில் ரூபா 837.7 பில்லியன் பற்றாக்குறையுடன் ஒப்பிடும்போது 51.8 சதவீதம் சரிவை பிரதிபலிக்கிறது. வருமானம் மற்றும் ஏனைய பெறுகைகள் 54.1 சதவீதத்தால் அதிகரித்தமையே இதற்கு முக்கிய காரணமாகும். இருப்பினும், தொடர்ச்சியான மற்றும் பொது முதலீட்டுக்கான மொத்தப் பணப்புழக்கம் முந்தைய ஆண்டின் இதே காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க மாறுபாட்டைப் பிரதிபலிக்கவில்லை. மொத்தக் கடன் வாங்குவது 42.5 சதவிகிதம் குறைந்துள்ளது, அதே சமயம் கடனைத் திருப்பிச் செலுத்துவது முந்தைய ஆண்டை விட 6.4 சதவிகிதம் குறைந்த வருவாயின் மூலம் கடன் மீள் கொடுப்பனவின் ஒரு பகுதியை நிதியளிப்பதன் காரணமாகவும், முந்தைய ஆண்டை விட நிகர பண மிகையினை முன்வைத்ததாலும் பிரதிபலிக்கிறது. அதன்படி, 2023 ஆம் ஆண்டின் இறுதியில் ஏப்ரல் மாத இறுதியில் நேர்மறை பண இருப்பு 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் முடிவில் ரூபா 542.3 பில்லியன் பண மிகை தொடர்ந்தது.

**அட்டவணை 2.17: 2024 சனவரி முதல் ஏப்பிரல் வரை அரசாங்க திறைசேரி காசுப்பாய்ச்சல் செயற்பாடுகளின் கூற்று**

ரூபா.பில்லியன்

| விடயம் | சனவரி - ஏப்பிரல் | | |
|---|---|---|---|
| | 2023 | 2024 | |
| | உண்மையான | மதிப்பிடப்பட்ட | உண்மையான |
| ஆரம்ப காசு மீதி | -84.2 | 599.5 | 599.5 |
| வருமானம் மற்றும் ஏனைய பெறுகைகளிலிருந்து மொத்த காசு உட்டபாய்ச்சல் | 782.0 | 1,116.1 | 1,205.1 |
| மீண்டெழும் கொடுப்பனவுகளுக்கான மொத்த காசு வெளிப்பாய்ச்சல் | -1,392.9 | -1,539.9 | -1,420.5 |
| மூலதன கொடுப்பனவுகளுக்கான மொத்த காசு வெளிப்பாய்ச்சல்ழூ | -226.8 | -179.9 | -188.0 |
| தேறிய காசு மிகை (பற்றாக்குறை) | -837.7 | -603.7 | -403.4 |
| மொத்த பெறுகை * | 1,384.6 | 959.9 | 796.5 |
| படுகடன் மீள் கொடுப்பனவு | -474.8 | -269.9 | -444.4 |
| தேறிய பெறுகை | 909.8 | 690.0 | 352.1 |
| முன்னைய ஆண்டின் வணிய கடன் பெறுகையின் இருப்பு | - | - | - |
| சீராக்கல் கணக்கு மீதி (தற்காலிக ஊழிய மீதி, தேறிய வைப்புக்கள், ஏனைய மாற்றல்கள் முதலியன) | 7.2 | - | -5.9 |
| **முடிவுறுத்தல் காசு மீதி** | **-4.9** | **685.7** | **542.3** |

*மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்*

** 2024 ஏப்ரல் 30 அன்றுள்ளவாறு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் கணக்கிடப்பட்ட கருத்திட்ட/ நிகழ்ச்சித்திட்ட கடன்கள் உள்ளடங்கலாக*

## 2.5 அரச படுகடன் முகாமைத்துவம்

2024 ஆம் ஆண்டிற்கான பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட மொத்த கடன் வரையறை ரூபா 7,350 பில்லியனாக இருந்தது. இந்த ஆண்டில் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு மற்றும் வங்கி மறுமூலதனத்திற்கான நிதியுதவிக்கான ஏற்பாடுகள் உட்பட 2024 சனவரி 01 முதல் ஏப்ரல் 30 வரையிலான காலப்பகுதியில் அரசாங்க கடன்களின் பயன்பாடு ரூபா 796.5 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த காலகட்டத்தில் கடன் சேவை கொடுப்பனவுகள் மற்றும் மேம்பாட்டு திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக முறையே ரூபா 734.2 பில்லியன் மற்றும் ரூபா 62.3 பில்லியனாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கருத்திட்டக் கடன்களை உள்ளடக்கிய மொத்த கடன் பயன்பாடு.

மொத்தக் கடன்களில், தோராயமாக 92.2 சதவீதம் 2024 முதல் நான்கு மாதங்களில் உள்நாட்டுக் கடன்களை உள்ளடக்கியது. திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் அரசாங்கத்தின் உள்நாட்டுக் கடன்களின் முக்கிய ஆதாரங்களாக இருந்தன.

அதன்படி, மொத்த உள்நாட்டுக் கடன்களில் சுமார் 98.5 சதவீதம் திறைசேரி முறிகள் மூலம் திரட்டப்பட்டது. முதிர்ச்சியடையும் திறைசேரி உண்டியல்களின் மீதான ரொக்கப் போக்கை அமைத்த பின்னர், திறைரேி உண்டியல்கள் மூலம் பெறப்பட்ட கடன்கள் நிகர மதிப்பில் பதிவுசெய்யப்பட்டதால், 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 1.5 சதவீதம் திறைசேரி உண்டியல்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

**அட்டவணை 2.18 : மொத்த உள்நாட்டுக்கடன் பெறுகைகள் (2024 சனவரி - ஏப்பிரல்)**

| கருவிகள் | ரூபா.பில்லியன் |
|---|---|
| திறைசேரி பிணைகள் | 723.4 |
| திறைசேரி உண்டியல்கள் | 10.9 |
| **மொத்தம்** | **734.2** |

*மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்*

### திறைசேரி உத்தரவாதங்கள் மீதான எதிர்பாரா பொறுப்புகளை வெளிப்படுத்துதல்

2016 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தச்) சட்டத்தின் பிரிவு 2 இன் படி திறைசேரி உத்தரவாதங்கள் விநியோகிக்கப்படுவதுடன், திறைசேரி உத்திரவாதங்கள் வழங்கப்பட்டு 2024 ஏப்ரல் 30 இல் செல்லுபடியாகும் பெறுமதி ரூபா 2,228.2 பில்லியனாக இருந்தது. 2024 ஏப்ரல் 30 அன்றுள்ளவாறு பொது திறைசேரியினால் வழங்கப்பட்ட திறைசேரி உத்தரவாதங்களின் பட்டியல் அட்டவணை 2.19 இல் விவரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.19: 2024.04.30 வரையான பொதுத் திறைசேரியினால் விநியோகிக்கப்பட்ட உத்தரவாதங்களின் நிலுவைப் பட்டியல்**

| தொ. இல | வங்கி/ நிறுவனத்தின் பெயர் | நிறுவனத்தின் பெயர் | ரூபா.மில் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | ஆசிய அபிவிருத்தி வங்கி | இலங்கை மின்சார சபை | 121,104.00 | |
| | | பிராந்திய அபிவிருத்தி வங்கி | 15,138.00 | 136,242.00 |
| 2 | ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) | இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி | 54,496.80 | 54,496.80 |
| 3 | இலங்கை வங்கி | வரை. கட்டிட பொருள் கூட்டுத்தாபனம் | 500.00 | |
| | | இலங்கை மின்சார சபை | 4,540.00 | |
| | | இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம் | 250.00 | |
| | | இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் | 100,000.00 | |
| | | ஜெ. சே. ஜோன் கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகம் | 835.00 | |
| | | மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை | 200.00 | |
| | | லங்கா நிலக்கரி நிறுவனம் (பிரைவேட்) லிமிடெட் | 49,500.00 | |
| | | வரை. வியாபார முகாமைத்துவத் தேசிய பாடசாலை | 8,600.00 | |
| | | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 65,695.85 | |
| | | நோர்த் சீ லிமிடெட் | 38.63 | |
| | | நெல் சந்தைப்படுத்தல் சபை | 374.50 | |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 147,102.33 | |

| தொ. இல | வங்கி/ நிறுவனத்தின் பெயர் | நிறுவனத்தின் பெயர் | ரூபா.மில் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் | 93.00 | |
| | | சிறி லங்கன்ஸ் எயார்லைன்ஸ் லிமிடெட் | 1,513.80 | |
| | | அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனம் | 1,126.81 | |
| | | அரச பொறியியல் கூட்டுத்தாபனம் | 2,400.00 | 382,769.92 |
| 4 | சீனா அபிவிருத்தி வங்கி | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 49,958.61 | 49,958.61 |
| 5 | சீனா நெஷனல் கெமிகல் எஞ்சினியரிங் இல.14 கன்ஸ்ரக்ஷன் கம். லிமிடெட் | இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் | 13,253.32 | 13,253.32 |
| 6 | வர்த்தக வங்கி | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 968.36 | |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 4,755.93 | 5,724.29 |
| 7 | டீ.பீ. ட்றஸ்டீஸ் (ஹாங்கங்) லிமிடெட் | .ஸ்ரீ லங்கா எயார்லைன்ஸ் லிமிடெட் | 52,983.00 | 52,983.00 |
| 8 | டீ எப் சீ சீ வங்கி | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 6,026.24 | |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 5,896.51 | 11,922.75 |
| 9 | சீனா எக்சிம் வங்கி | இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு | 26,841.19 | 26,841.19 |
| 10 | இந்தியா எக்சிம் வங்கி | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 77,718.49 | 77,718.49 |
| 11 | ஹட்டன் நெஷனல் வங்கி | விமான நியை, விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் | 4,000.00 | |
| | | இலங்கை மின்சார சபை | 3,725.21 | |
| | | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 15,146.76 | |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 20,133.15 | 43,005.13 |
| 12 | ஹொங்கொங் என்ட் ஷங்காய் பேங்கின் கொ லிமிடெட் | விமான நியை, விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் | 13,363.21 | 13,363.21 |
| 13 | இன்டஸ்ரியல் என்ட் கொமர்ஷியல் பெங் ஒப் சைனா | இலங்கை மின்சார சபை | 12,707.56 | 12,707.56 |
| 14 | ஐ.என்.ஜீ. வங்கி, என்.வீ. ஒப் நெதர்லாந்து | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 27,025.72 | 27,025.72 |
| 15 | யப்பான் இன்டநெஷனல் கோபரேஷன் ஏஜன்சி (JICA) | விமான நியை, விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் | 144,412.02 | 144,412.02 |
| 16 | தேசிய அபிவிருத்தி வங்கி | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 21,380.43 | |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 6,299.21 | 27,679.63 |
| 17 | தேசிய சேமிப்பு வங்கி | இலங்கை மின்சார சபை | 5,000.00 | |
| | | ஜெ. சே. ஜோன் கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகம் | 40,229.29 | |
| | | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 32,710.61 | |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 114,415.66 | |
| | | இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் | 3,500.00 | |
| | | டெக்னோ பார்க் அபிவிருத்தி கம்பெனி பிரைவேட் லிமிடெட் | 750.00 | |
| | | நகர அபிவிருத்தி அதிகார சபை | 2,770.00 | 199,375.56 |

| தொ. இல | வங்கி/ நிறுவனத்தின் பெயர் | நிறுவனத்தின் பெயர் | ரூபா.மில் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 18 | மக்கள் வங்கி | இலங்கை மின்சார சபை | 15,333.33 | |
| | | இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் | 2,338.82 | |
| | | வரை. இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் | 21,771.61 | |
| | | லங்கா சதோச லிமிடெட் | 2,241.00 | |
| | | தேசிய கடதாசி கூட்டுத்தாபனம் | 140.00 | |
| | | தேசிய நீர் வழுங்கல், வடிகாலமைப்பு சபை | 7,048.13 | |
| | | நெல் சந்தைப்படுத்தல் சபை | 760.75 | |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 56,916.46 | |
| | | இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் | 100.00 | |
| | | .ஸ்ரீ லங்கா எயார்லைன்ஸ் லிமிடெட் | 14,335.02 | |
| | | அரச அச்சு கூட்டுத்தாபனம் | 1,165.00 | |
| | | டெக்னோ பாரக் அபிவிருத்திக் கம்பனி (பிரவைட்) லிமிடெட் | 750.00 | 122,900.12 |
| 19 | சம்பத் வ்ங்கி | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 14,500.00 | 14,500.00 |
| 20 | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் | 3,633.12 | 3,633.12 |
| 21 | இலங்கை சேமிப்பு வங்கி | நோர்த் சீ லிமிடெட் | 60.00 | 60.00 |
| 22 | யுனி க்ரடிட் பேன்ங் ஆஸ்திரியா ஏஜீ | தேசிய நீர் வழுங்கல், வடிகாலமைப்பு சபை | 16,485.47 | 16,485.47 |
| 23 | இன்டர்நஷனல் எயார் ட்ரான்ஸ்போட் எஸோசியேஷன் (IATA) | சிறி லங்கன்ஸ் எயார்லைன்ஸ் லிமிடெட் | 3,512.02 | 3,512.02 |
| 24 | இந்திய ரிசர்வ் வங்கி | இலங்கை மத்திய வங்கி | 787,608.95 | 787,608.95 |
| | **மொத்தம்** | | **2,228,178.88** | **2,228,178.88** |

*மூலம் : திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களம்*

# அத்தியாயம் - 03

# அரசுடைமை வணிகத் தொழில்முயற்சி நிறுவனங்களின் செயலாற்றுகை

### 3.1 மேன்நோக்கு

2022 ஆம் ஆண்டில் செலவு பிரதிபலிப்பு மின்சார கட்டண சீரமைப்பை அறிமுகப்படுத்தியமை, எரிபொருள் விலை சூத்திரத்தை செயல்படுத்தியமை, தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கிய அரசுடைமைத் தொழில் முயற்சிகளின் ஐந்தொகையினை மறுசீரமைத்தமை உள்ளிட்ட அரசாங்கத்தால் செயல்படுத்தப்பட்ட அரசுடமைத் தொழில் முயற்சி சீர்திருத்தங்களுடன் ரூபாயின் மதிப்பு உயர்வு காரணமாகவும், அரசுடமைத் தொழில் முயற்சிகள் துறையானது 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் தொடர்ந்து வலுவான செயல்திறனைப் பதிவு செய்தது அதன்படி, முக்கியமான 52 அரசுடமைத் தொழில் முயற்சிகள், 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் பதிவு செய்யப்பட்ட மொத்த இலாபமான ரூபா 144 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் மொத்த இலாபமாக ரூபா 185.9 பில்லியனை பதிவு செய்துள்ளன.

நிர்வாக கட்டமைப்பை முழுமையாக விருத்தி செய்தல், விலை கண்டறிதலை மேம்படுத்தல், போட்டித்தன்மை, நிதி அபாயங்களை நடுத்தரமான காலப்பகுதியிலிருந்து நீண்ட காலமாக குறைத்தல் என்பவை அடங்களாக மின்சாரத் துறையின் பரந்த தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக இலங்கை மின்சாரச் சட்டமூலம் 2024 ஆண்டு ஜூன் மாதம் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதனிடையே, 2024 ஆண்டு மே மாதம் 08 ஆம் திகதி ஆர்.எம் பார்க்ஸ் நிறுவனம் அதன் செயல்பாடுகளை கீழ்நிலை பெற்றோலிய சந்தையில் தொடங்கியது. இது இலங்கையில் பெற்றோலியத்தின் சில்லறை வர்த்தக சந்தையில் போட்டியினை அதிகரிப்பதுடன் பாவனையாளர்களின் நலன் கருதி சேவை நியமங்களையும் மேம்படுத்தும்.

ஆளுகை, இடர் முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை தொடர்பில் அரசுடமை வங்கிகளுக்கான முக்கிய சீர்திருத்தங்களுக்கு அமைச்சரவை 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அனுமதி வழங்கியது. 2024 ஆண்டின் நவம்பர் மாத இறுதிக்குள் பெரும்பான்மையாக சுயாதீன இயக்குநர்களை கொண்டிருக்கும் வகையில், இயக்குநர்களின் எண்ணிக்கையை 9 இற்கு குறையாததும் 13 இனை விஞ்சாததுமான எண்ணிக்கையில் அதிகரித்தல், சுயாதீன இயக்குநர்களைத் தேர்ந்தெடுப்பதில் ஒரு புதிய வெளிப்படையான நடைமுறை, சுயாதீன பணிப்பாளர்களுக்கான சந்தை போட்டி மட்ட இழப்பீடு வழங்குதல், பொது திறைசேரியின் பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் கீழ் ஒரு சிறப்பு பிரிவை அரசுடமைத் தொழில் முயற்சிகளை மேற்பார்வையிடுவதற்காக ஸ்தாபித்தல், அரசுடமைத் தொழில் முயற்சிகளின் இடர் முகாமை கட்டமைப்பை வலுப்படுத்துதல் ஆகிய சீர்திருத்தங்கள் உள்ளடங்களான ஏனைய சீர்திருத்தங்கள் இதில் அடங்கும். ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் ஐந்தொகையினை மேலும் வலுப்படுத்தி அதன்மூலம் முதலீட்டாளரொருவரைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில், 2024 ஆண்டு மார்ச் மாதத்தில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தினது 210 மில்லியன் அமெரிக்க டொலர் மற்றும் ரூபா 31.4 பில்லியன் (ஏறத்தாழ 100 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு சமமான) திறைசேரியின் உத்தரவாதக் கடனை அரசாங்க ஐந்தொகைக்கு மாற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதுள்ளதுடன், இது ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தினை தனியார் மயப்படுத்தும் செயல்முறையை எளிதாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் அரசுடமைத் தொழில் முயற்சிகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட அறவீடுகள் மற்றும் பங்கிலாபமானது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 9.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில், ரூபா 13.2 பில்லியனாக அதிகரித்துள்ளது.

### 3.2 பிரதான பத்து அரசுடமை வணிகத் தொழில் முயற்சி நிறுவனங்கள் பற்றிய மீளாய்வு

#### இலங்கை வங்கி

இலங்கை வங்கியின் சொத்து அடித்தளமானது 2023 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 4,412 பில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத இறுதியில் ரூபா 4,281 பில்லியனாக, 3.0 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், வங்கியின் வைப்புத்தளமானது ரூபா 3,744 பில்லியனாக பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 3,882 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 3.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 5.07 சதவீதமாக பதிவுசெய்யப்பட்டிருந்த வங்கியின் மூன்றாம் கட்ட கடன் விகிதம், 2024 ஆண்டு ஏப்ரல் மாத இறுதியில் 5.89 சதவீதமாக சிறிதளவு மோசமடைந்துள்ளது. இலங்கை வங்கி 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வரிக்கு முந்திய இலாபமாக ரூபா 10.5 பில்லியனைப் பதிவு செய்துள்ளதுடன், இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவான ரூபா 3.4 பில்லியன் வரிக்கு முந்திய இலாபத்துடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பாகும்.

#### மக்கள் வங்கி

இலங்கை வங்கியின் சொத்து அடித்தளமானது 2023 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 3,038 பில்லியனிலிருந்து 2024 ஆண்டின் ஏப்ரல் மாத இறுதியில் ரூபா 3,129 பில்லியனாக 3.0 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் ஏப்ரல்

மாத வங்கியின் வைப்புத்தளமானது ரூபா 2,740 பில்லியனாக பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 2,653 பில்லியனுடன் ஒப்பிடுகையில், சிறிய அதிகரிப்பையும் காட்டுகிறது. 2023 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 1,709 பில்லியனாக பதிவு செய்யப்பட்டிருந்த கடன்களும் முற்கொடுப்பனவுகளும், 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியில் ரூபா 1,744 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், இது 2.0 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 4.7 சதவீதமாக பதிவுசெய்யப்பட்டிருந்த வங்கியின் மூன்றாம் கட்ட கடன் விகிதம், 2024 ஆண்டு ஏப்ரல் மாத இறுதியில் 4.6 சதவீதமாக ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளது. மக்கள் வங்கி 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வரிக்கு முந்திய இலாபமாக ரூபா 9.3 பில்லியனைப் பதிவு செய்துள்ளதுடன், இது 2023ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவான ரூபா 6.3 பில்லியன் வரிக்கு முந்திய இலாபத்துடன் ஒப்பிடுகையில் 47.6 சதவீத அதிகரிப்பாகவும் காணப்படுகிறது.

### தேசிய சேமிப்பு வங்கி

தேசிய சேமிப்பு வங்கியின் சொத்து அடித்தளமானது, 2024 ஆண்டின் ஏப்ரல் மாத இறுதியில் ரூபா 1,681 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், இது 2023 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 1,687 பில்லியனுடன் ஒப்பிடுகையில் சிறிய வீழ்ச்சியாகும். 2024 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத வங்கியின் வைப்புத்தளமானது ரூபா 1,493 பில்லியனாக பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், இது 2023 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 1,483 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 0.6 சதவீத அதிகரிப்பாகவும் அமைந்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 527 பில்லியனாக பதிவு செய்யப்பட்டிருந்த கடன்களும் முற்கொடுப்பனவுகளும், 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியில் ரூபா 516 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், இது 2.1 சதவீத வீழ்ச்சியை காட்டுகிறது. தேசிய சேமிப்பு வங்கியானது, 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வரிக்கு முந்திய இலாபமாக ரூபா 8,851 மில்லியனைப் பதிவு செய்துள்ளதுடன், இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ரூபா 332 மில்லியன் நட்டமாக பதிவு செய்யப்பட்டிருந்தது.

### இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

2011 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க காப்புறுதித் தொழில் (திருத்த) சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு இணங்க, வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் ஆயுள் மற்றும் பொது காப்புறுதி வர்த்தக பணிகளை இந்த கூட்டுத்தாபனத்தின் பூரண துணை நிறுவனங்களான ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கோர்பரேஷன் லை.்.ப் லிமிடெட் மற்றும் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கோர்பரேஷன் ஜெனரல் லிமிடெட் என்றவாறு இரண்டாக பிரிக்கும் பணி 2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள் நிறைவடைந்தது.

2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில், லங்கா இன்சூரன்ஸ் கோர்பரேஷன் லை.்.ப் லிமிடெட் ரூபா 8,697 மில்லியனை வரிக்கு முந்திய இலாபமாகப் பதிவு செய்துள்ளதுடன், ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கோர்பரேஷன் ஜெனரல் லிமிடெட் ரூபா 1,116 மில்லியனை வரிக்கு முந்திய இலாபமாகப் பதிவு செய்துள்ளது. அரசுடமைத் தொழில்முயற்சிகளை மறுசீரமைக்கும் அரசாங்கத்தின் கொள்கைக்கிணங்க, அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பங்குகளை விற்பனை செய்யும் செயன்முறை தகைமைகளுக்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டதுடன் கேள்வி மனுதாரர்களின் தெரிவுப்பட்டியலும் நிறைவு செய்யப்படவுள்ளது.

### இலங்கை மின்சார சபை

2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மின்சார விற்பனை வருமானம் ரூபா 216.9 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 180.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 20 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இதற்கான முக்கிய காரணங்களாக செலவு பிரதிபலிப்பு கட்டணத்தை செயல்படுத்தியமை மற்றும் 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் மின்சாரத்திற்கான தேவை 9 சதவீதம் அதிகரித்து 4,937 GWh ஆக இருந்துடன், இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 4,516 GWh ஆகவும் காணப்பட்டது. சாதகமான வானிலை நிலவியமை மற்றும் 2023 ஆம் ஆண்டில் நாணய மதிப்பு உயர்வின் விளைவாக நிலக்கரி விலை குறைவடைந்தமை ஆகியவற்றின் காரணமாக, இலங்கை மின்சார சபையின் நேரடி மின் உற்பத்தி செலவு 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 113.4 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 160.2 பில்லியனுடன் ஒப்பிடும் போது 29 சதவீதத்தால் கணிசமாக குறைவடைந்துள்ளது. இதன் விளைவாக, இலங்கை மின்சார சபை 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 68.9 பில்லியன் மொத்த இலாபத்தைப் பதிவு செய்ததுடன், இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 8.6 பில்லியன் மொத்த நட்டத்தினை பதிவு செய்திருந்தது. வரையறுக்கப்பட்ட அதன் துணை நிறுவனமான லங்கா டிரான்ஸ்.்.போர்மர்ஸ் லிமிடெட்டின் பங்குகளை விற்பனை செய்வதன் மூலம் கிடைத்த ரூபா 26 பில்லியன் இலாபத்திலிருந்து நன்மையடைந்தன் விளைவாக, இலங்கை மின்சாரசபை 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வரிக்கு முந்திய தேறிய இலாபமாக ரூபா 90.7 பில்லியனைப் பதிவு செய்துள்ளதுடன், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 29.8 பில்லியன் தேறிய நட்டத்தினை பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், உற்பத்தி கலவை அனல் (நிலக்கரி): நீர்மின்: பாரம்பரியமற்ற மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் காற்று: அனல் (எரிபொருள்) என்பவை 36:30:15:18 எனும் விகிதத்தில் சாதகமாக மாறியதுடன் இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 40:24:15:21 என்பதாக பதிவு செய்யப்பட்டிருந்தது. இதற்கமைவாக, விற்பனைப் புள்ளியில் அலகொன்றுக்கான செலவினம், 2023 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட கி.வோ. ஒன்றுக்கான 47.44 ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2024 இன் முதல் நான்கு மாதங்களில் கி.வோ. ஒன்றுக்கு ரூபா 32.37 ஆக குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது.

2023 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 79.2 பில்லியனாக பதிவு செய்யப்பட்டிருந்த இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன மின்வலு கொள்வனவாளர்களுக்கான இலங்கை மின்சார

சபையின் நிலுவையிலுள்ள கடன் பொறுப்புக்கள், 2024 ஏப்ரல் இறுதியில் 67 சதவீதத்தால் குறைவடைந்து ரூபா 26.8 பில்லியன் ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், 2023 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 263.6 பில்லியனாக பதிவு செய்யப்பட்டிருந்த நிலுவையிலுள்ள கடன் பொறுப்புக்கள், 2024 ஏப்ரல் இறுதியில் 1.2 சதவீதத்தால் குறைவடைந்து ரூபா 260.4 பில்லியன் ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சர்வதேச சந்தையில் பீப்பாய்க்கு 77 அமெரிக்க டொலராக காணப்பட்ட கச்சா எண்ணெயின் சராசரி இறக்குமதி விலையானது 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியில் 89 அமெரிக்க டாலராக அதிகரித்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் பெற்றோலியம் மற்றும் பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதியானது 648.71 மில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்பட்ட அதேவேளை, 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 828.4 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது.

சந்தையில் புதிய போட்டியாளர்களின் நுழைவு காரணமாக எண்ணெய் அளவுகளில் வீழ்ச்சிக்கு ஏற்ப இறக்குமதி செலவுகளில் ஏற்பட்ட குறைவானது, 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கான விற்பனைச் செலவானது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 390.1 பில்லியனுடன் ஒப்பிடும் போது 13.5 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 337.4 பில்லியனாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதன் விளைவாக, 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 466.8 பில்லியனாக பதிவுசெய்யப்பட்டிருந்த பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் வருமானம் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 389.1 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளதுள்ளதுடன், இது 16.6 சதவீதமான குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை காட்டுகிறது. எனவே, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இலாபமானது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 43.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 13.6 பில்லியனாக 68.7 வீதத்தால் குறைவடைந்துள்ளது.

விலை சூத்திரத்தை மீண்டும் அறிமுகப்படுத்தியமை உட்பட எரிசக்தித் துறையில் செயல்படுத்தப்பட்ட கொள்கை சீர்திருத்தங்கள் காரணமாக, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2023 ஆம் ஆண்டு முதல் அதன் இலாப வேகத்தைத் தொடர முடிந்ததுடன், இதன்விளைவாக, 2023 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 181.2 பில்லியனாக பதிவுசெய்யப்பட்ட கூட்டுத்தாபனத்தின் வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியில் 15.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து ரூபா 153 பில்லியனாக பதிவுசெய்திருக்கிறது. மேலும், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் இலங்கை வங்கிக்கு எந்தவொரு பொறுப்பையும் செலுத்தவில்லையென்பதுடன் தேசிய ஈரானிய எண்ணெய் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய தொகை 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியில் 201 மில்லியன் அமெரிக்க டொலர்களாக குறைக்கப்பட்டது.

### ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடெட்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் நிதிக் கட்டுப்பாடுகளின் தாக்கம் அதன் தொழிற்பாட்டில் ஏற்பட்ட இடையூறுகளில் அண்மைக்காலமாக தெளிவாக வெளிப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் நிதிக் கட்டுப்பாடுகள் விமான நிறுவனத்தின் தொடர்ச்சியை உறுதிப்படுத்த பங்கு மூலதனத்தை தொடர்ந்து செலுத்துவதை சாத்தியமற்றதாக்குகின்றன. இக்குறிப்பான சூழ்நிலையில், முதலீட்டாளர்களிடமிருந்து ஒரு புதிய நிதி உட்செலுத்தலை எளிதாக்கும் வகையிலும், விமான நிறுவனத்தின் நிதி நிலைமைகள் மீண்டும் நிலையானதாக மாறுவதற்கு உதவும் வகையிலும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தினை தனியார் மயமாக்க அரசாங்கம் முடிவு செய்தது. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை தனியார் மயமாக்கல் தொடர்பான பரிவர்த்தனை ஆலோசனைகளை வழங்கும் பொறுப்பு சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. விலைமனுக் கோரலுக்கான அழைப்பு அல்லது தகுதிகளுக்கான கோரிக்கைகளுக்கான அழைப்பு 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வெளியிடப்பட்டதுடன், விண்ணப்பிப்பதற்கான கால எல்லை பல முறை நீட்டிக்கப்பட வேண்டியிருந்தமையும் குறிப்பித்தக்கது. அத்துடன் அந்த கால எல்லை 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதியுடன் முடிவடைந்தது. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்குள்ள கடன் சுமையுடன் முதலீட்டாளர்களை ஈர்ப்பதிலுள்ள சிரமத்தைக் கருத்திற்கொண்ட அரசாங்கம், பொதுத் திறைசேரியினால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட 310 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உள்நாட்டு கடன்களை அரசாங்கத்திற்கு மாற்றுவதற்கு தீர்மானித்தது. இதன் மூலம், விலைமனுதாரர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆறு தகுதிகளுக்கான கோரிக்கைகள் (RFQs) தற்போது மதிப்பாய்வு செய்யப்படுகின்றன.

தேசிய விமான சேவையினைப் பாதுகாப்பதற்கு 2024 இன் முதல் நான்கு மாதங்களில் காணப்பட்ட காசுப்பாய்ச்சல் நெருக்கடிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு ரூபா 5 பில்லியன் பங்கினை விநியோகித்ததன் மூலம் அரசாங்கம் உதவியது.

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிதியளிப்பு நெருக்கடியான சவால் காணப்பட்ட போதிலும் 2023/24 அரசிறை வருடத்தில் ரூபா 333.6 பில்லியனை மொத்த வருமானமாக பெற்றது. இது 2022/23 இல் காணப்பட்ட ரூபா 365.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 8.6 சதவீத வீழ்ச்சியாகும். எவ்வாறாயினும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 2023/24 இல் வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 7.3 பில்லியனைப் பதிவாக்கியது. இது 2022/23 இல் 73.3 பில்லியன் நட்டத்தினைப் பதிவாக்கியது. இதற்குப் பிரதான காரணம் 2022/23 இல் ரூபா 25.6 பில்லியன் செலாவணி நட்டம் 2023/24 இல் ரூபா 0.5 பில்லியன் செலாவணி பெறுகையொன்றுக்கு மாற்றப்பட்டதாகும்.

### தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது நாட்டில் குழாய் நீர் மற்றும் பாதுகாப்பான குடிநீர் விநியோகத்தை முறையே 62.0 சதவீதம் மற்றும் 97.7 சதவீதமாக 2024 ஆண்டின் ஏப்ரல் மாத இறுதியில்

அதிகரித்துள்ளது. இது 2023 ஆம் ஆண்டின் இறுதியில் முறையே 60.7 சதவீதம் மற்றும் 96.4 சதவீதமாக காணப்பட்டிருந்தது.

2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், 60,000 புதிய இணைப்புக்களை சேர்த்ததன் மூலம் 2024 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத இறுதியில் மொத்த இணைப்புக்களின் எண்ணிக்கை 3.06 மில்லியனாக அதிகரித்துள்ளது. நீர் வழங்கலுக்கான புதிய தீரவைத் திருத்தத்தை அமுல்படுத்தியதன் மூலம் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 28.5 பில்லியன் வருமானத்தைப் பதிவு செய்துள்ளதுடன், இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 16.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 71.7 சதவீத அதிகரிப்பாகும். அதேவேளை, 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 9.2 பில்லியனாக பதிவுசெய்யப்பட்ட, விற்பனை செலவானது, மின்சாரக் கட்டணம் மற்றும் ஏனைய பொருள் செலவு என்பவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக, 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 9.8 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 10.1 பில்லியனாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இருப்பினும், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட மொத்த இலாபமான ரூபா 7.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் சபையானது ரூபா 18.3 பில்லியன் மொத்த இலாபத்தைப் பதிவுசெய்துள்ளது. இதன் விளைவாக, 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் சபையானது ரூபா 10.1 பில்லியன் நிகர இலாபத்தைப் பதிவு செய்ததுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 2.8 பில்லியன் நிகர இலாபம் பதிவு செய்யப்பட்டிருந்தது.

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது, 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 276 மில்லியன் கன மீட்டர் நீரை பகிர்ந்தளித்துள்ளதுடன், இது 2023 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 263 மில்லியன் கன மீட்டராக பதிவு செய்யப்பட்டிருந்தது. மதிப்பாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியினது நீர் விற்பனை 208 மில்லியன் கன மீட்டராக பதிவாகியுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியினது நீர் விற்பனையானது 196 மில்லியன் கன மீட்டராக பதிவு செய்யப்பட்டிருந்தது. மேலும், கடந்த வருடத்தில் 25.4 சதவீதமாக காணப்பட்ட வருமானம் தராத நீரின் அளவானது, மதிப்பாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில் 24.4 சதவீதமாக பதிவுசெய்யப்பட்டுள்ளமையானது வருமானம் தராத நீர் முந்தைய ஆண்டை விட குறைவடைந்து வரும் போக்கைக் காட்டியுள்ளது.

### இலங்கை துறைமுக அதிகார சபை

இலங்கை துறைமுக அதிகார சபையின் பரபரப்பான துறைமுகமான கொழும்பு துறைமுகமானது சர்வதேச மற்றும் கடல் வர்த்தகத்தில் மிக முக்கிய பாத்திரத்தை வகிக்கிறது. தற்போதுள்ள பாரிய அபிவிருத்தி திட்டங்களான கொழும்பு மேற்கு சர்வதேச முனையம் மற்றும் கிழக்கு கொள்கலன் முனையம் ஆகியவற்றின் தொழிற்பாடுகள், அதிநவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதனூடாக செயல்பாடுகளுக்கான தரத்தை உயரச் செய்வதுடன், நடுத்தர தவணைக்கால குறியீட்டின் மதிப்பீடுகளை மேம்படுத்துமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை துறைமுக அதிகார சபையின் கொள்கலன்களின் அளவு, 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் காணப்பட்ட அளவுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 35 சதவீத அதிகரிப்பை அடைந்ததுள்ளது. செங்கடல் நெருக்கடி மற்றும் அதன் தாக்கங்கள் உள்ளிட்ட பல்வேறு காரணிகளால், 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 837,052 TEU களாக அதிகரித்துள்ளதுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டின் இதே கால கட்டத்தில் 619,934 TEU களாக பதிவு செய்யப்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், இலங்கை துறைமுக அதிகார சபையின் கப்பல் பரிமாற்ற கொள்ளளவானது, 2023 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் காணப்பட்டதனைவிட 36 சதவீத அதிகரிப்புடன் 748,813 TEU களாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த அதிகரிப்பு கொழும்பு துறைமுகத்தின் ஒட்டுமொத்த கப்பல் பரிமாற்ற கொள்ளளவின் அதிகரிப்புக்கு அளவின் ஒட்டுமொத்த உயர்வுக்கு பங்களித்ததுடன், இது 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 2,275,207 TEU க்களை எட்டியுள்ள அதேவேளை, இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 20 சதவீதம் அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் இலங்கை துறைமுக அதிகார சபையின் மொத்த தொழிற்பாட்டு வருமானமானது ரூபா 25.4 பில்லியனாக அதிகரித்துள்ளதுடன், இதில் 45 சதவீத வருமானமான ரூபா 11.6 பில்லியன் ஸ்டீவ்டோரிங் மூலமாகவும், 27 சதவீத வருமானமான ரூபா 6.8 பில்லியன் கப்பல் திசைவழிகாட்டுதல் மூலமாகவும், 12 சதவீதம் வருமானமான ரூபா 3.0 பில்லியன் கப்பல் துறை கையாளுகை மூலமாகவும் கிடைத்துள்ளது.

இலங்கை துறைமுக அதிகார சபையானது 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 13.7 பில்லியன் மொத்த இலாபத்தைப் பதிவு செய்துள்ளதுடன் இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 12.1 பில்லியனாக காணப்பட்டது. நிர்வாகச் செலவினம் 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 4.0 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 34.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இதற்கான பிரதான காரணமாக, 2024 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதல் கூட்டு ஒப்பந்தம் திருத்தப்பட்டதால் ஏற்பட்ட சம்பளச் செலவு அதிகரிப்பினைக் குறிப்பிட முடியும். தொழிற்பாட்டு வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக, 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் இலங்கை துறைமுக அதிகார சபை வரிக்கு முந்திய இலாபமாக ரூபா 13.6 பில்லியனைப் பதிவு செய்துள்ளதுடன், இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 11.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 18.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

### இலங்கை வரையறுக்கப்பட்ட (தனியார்) விமான நிலைய, விமானப் போக்குவரத்து சேவை

அரசாங்கத்தின் கடன் நிறுத்த முடிவுடன் 2022 ஆம் ஆண்டில் டெர்மினல் 2 பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் முனையம் விரிவாக்கத் திட்டம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து, விமான நிலைய

மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) லிமிடெட் நிர்வாகம் ஜப்பானிய ஒப்பந்தக்காரரால் பகுதியளவில் செய்து முடிக்கப்பட்ட துணை கட்டமைப்பு பணிகளை இறுதி செய்வதற்கான திட்டத்தை வகுத்தது. ஆரம்ப திட்டத்திற்கான ஆலோசகரின் நேரடி மேற்பார்வையின் கீழ் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) லிமிடெட் ஆனது தனது நிதியைப் பயன்படுத்தி உள்ளூர் கட்டுமான ஒப்பந்தக்காரர் மூலம் மீதமுள்ள பணிகளை முடிப்பதை இந்த திட்டம் கொண்டுள்ளது. விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் நிறுவனமானது, ஏற்கனவே இலங்கையின் பிரதான விமான நிலையத்தின் தற்போதைய கொள்ளளவை மிகைத்துள்ளமையினால் இந்த திட்டத்தை நிறைவு செய்வது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் நிறுவனமானது, மொத்த வருமானமாக ரூபா 14,543 மில்லியனை எட்டியுள்ளதுடன், இதில் வான் வழிசார்ந்த வருமானம் ஊடாக ரூபா 2,697 மில்லியனையும், வான்வழி சாராத வருமானம் ஊடாக ரூபா 11,794 மில்லியனையும், ஏனைய வருமானங்கள் ஊடாக ரூபா 51 மில்லியனையும் பதிவு செய்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மொத்த செலவினம் ரூபா 8,405 மில்லியனாக பதிவாகியுள்ளதுடன், இதில் 55 சதவீதம் பணியாளர் செலவினை பிரதிபலிப்பதுடன் இது ரூபா 4,642 மில்லியனாக அமைந்துள்ளதுடன் 25 சதவீதம் தேய்மான செலவுகளைக் குறிக்கிறது. 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் நிறுவனமானது வரிக்கு முந்தைய இலாபமாக ரூபா 12,049 மில்லியனைப் பதிவு செய்துள்ளதுடன், இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்டிருந்த ரூபா 11,624 மில்லியனுடன் ஒப்பிடும்போது 3.6 சதவீத அதிகரிப்பாகும்.

2023 டிசம்பரில் நடைமுறைப்படுத்தப்பட்ட விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்களுக்கான சம்பள அதிகரிப்பைத் தொடர்ந்து, விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் நிறுவனத்தின் ஏனைய ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்புக்கு பொதுத் திறைசேரி 2024 ஆம் ஆண்டில் அனுமதி அளித்துள்ளது.

**அட்டவணை 3.1 : பிரதான அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் மறுசீரமைப்பு / முக்கிய முன்னெடுப்புகள்**

| நிறுவனம் | மறுசீரமைப்பு / முக்கிய முன்னெடுப்புக்கள் |
|---|---|
| **அரசுடமை வங்கிகள்** | • கடன் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் கண்காணிப்பு, சேகரிப்புகள் என்பவற்றை விருத்தி செய்தல்.<br>• வளர்ந்து வரும் ஒழுங்குமுறை அமைப்புகளுடன் இற்றைப்படுத்திக் கொள்ளல், தேவையான மாற்றங்களைச் செயல்படுத்தல், வெளிப்படையான அறிக்கையிடல் நடைமுறைகளைப் பேணல்.<br>• தொழிற்பாட்டு செயல்திறனை மேம்படுத்த டிஜிட்டல் தொழில்நுட்பங்களை பின்பற்றுதல், வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தல், வீச்செல்லையை விரிவுபடுத்தல்.<br>• தற்போதுள்ள வாடிக்கையாளர்களுக்கு உதவவும் புதிய வாடிக்கையாளர்களை ஈர்க்கவும் புதிய தயாரிப்புகளை உருவாக்குங்கள்.<br>• பின்தங்கிய மக்களுக்கு நிதிச் சேவைகளை விரிவுபடுத்துதல் மற்றும் நிதி உள்ளடக்கத்தை ஊக்குவித்தல்.<br>• அரசுடமை வங்கிகளை சந்தையில் மிகவும் போட்டித்தன்மை மிக்கதாக்கும் நோக்கில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட நிர்வாக மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ செயற்பாடுகளை பலப்படுத்தல். |
| **ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடெட்** | • லங்கன் ஏயார்லைன்ஸ் லிமிடெட் நிறுவனத்தை தனியார்மயமாக்குவதற்கான தகுதிகளுக்கான கோரிக்கை முன்மொழிவு<br>• அரசாங்கத்தினால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட 310 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கடன்களை அரசாங்கத்தின் ஐந்தொகைக்கு மாற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.<br>• தொழிற்படு மூலதன பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்காக ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு ரூபா 5 பில்லியன் பெறுமதியான பங்கு உட்செலுத்தப்பட்டுள்ளது. |
| **இலங்கை மின்சார சபை** | • நிறுவனத்தின் உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் விநியோக பிரிவுகளுக்கு இடையில் அதிக தன்னுரிமை மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும், இலங்கை மின்சார சபையை பல பகுதிகளாக பிரிக்கும் நிலைப்பாட்டைக் கொண்ட இலங்கை மின்சாரச் சட்டமூலம் 2024 ஆண்டு ஜுன் மாதம் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. |
| **இலங்கை துறைமுக அதிகார சபை** | • அடுத்த 3 ஆண்டுகளுக்கு ஊழியர்களுடன் கூட்டு பேரம் பேசல் ஒப்பந்தம் அங்கீகரிக்கப்பட்டு பிரதான செயலாற்றுகைச் சுட்டிகளை அடைவதற்கான நிபந்தனைகளுடன் கைச்சாத்திடப்பட்டது. |
| **விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட்** | • விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் நிறுவனத்தின் சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்வதற்காக, 2024 ஆம் ஆண்டில் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள் தவிர்ந்த பிற ஊழியர்களுக்கான ஒரு தனி சம்பள கட்டமைப்பு அங்கீகரிக்கப்பட்டது.<br>• சுற்றுலாத்துறையின் விரிவடைந்து வரும் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் விமான நிலையத்தின் செயல்திறனை மேம்படுத்த அவசியமான ஆளணியினருக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |

*மூலம்: அரச உடமை தொழில்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்*

அட்டவணை 3.2 : பிரதான 52 அரச தொழில் முயற்சிகளின் இலாபமீட்டும் தன்மை

ரூபா. மில்லியன்

| | தொழில்முயற்சிகள் | 2022 | 2023(ஆ) | 2024.04.30(ஆ) |
|---|---|---|---|---|
| 1 | இலங்கை வங்கி | 30,977 | 40,342 | 10,504 |
| 2 | மக்கள் வங்கி | 21,338 | 15,345 | 9,268 |
| 3 | தேசிய சேமிப்பு வங்கி | 4,510 | 6,117 | 8,851 |
| 4 | அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி | -89 | -1,043 | 41 |
| 5 | எச்டிஎப்சி வங்கி | 303 | 2,465 | 94* |
| 6 | பிரதேச அபிவிருத்தி வங்கி | 359 | 1,388 | -412 |
| 7 | ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை | 43,428 | 64,959 | 5,433 |
| 8 | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 23,494 | 29,272 | 1,659*** |
| 9 | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 8,530 | 12,547 | 6,214 |
| 10 | இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 711 | 1,056 | 320 |
| 11 | விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபை | 2,651 | 1,043 | 282 |
| 12 | இலங்கை மின்சார சபை | -298,189 | 61,236 | 90,724 |
| 13 | இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | -617,588 | 120,346 | 13,639 |
| 14 | இலங்கை துறைமுக அதிகாரசபை | 57,027 | 40,359 | 13,565 |
| 15 | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை | -2,701 | 5,286 | 10,162 |
| 16 | விமான நிலையங்கள் விமானப் போக்குவரத்துச் சேவைகள் லிமிரற் | 6,434 | 33,640 | 12,049 |
| 17 | ஸ்ரீ லங்கா எயார்லைன்ஸ் லிமிடட்(அ) | -73,264 | 1,124 | 795** |
| 18 | இலங்கை போக்குவரத்துச் சபை | 1,421 | 2,189 | -996 |
| 19 | அரச பொறியியல் கூட்டுத்தபானம் | -1,269 | -2,458 | -235* |
| 20 | மத்திய பொறியியல் ஆலோசனைச் சேவைப் பணியகம் | 69 | 748 | 60 |
| 21 | அரச அபிவிருத்தி, நிர்மாணக் கூட்டுத்தாபனம் | 27 | -579 | 3 |
| 22 | மில்கோ (பிரைவெட்) லிமிடட் | -392 | -216 | -250 |
| 23 | தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை | 133 | -122 | -147 |
| 24 | இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் | 19 | -92 | 6 |
| 25 | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை | 20 | -156 | 14 |
| 26 | குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி | 511 | 534 | 89 |
| 27 | சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி | 514 | 303 | 91 |
| 28 | களுபோவிட்டியானை தேயிலைத் தொழிற்சாலைக் கம்பனி | 346 | 94 | 46 |
| 29 | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் | 17 | -5 | 3 |
| 30 | இலங்கை கனிம மணல் கம்பனி | 6,160 | 4,050 | -232 |
| 31 | இலங்கை பொஸ்பேட் கம்பனி(அ) | 61 | 347 | 167 |
| 32 | கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிடட் | 57 | 38 | 13 |
| 33 | அபிவிருத்தி லொத்தர் சபை | 3,267 | 3,516 | 1,421 |
| 34 | தேசிய லொத்தர் சபை | 1,390 | 844 | 502 |
| 35 | அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் | 1,586 | 2,522 | 718 |
| 36 | இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருள் கூட்டுத்தபானம் | -26 | 218 | 193 |
| 37 | அரச மருந்துப்பொருட் கூட்டுத்தாபனம் | -2,285 | 1,272 | 659 |
| 38 | ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை | 247 | 304 | 386 |
| 39 | சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு | -370 | -205 | -4 |
| 40 | இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் | -541 | -342 | -29 |
| 41 | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் | -235 | -532 | 7 |
| 42 | இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை | -99 | 65 | 58 |
| 43 | அரசாங்க மரக் கூட்டுத்தபானம் | 1,016 | 1,274 | 135 |
| 44 | அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபன வர்த்தகக் கம்பனி(அ) | 735 | 901 | 527 |
| 45 | லங்கா சதொச நிறுவனம் | -687 | 115 | 202 |
| 46 | அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் | -380 | 2,794 | -210 |
| 47 | இலங்கைப் கடற்தொழில் கூட்டுத்தாபனம் | -193 | 4 | 0.1 |
| 48 | இலங்கை கடற்தொழில் துறைமுகக் கூட்டுத்தாபனம் | 364 | 637 | 43 |
| 49 | லங்கா உரக் கம்பனி(அ) | 113 | 61 | 37 |
| 50 | கொழும்பு கொமாசல் பெர்டிலைசர் கம்பனி(அ) | 501 | 162 | 42 |
| 51 | ஹொட்டேல் டெவலொப்பர்ஸ் லங்கா பீஎல்சி | -633 | -784 | -71 |
| 52 | லங்கா சீனிக் கம்பனி | 6,045 | 2,828 | -576 |
| | **மொத்தம்** | **-774,560** | **455,811** | **185,861** |

*மூலம்: அரச உடமை தொழில்முயற்சிகள்*

*(அ)மார்ச் 31 நிறைவடைந்த நிதி வருடம் - (அதாவது 2023 2023/2024 இற்கானது)*

*(ஆ)தற்காலிகமானது*

** 2024 சனவரி - மார்ச்*

*** 2024 ஏப்பிரல்*

**** கட்டுப்பாட்டு நிறுவனங்களின் இலாபம் மட்டும்*

அட்டவணை 3.3 : அரச தொழில்முயற்சிகளிலிருந்து அறவீடு/பங்கிலாபம்

ரூபா மில்லியன்

| | 2022 | 2023 | 30.04.2024 அன்றுள்ளவாறு |
|---|---|---|---|
| **அறவீடு** | **22,004** | **60,497** | **11,379** |
| மக்கள் வங்கி | 441 | – | - |
| இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | – | 5,000 | 5,000 |
| இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழு | 13,200 | 23,000 | 2,000 |
| அரசாங்க மரக் கூட்டுத்தபானம் | 320 | 641 | – |
| அரச மருந்தாக்கற் கூட்டுத்தபானம் | 100 | 300 | – |
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 1,608 | 2,000 | 730 |
| புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் | 1,000 | 2,000 | 768 |
| தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை | 35 | 390 | – |
| இலங்கை முதலீட்டுச் சபை | 416 | 533 | – |
| தேசிய லொத்தர் சபை | 361 | 1,000 | 200 |
| இலங்கை தராதரங்கள் நிறுவனம் | 10 | 40 | 13 |
| இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தபானம் | 50 | 620 | 35 |
| இலங்கை சுற்றுலா அபிவிருத்திப் பணியகம் | – | 500 | 500 |
| சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை | 1,000 | 4,000 | – |
| அரச மருந்துப்பொருட் கூட்டுத்தாபனம் | 350 | – | 100 |
| தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் | 290 | 150 | 700 |
| இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் | 1,200 | 7,000 | – |
| தேசிய போக்குவரத்து ஆணைக்குழு | 10 | 300 | 200 |
| இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை | – | 75 | – |
| இலங்கைக் காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி அதிகாரசபை | – | 500 | – |
| இலங்கை துறைமுக அதிகார சபை | 1,015 | 8,066 | – |
| தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபை | 400 | 646 | 687 |
| வீதி அபிவிருத்தி அதிகாரசபை | – | 75 | – |
| காணி சீர்திருத்த ஆணைக்குழு | – | 350 | – |
| கூட்டாதன முகாமைத்துவ அதிகாரசபை | 50 | 200 | – |
| வியாபார முகாமைத்துவ தேசிய நிறுவகம் | 33 | 115 | 85 |
| முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகம் | 90 | 25 | 4 |
| ஏனைய அரச தொழில்முயற்சிகள் | 25 | 2,971 | 357 |
| **பங்கிலாபங்கள்** | **6,087** | **15,204** | **1,856** |
| தேசிய சேமிப்பு வங்கி | 60 | 30 | – |
| இலங்கை வங்கி | 346 | 173 | – |
| மக்கள் வங்கி | 316 | 158 | – |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 1 | – | 2 |
| இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 1,511 | 2,272 | – |
| விமான நிலையங்கள் விமானப் போக்குவரத்துச் சேவைகள் லிமிரற் | 500 | 5,500 | – |
| இலங்கை கனிம மணல் கம்பனி | 759 | 2,500 | – |
| இலங்கை பொஸ்பேட் கம்பனி | 20 | 220 | – |
| லங்கா லேலண்ட் | 13 | 6 | – |
| ரக்ன ஆரக்ஷக லங்கா லிமிட்டட் | – | 125 | 75 |
| மாந்தை உப்புக் கம்பனி (இலங்கை உப்புக் கம்பனி) | – | 120 | – |
| இலங்கை உரக் கூட்டுத்தாபனம் | 15 | 22 | – |
| கொழும்பு வர்த்தக உரக் கம்பனி | 10 | 60 | – |
| பரந்தன் இரசாயனக் கம்பனி | 50 | 305 | 49 |
| அரச வர்த்தகக் கம்பனி | 11 | 150 | – |
| இலங்கை ரெலிகொம் | 1,805 | 223 | – |
| டி லா ரு லங்கா லிமிட்டட் | 313 | – | 1,324 |
| இலங்கை மின்சாரக் கம்பனி லிமிட்டட் | 218 | 697 | – |
| இலங்கை கைத்தொழில் பேட்டைகள் லிமிட்டட் | – | 174 | – |
| சிலோன் அக்ரோ இன்ட்ஸ்ரீஸ் | 24 | 167 | 119 |
| பெருந்தோட்டக் கம்பனிகள் | 95 | 554 | 287 |
| இலங்கை சீனிக் கம்பனி லிமிட்டட் | – | 1,597 | – |
| லங்கா திரிபோஷ லிமிட்டட் | 10 | 75 | – |
| ஏனைய அரச தொழில்முயற்சிகள் | 10 | 75 | – |
| **மொத்தம்** | **28,091** | **75,701** | **13,236** |

*மூலம்: அரச தொழில் முயற்சி நிறுவனங்கள் மற்றும் அரச தொழில் முயற்சிகள் திணைக்களம்*

# அத்தியாயம் 4

# வெளிநாட்டு நிதியளிப்பு

### 4.1 மேன்நோக்கு

அரசாங்கத்தின் பணப்புழக்க நடவடிக்கைகளுக்கு கணிசமான வசதியை வழங்கும் வகையில், உத்தியோகபூர்வ கடனாளர் குழு மற்றும் சீனாவின் எக்சிம் வங்கியுடன் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவதன் மூலம், 2024 ஜுன் 26 அன்று இலங்கை தனது இருதரப்பு வெளிநாட்டு கடனாளிகளுடன் ஒப்பந்தங்களை இறுதி செய்தது. 2023 ஆம் ஆண்டில் உள்நாட்டுக் கடன் உகப்பாக்கம் நிறைவடைந்த நிலையில், சர்வதேச நாட்டு முறி வைத்திருப்பவர்கள் உட்பட வணிகக் கடன் வழங்குநர்களுடன் விரைவில் ஒரு உடன்பாட்டை எட்டுவதற்கு அரசாங்கம் எதிர்பார்ப்பதோடு இது தொடர்பான விவாதங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி (IMF-EFF) திட்டத்தின் இரண்டாவது மீளாய்வு 2024 ஜுன் 12 அன்று நிறைவடைந்ததுடன், இலங்கை மூன்றாவது தவணையான சுமார் ஐ.அ.டொ. 336 மில்லியனைப் பெற்றது. இது 2023 மார்ச் முதல் வழங்கப்பட்ட மொத்த நிதி உதவியை 1 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் கொண்டு வந்தது. மேலும், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உட்பட ஏனைய பலதரப்பு முகவர்களிடமிருந்து நிலையான கொள்கை ஆதரவையும் ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளின் உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவிகளையும் இலங்கை பெற்று வருகிறது.

### 4.2 வெளிநாட்டு நிதியுதவி உறுதிமொழிகள்

2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வெளிநாட்டு அபிவிருத்தி பங்காளிகள் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்களுடன் 8 உடன்படிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் அரசாங்கம் 296.8 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை வெளிநாட்டு நிதியுதவியாகப் பெற்றுள்ளது. அதில் கடனாகப் பெறப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 250.0 மில்லியனும் உள்ளடங்கும். இது ஆசிய அபிவிருத்தி வங்கியின் சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்கள் நிதித் திட்டத்திற்கு ஐ.அ.டொ. 100.00 மில்லியன் மற்றும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தின் நிதித் துறை பாதுகாப்பு வலையமைப்பினை வலுப்படுத்தும் திட்டத்திற்கு ஐ.அ.டொ. 150.0 மில்லியன் இனையும் உள்ளடக்குகிறது.

கடன் ஒப்பந்தங்களைத் தவிர, மதிப்பாய்வு செய்யப்பட்ட காலத்தில் ஜப்பான் அரசு மற்றும் அவுஸ்திரேலியா அரசாங்கத்துடன் மேற்கொண்ட ஆறு மானிய ஒப்பந்தங்கள் மூலம் அதிகாரப்பூர்வ அபிவிருத்தி உதவி மூலம் மொத்தம் ஐ.அ.டொ. 46.8 மில்லியன் பெறப்பட்டது.

2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 150.0 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் அல்லது மொத்த உறுதிப்பாடுகளில் 51 சதவிகிதம் மனிதாபிமான உதவித் துறைக்காக அதிக அளவு அர்ப்பணிப்பு செய்யப்பட்டது.

### 4.3 வெளிநாட்டு நிதி வழங்கல் மற்றும் பயன்பாடு

2024 ஜனவரி 1 முதல் ஏப்ரல் 30 வரையிலான காலகட்டத்தில் மொத்த வெளிநாட்டு நிதி வழங்கல் 160.4 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாகும். இதில், 152.7 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் கடனாகவும், 7.7 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் மானியங்கள் மூலமாகவும் வழங்கப்பட்டுள்ளன.

பதிவாகிய வழங்கல்களில் பெரும்பாலானவை உலக வங்கியுடன் கையெழுத்திடப்பட்ட கடன் ஒப்பந்தங்களிலிருந்து பெறப்பட்டவை, இது மொத்த வழங்கல்களில் கிட்டத்தட்ட 41 சதவிகிதம் ஆகும், அதைத் தொடர்ந்து ஆசிய அபிவிருத்தி வங்கி (40 சதவிகிதம்) மற்றும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (10 சதவிகிதம்) ஆகும்.

மொத்த வருவாயில் 18 சதவீதம் வீதிகள் மற்றும் பாலங்கள் துறையிலும், அதைத் தொடர்ந்து நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் துறையில் 17 சதவீதமும், நீர்ப்பாசனத் துறையில் 12 சதவீதமும், தரைப் போக்குவரத்துத் துறையில் 12 சதவீதமும் பயன்படுத்தப்பட்டது.

**அட்டவணை 4.1: 2024 சனவரி 01 முதல் ஏப்ரல் 30 வரையான வெளிநாட்டு கடன்கள் மற்றும் மானியம் வழங்கல்கள்**


| அபிவிருத்தி பங்காளி/கடன் வழங்கும் நிறுவனங்கள் | வழங்கல்கள்* (ஐஅடொ மில்லியன்) | | |
|---|---|---|---|
| | கடன் | மானியம் | மொத்தம் |
| **இருதரப்பு** | **3.4** | **1.3** | **4.7** |
| சவுதி நிதியம் | 2.5 | - | 2.5 |
| நெதர்லாந்து | 0.8 | | 0.8 |
| ஜப்பான் | - | 1.3 | 1.3 |
| **பல்தரப்பு** | **149.3** | **6.4** | **155.7** |
| உலக வங்கி | 61.1 | 6.0 | 67.1 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 64.8 | 0.4 | 65.2 |
| ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி | 15.9 | - | 15.9 |
| ஒபெக் நிதியம் | 5.9 | - | 5.9 |
| விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் | 1.6 | - | 1.6 |
| **மொத்தம்** | **152.7** | **7.7** | **160.4** |

*மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*

*வெவ்வேறு நாணயமாற்றில் செய்யப்பட்ட பணப்பரிமாற்றங்களை ஐஅடொ ஆக மாற்ற, ஒவ்வொரு விநியோகத் திகதியிலும் நிலவும் மாற்று விகிதங்கள் பயன்படுத்தப்படுகின்றன.*


** தற்காலிகமானது*

**வரைபு 4.1 2024 சனவரி 01 முதல் ஏப்ரல் 30 வரையான அபிவிருத்தி பங்காளர் மற்றும் கடன் முகவரினால் உறுதி செய்யப்பட்டு வழங்கப்படாத இருப்பு (ஐ.அ.டொ. மில்லியன்)**




*மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*

**வரைபு 4.2 2024 சனவரி 01 முதல் ஏப்ரல் 30 வரையான பிரதான பொருளாதார துறையின்படி உறுதி செய்யப்பட்டு வழங்கப்படாத இருப்பு (ஐ.அ.டொ. மில்லியன்)**




*மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*


***பிற = கல்வி மற்றும் பயிற்சி, மீன்பிடி, சுகாதாரம் மற்றும் சமூக நலன், மனிதாபிமான உதவி, காணி அபிவிருத்தி, பெருந்தோட்டம், மின்சாரம் மற்றும் எரிசக்தி, கிராமிய அபிவிருத்தி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்*

## 4.4 உறுதியளிக்கப்பட்டு வழங்கப்படாத இருப்பு [1]

2024 ஏப்ரல் 30, நிலவரப்படி, அடுத்த 3 - 5 ஆண்டுகளில் பயன்படுத்தப்படும் ஏற்கனவே உறுதியளிக்கப்பட்ட கடன்களிலிருந்து கிடைக்கும் வெளிநாட்டு நிதியுதவியின் மொத்த வழங்கப்படாத இருப்பு 5.8 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் ஆகும். மீதியின் பெரும்பகுதி சீனாவுடனான கருத்திட்டங்களில் இருந்து வழங்கப்பட உள்ளது, மற்றவை முறையே ஜப்பான், ஆசிய அபிவிருத்தி வங்கி, இந்தியா மற்றும் உலக வங்கி ஆகியவற்றிலிருந்து வழங்கப்படுகின்றன.


உறுதியளிக்கப்பட்ட வழங்கப்படாத இருப்பின் கிட்டத்தட்ட 21 சதவீதம் வீதிகள் மற்றும் பாலங்கள் துறையிலும், 15 சதவீதம் நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் துறையிலும், 11 சதவீதம் தரைப் போக்குவரத்துத் துறையிலும் பயன்படுத்தப்பட உள்ளது

**வரைபு 4.3 - 2024 ஏப்ரல் 30 நிலவரப்படி பாரிய அபிவிருத்தி பங்காளிகளால் மேற்கொண்ட அபிவிருத்தி கருத்திட்டங்ளும் நிகழ்ச்சித்திட்டங்களும் பற்றிய உறுதிசெய்யப்பட்டு வழங்கப்படாத இருப்பு* (ஐ.அ.டொ. மில்லியன்)**




*மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*
** தற்காலிகமானது*
*** பிற = அவுஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம், ஹங்கேரி, குவைத், பாகிஸ்தான், கொரியா, ஜேர்மனி, டென்மார்க், ஸ்பெயின், ஐரோப்பிய முதலீட்டு வங்கி, ஐஎப்ஏடி*

**வரைபு 4.4: 2024 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு துறைரீதியான அபிவிருத்தி கருத்திட்டங்ளும் நிகழ்ச்சித்திட்டங்களும் பற்றிய உறுதிசெய்யப்பட்டு வழங்கப்படாத இருப்பு (ஐ.அ.டொ. மில்லியன்)**




*மூலம்:: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*
** தற்காலிகமானது*

[1] இடைக்கால படுகடன் நிறுத்தல் கொள்கையினால் பாதிக்கப்பட்டது

## 4.5 வெளிநாட்டு கடன் இருப்பு மற்றும் வெளிநாட்டு கடன் சேவை கொடுப்பனவுகள்

2024 ஏப்ரல் முடிவில் மத்திய அரசின் மொத்த வெளிநாட்டுக் கடன் ஐ.அ.டொ. 36.9 பில்லியனாக இருந்தது.[2]

2024 சனவரி 1 முதல் ஏப்ரல் 30 வரையிலான மொத்தக் படுகடன் மீள் கொடுப்பனவுகள்[3] ஐ.அ.டொ. 248.7 மில்லியனாக இருந்தது, இதில் ஐ.அ.டொ. 137.6 மில்லியன் முதன்மை தொகையினை திருப்பிச் செலுத்துதலுக்குப் பதிலாகவும், மீதமுள்ள ஐ.அ.டொ. 111.1 மில்லியன்கள் வட்டி செலுத்துவதற்காகவும் இருந்தது.

அரசாங்கத்தால் கடைப்பிடிக்கப்பட்ட இடைக்காலக் கொள்கைக்கு இணங்க, இருதரப்பு மற்றும் வணிகக் கடனாளிகளிடமிருந்து பெறப்பட்ட பாதிக்கப்பட்ட கடன்களின் வெளிநாட்டுக் கடனைச் செலுத்துவது 2022 ஏப்ரல் 12 முதல் இடைக்காலத்திற்கு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, முதன்மை தொகையான ஐ.அ.டொ. 6,020 மில்லியன் மற்றும் வட்டி தொகையாக ஐ.அ.டொ. 2,586 மில்லியன்களும்[4] 2024 ஏப்ரல் இறுதிக்குள் செலுத்தப்படாத கடன் சேவையாக திரட்டப்பட்டுள்ளது.

---

[2] தற்காலிகமானது, மத்திய அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன் நிலுவை மட்டுமே சித்தரிக்கப்படுகிறது.

கடன் நிறுத்தக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து திரட்டப்பட்ட செலுத்தப்படாத மூலதனம் சேர்க்கப்பட்டுள்ளது

திறைசேரி உண்டியல், திறைசேரி முறிகளின் வதிவல்லாத வைப்புகள் சேர்க்கப்படவில்லை.

சர்வதேச நாட்டு முறிகளின் நிலுவைத் தொகை அதன் பங்குகளின் வதிவுள்ள, வதிவற்ற அடிப்படையில் வகைப்படுத்தப்படவில்லை.

[3] படுகடன் மீள் கொடுப்பனவு = மூலதனக் கொடுப்பனவுகள் + வட்டிக் கொடுப்பனவுகள்

[4] மறுசீரமைப்பு விவாதங்களின் போது கடனாளிகளுடன் சமரசம் செய்து கொள்ள வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம், இலங்கை